பக்கங்கள்: இருபத்து நான்கு

# உதயன்

விலை ரூபா 20.00

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 25 வெள்ளிக்கிழமை (08.04.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 133


09 வேம்படிக்கு முதலிடம்


12 பொங்கி எழுந்தனள் பொறுமைத்தாய்


15 மகாஜனா சம்பியன்


19 காங்கிரஸின் தோல்வி; தமிழின் எழுச்சி


20 முரளியைப் பிரிந்து விட்டோம்

## முதல்வரின் பழிவாங்கும் படலம் ஆரம்பம் மாநகர வளாகத்துக்குள் உதயனுக்குத் 'தடா'

யாழ்ப்பாணம், ஏப். 08

யாழ். மாநகரசபையில் இடம்பெற்ற ஊழல் முறைகேடுகளை அம்பலப் படுத்தியதுக்குத் தண்டனையாக உதயன் பத்திரிகையை யாழ். மாநகரசபை வளாகத்துக்குள்ளேயே எடுத்து வரக் கூடாது என்று 'தடா' போட்டுள்ளார் முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா.

மாநகர சபையின் விளம்பரங்கள், அறிவித்தல்கள் என்பவற்றை உதயன் பத்திரிகைக்கு வழங்குவதை இன்று முதல் உடனடியாக நிறுத்துமாறு அதிரடி உத்தரவும் பிறப்பித்துள்ளார் முதல்வர்.

கடந்த 5ஆம் திகதி இடம்பெற்ற கடந்த மாதத்துக்கான கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய இந்த உத்தரவுகள் பிறப்பிக்கப்படுவதாக முதல்வர் யோகேஸ்வரி தனது உத்தரவுகளில் தெரிவித்திருக்கிறார். ஆனால், கடந்த கூட்டத்தில் இது தொடர்பான எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்று எதிர்க் கட்சியினர் கூறுகின்றனர்.

கடந்த கூட்டம் குறித்து செய்தி சேகரிக்கச் சென்ற உதயன் பத்திரிகையாளரை உள்ளே அனுமதிக்கக் கூடாது என்று ஆளும் தரப்பு உறுப்பினர்கள் கூறியதற்கு எதிரணியினரும் பத்திரிகையாளர்களும் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அதனை அடுத்து அந்த முயற்சி கைவிடப்பட்டது.

(23ஆம் பக்கம் பார்க்க)

### உண்மையைச் சொன்னதற்குத் தண்டனை
### கருத்துக்களைக் கருத்துக்களால் எதிர்கொள்ளும் கட்சியின் செயல்

யாழ். மாநகர சபை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கிறது. அதில் ஒரு சிறு கட்சியாக ஈபிடிபி இருந்த போதும் யாழ்ப்பாணத்தில் அதுவே முன்னணியின் பிரதான கட்சி (23ஆம் பக்கம் பார்க்க)

# ஈழ உணர்வை மீளத் தூண்டும் முயற்சியில் புலம்பெயர் தமிழர்

## ஈழத் தமிழர் குறித்த சோனியாவின் கருத்தை ஆராய்கிறது இலங்கை

கொழும்பு, ஏப்.08

இலங்கையில் சம உரிமைகளுடன் தமிழர்களும் தலைநிமிர்ந்து வாழத்தக்க அரசமைப்புத் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும் என இந்திய அழுத்தம் கொடுத்து வருவதாக இந்தியா காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி கூறியிருப்பது தொடர்பாக அரசும் வெளிவிவகார அமைச்சும் ஆராய்ந்து வருகின்றன.

- இவ்வாறு பதில் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாடு நேற்றுக் காலை தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கும்

(23ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றத்தில் நேற்று பிரதமர் ஜெயரத்ன தெரிவிப்பு



கொழும்பு, ஏப்ரல் 08

இராணுவரீதியாகப் புலிகள் ஒழிக்கப்பட்டாலும் புலம்பெயர் தமிழர்களின் ஆதரவுடன் மீண்டும் ஈழ உணர்வைத் தூண்டிவிடும் முயற்சிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன என்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் பிரதமர் டி.எம். ஜெயரத்ன. ஆனாலும் மீண்டும் புலிகள் இயக்கம் எழுச்சி பெறுவதற்கு ஒருபோதும் அனுமதிக்கப்பட மாட்டாது என்றும் அவர் கூறுரைத்தார். அவசரகாலச் சட்டத்தை மீண்டும் ஒரு மாத காலத்துக்கு நீடிப்பதற்கான முக்கிய காரணமாகவே பிரதமர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டம் நேற்று 81 மேலதிக வாக்குகளால் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. ஆதரவாகத் 98 வாக்குகளும் எதிராக 17 வாக்குகளும் அளிக்கப்பட்டன. (23ஆம் பக்கம் பார்க்க)

## மீசாலை பெண் கொலை வழக்கில் மற்றொருவர் கொழும்பில் கைது

தென்மராட்சி, ஏப். 08

மீசாலைப் பகுதியில் கடந்த மாதம் கடத்திக் கொலை செய்யப்பட்ட சாந்தினி வழக்கில் மற்றொரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, வெள்ளவத்தையில் வைத்துப் பொலிஸார் இவரைக் கைது செய்துள்ளனர்.

வழக்கின் பிரதான சந்தேக நபரான சாந்தினியின் முன்னாள் கணவர் குகதாஸனால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த நபரே கைது செய்யப்பட்டவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான சந்தேகநபரின் பெயர் சிவகுமார் பிரசன்னா. அவரைப் பொலிஸார் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தி வெலிக்கடை விளக்க மறியலில் வைத்தனர். பின்னர் அவர் யாழ்ப்

(23ஆம் பக்கம் பார்க்க)

## அரசு - கூட்டமைப்புப் பிரதிநிதிகள் நேரில் வவுனியா சென்று தடுப்பில் உள்ளோர் விவரங்களை சரிபார்த்து வெளியிடுவர்

### முதல் தடவையாக சம்பந்தனும் பேச்சில் பங்கேற்பு

கொழும்பு, ஏப்.8

வவுனியா தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகளின் பெயர் விவரங்களை எதிர்வரும் 16ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வவுனியாவுக்கு நேரில் சென்று பார்வையிடவுள்ளது. பெயர்ப்பட்டியலை கூட்டமைப்பு சரிபார்த்த, பின்னர் அதனை மக்களின் பார்வைக்கு வைப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசதரப்புக்கும் இடையே நேற்று நடைபெற்ற பேச்சின் போது இதற்கான இணக்கம் எட்டப்பட்டது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் அதன் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் உதயனுக்குத் தெரிவித்தார்.

நேற்றைய சந்திப்பில் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தனும் முதல் தடவையாகக்

(24ஆம் பக்கம் பார்க்க)

## றொபேர்ட் ஓ பிளேக் அடுத்த வாரம் வருவார்?

கொழும்பு, ஏப். 08

தெற்கு, மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் றொபேர்ட் ஓ பிளேக் அடுத்த வாரம் இலங்கைக்கான பயணத்தை மேற்கொள்வார் என்று அமெரிக்கத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதேவேளை, இலங்கை அரசு அறிவுறுத்தியதன் பேரிலேயே றொபேட் ஓ பிளேக்கின் பயணம் பிற்போடப்பட்டிருப்பதாக வெளியான தகவல்களை வெளிவிவ

(23ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை மீறல் குற்றச்சாட்டை முற்றாக நிராகரித்தது இலங்கை



கொழும்பு, ஏப்.08

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றிருக்கின்றன எனச் சில நாடுகள் குற்றம் சுமத்துவதை இலங்கை அரசு முற்றாக நிராகரிக்கின்றது என அமைச்சரவைப் பேச்சாளர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாடு நேற்றுக் காலை தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. செய்தியாளர் எழுப்பிய கேள்வி (23ஆம் பக்கம் பார்க்க)

## உதைபந்து போல் பயன்படுத்தாதீர்

### இந்தியாவுக்கு சம்பிக்க

கொழும்பு, ஏப். 08

இந்திய அரசியல் தலைவர்கள் இலங்கையை உதைபந்து போல் பயன்படுத்தக்கூடாது என்று எச்சரிக்கை விடுத்தார் எரிசக்தித்துறை அமைச்சர் சம்பிக்க ரணவக்க. (23ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229941
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் மழை பெய்யும் சாத்தியம் உண்டு.

# லிபியாவுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் செய்தோர் ஐ.நா. சபையில் மௌனிகளாக இருந்தது ஏன்?

## ஐ.தே.கட்சி கேள்வி எழுப்புகின்றது

கொழும்பு,ஏப்.8

லிபியாவுக்கு ஆதரவாக உள்நாட்டில் ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள். ஐக்கிய நாடுகள் சபையில் லிபியாவுக்கு எதிரான பிரேரணை மீது விவாதம் நடைபெற்றபோது ஏன் மௌனிகளானார்கள்?

இப்படி கேள்வி எழுப்பினார் ஐக்கியதேசியக்கட்சியின்நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற அவசரகால சட்டத்தை மேலும் ஒருமாத காலத்துக்கு நீடிப்பது தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில் சட்டம் என்ற ஒன்று இருக்குமானால் ஏன் மக்கள் ஐக்கிய நாடுகள் சபையிடமும் ஏனைய அமைப்புகளிடமும் நீதிகேட்டுச் செல்கிறார்கள்.

ஐக்கிய நாடுகள் சபையில் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் லிபியாவுக்கு எதிராகப்பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட்டது. ஆனால், இலங்கை அதற்கு எதிராக வாய் திறக்கவில்லை. உள்நாட்டில் ஆர்ப்பாட்டம் நடத்தியபோதிலும் வெளிநாடுகளுக்குச் சென்றால் பயந்து மௌனிகளாகின்றனர். வெளிநாட்டுக் கொள்கை அரசிடம் இருக்குமானால், எல்லா இடங்களிலும் பேசியிருக்க வேண்டும்.

மனித உரிமைச் சட்டங்களில் கைச்சாத்திடப்பட்டிருந்தால் அதனைக் கடைப்பிடிக்க வேண்டும். தற்போது அமைதியின்மை ஏற்பட்டுள்ள நாடுகளில் அங்கு மக்கள் ஜனநாயகத்துக்காகவும், ஊடக சுதந்திரத்துக்காகவும் போராட்டங்கள் நடத்துகிறார்கள்.

சர்வதேசம் எழுப்புகின்ற கேள்விகளுக்கு உரிய பதில் அளிக்கப்பட வேண்டும். அதற்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்வதிலோ, சத்தியாக்கிரகம் செய்வதிலோ சர்வதேசத்தில் இலங்கைக்கு எதிர்பார்க்கின்ற சுமிக்ஞை கிடைக்காது. அதனைச் சமாளிப்பதற்கு இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றவர்களை வெளிநாட்டுக்கான தூதர்களாக நியமிப்பதிலும் தீர்வு காண முடியாது. - என்றார் (ஐ-5)

# நெடுந்தீவுக் கடலில் மீட்கப்பட்ட சடலம் இந்திய மீனவருடையதா எனச் சந்தேகம்

யாழ்ப்பாணம், ஏப்.8


நெடுந்தீவுக்கும் நயினாதீவுக்கும் இடைப்பட்ட கடற்பரப்பில் கடற்படையினரால் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்ட சடலம் இந்திய மீனவருடையதாக இருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்.ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ள சடலத்தை ஊர்காவற்றுறை நீதிவான் ஜோய் மகாதேவா நேற்றுப் பார்வையிட்டார்.

சடலத்தை உறவினர்கள் நேரடியாக அடையாளம் காட்டிய பின்னர் பிரேத பரிசோதனை செய்ய வேண்டும் என்றும்- உறவினர்கள் வராதபட்சத்தில் அவர்களுக்கு உரிய அறிவிப்பை விடுத்தபின் பிரேத பரிசோதனை செய்யலாம் என்றும்- நீதிவான் உத்தரவிட்டார்.

குறித்த சடலத்தின் கையில் காணப்பட்ட பச்சை குத்திய அடையாளம், அவர் அணிந்திருந்த சேர்ட், உள்ளாடை, வெள்ளிச்சங்கிலி போன்ற அடையாளங்களை வைத்து இந்தச் சடலம் இந்திய மீனவருடையதாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம், தங்கச்சிமடத்தைச் சேர்ந்த சேவியர் விக்ரர்ஸ் (வயது - 41) என்பவருடைய சடலமாக இருக்கலாம் என இனங்காணப்பட்டுள்ளது.



இவரது சடலத்தில் இரத்தக் கண்டல் காயங்களும் காணப்படுகின்றன. (ஐ-15)

# தும்பளை சிறுவர் இல்லத்தில் இருந்து மேலும் 60 சிறார்கள் வேறிடங்களுக்கு

தும்பளை, உபயகதிர்காமம் சிறுவர் இல்லத்தில் இருந்து மேலும் 60 சிறார்கள் வேறு சிறுவர் இல்லங்களுக்கு நேற்று முன்தினம் மாற்றப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரனின் உத்தரவின் பேரில் சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் இவர்களை வேறு இல்லங்களுக்கு அழைத்துச் சென்றனர். ஏற்கனவே நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட பட்டியலின் பிரகாரம் திருநெல்வேலி கருணாலயத்துக்கு 13 பேரும், உரும்பிராய் கருணை இல்லத்துக்கு 17 பேரும் திருநெல்வேலி முத்துத்தம்பி இல்லத்துக்கு 21 பேரும் வதிரி பரமானந்தா இல்லத்துக்கு 9 பேரும் நேற்று முன்தினம் மாற்றப்பட்டுள்ளனர்.

கடந்த முதலாம்திகதி 26 சிறார்கள் திருநெல்வேலி முத்துத்தம்பி இல்லத்துக்கு மாற்றப்பட்டிருந்தனர். (ஐ-319)

## இன்று மின்தடை

உயரழுத்த மின்மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 5 மணி வரை சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப் பகுதி ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்படும் எனயாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஐ)

# யாழ்.இராணுவத் தளபதியின் மிரட்டலுக்கு நாங்கள் ஒருபோதும் அடிபணிய மாட்டோம்

## சபையில் சுரேஸ் பிரேமச்சந்திரன் சவால்

நாங்கள் ஜனநாயகத்துக்கும் - சமாதானத்துக்கும் எதிரானவர்கள் அல்ல. எமது மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு குரல் கொடுப்பதை அரச விரோத செயல் என்கிறார் இராணுவத் தளபதி மகிந்த ஹத்துருசிங்க.

இராணுவத் தளபதியின் மிரட்டல்களுக்கு நாம் ஒரு போதும் அடிபணியப் போவதில்லை என்று சவால் விடுகிறார் யாழ்.மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

அவசரகாலச் சட்ட நீடிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றிய சுரேஸ் பிரேமச்சந்திரன் மேலும் கூறியதாவது:-

பிரதமர் மாதாமாதம் அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கு ஏதாவது ஒரு காரணத்தைக் கண்டுபிடித்து விடுகின்றார்.

கடந்த மாதம் இந்தியாவில் புலிகள் இயக்கம் மூன்று முகாம்களை நடத்துகின்றது என்று கூறிய பிரதமர் இந்தியாவின் கடும் எதிர்ப்பினால் வருத்தம் தெரிவித்து அறிக்கை விட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்.

இந்த முறை புலிகள் இயக்கம் சர்வதேச வலையமைப்பில் செயற்படுகின்றது. அமெரிக்காவில் இரகசியமாகப் பேச்சுவார்த்தைகளை நடத்தினர். மீண்டும் புலிகளுக்குப் புத்துயிர் ஊட்ட முனைகின்றனர் என்று கூறுகின்றார். எப்படியோ ஒரு காரணம் கண்டுபிடித்து விடுகிறார் பிரதமர்.

குழுக்களின் பிரதித் தலைவர் சந்திரகுமார் கூறுகின்றார். வடக்குக் கிழக்கில் எல்லாம் முடிந்து விட்டது. சுமுகநிலை [illegible] பட்டுள்ளது; கூட்டணியினர் [illegible]பம் விளைவிக்கின்றனர் என்று. அரசிடம் ஒன்று கேட்கின்றேன். யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடங்கள் முடிந்துவிட்டன. இந்த நிலையில் எத்தனை பாடசாலைகள், எத்தனை கல்லூரிகள், எத்தனை நூல்நிலையங்கள் மூடப்பட்டுள்ளன என்பதனையும் எத்தனை பாடசாலைகள் இயங்குகின்றன என்பதையும் இந்த சந்திரகுமார் அறிவாரா?

நாம் ஈ.பி.டி.பியினரைப் போன்று அடிபணிந்து வால் பிடிக்கவும் குடைபிடிக்கவும் வேண்டிய அவசியம் இல்லை. அதற்கான தேவையும் இல்லை.

இராணுவத் தளபதி மகிந்த ஹத்துருசிங்க ''தமிழ் மிரர்'' இணையத்தளத்துக்கு அளித்[illegible] சக்திகள் செயற்பட்டு வருகிறனர். புலம்பெயர்வாழ் தமிழ் அமைப்புகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பின்னணியில் இயங்குகின்றன. சுரேஸ் பிரேமச்சந்திரனும் மாவை சேனாதிராசாவும் இராணுவத்துக்கு எதிராகவே குற்றம் சாட்டிப் போகின்றனர் என்று எம்மை மிரட்டுவது போல் கூறி உள்ளார். ஹத்துருசிங்கவின் மிரட்டல்களுக்கு நாம் ஒரு போதும் அஞ்சப் போவதில்லை.

இன்று யாழ்.குடாநாட்டில் இராணுவப் பிரசன்னம் இன்றி எதுவும் நடைபெற முடியாது. தனிப்பட்ட சொந்த அலுவல்கள், பாடசாலை விளையாட்டு விழாக்கள், இசைக் கழக நிகழ்வுகள், கருத்தரங்குகள் எது என்றாலும் இராணுவம் பிரசன்னமாகி இருக்க வேண்டும் என்று கட்[illegible]யமாக்கப்பட்டுள்ளது.

நாங்கள் ஜனநாயகத்துக்கும் சமாதானத்துக்கும் எதிரானவர்கள் அல்ல. அனுபவமிக்க மூத்த தலைவர் சம்பந்தர் அவர்கள் தலைமையில் கட்டுப்பாட்டுடன் செயல்படுகின்றோம்.

புலிகள் அழிக்கப்பட்டு விட்டால் பிரச்சினைகள் தீர்ந்துவிட்டதாக அர்த்தம் அல்ல. இப்பொழுதுதான் பிரச்சினைகள் பல மடங்காக அதிகரித்துள்ளன.

இந்தப் பிரச்சினைகளுக்கு ஜனநாயக அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை நடத்தித் தீர்வு காணத் தயார் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் அரசுக்கு முதன்முதலில் அறிவித்தது. இந்த உண்மை புரியாத தளபதி ஹத்துருசிங்க எங்களைப் பார்த்து அரச விரோத செயலுக்குத் துணைபோகின்றோம் என்கிறார். அவரின் அறியாமைக்கு வருந்துகின்றேன்- என்றார் சுரேஸ் பிரேமச்சந்திரன். (த-02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# உலகின் காதில் பூச்சுற்றும் பீரிஸின் முயற்சி பலிக்குமா?

இலங்கையில் வாழும் தமிழ் மக்களுடன் நல்லிணக்கத்தைக் காண்பதற்கு எமது அரசாங்கத்துக்குக் கால அவகாசம் தேவை. அந்தக் கால அவகாசத்தை மேற்கு நாடுகள் எமக்கு வழங்கவேண்டும். இவ்வாறு ஒரு கோரிக்கையை அரசாங்கத்தின் சார்பில் விடுத்திருப்பவர் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ்.

இலங்கைத் தமிழர் விவகாரத்துக்கு நியாயமான, ஏற்புடைய தீர்வை வழங்குவதற்கு மன விருப்பம் இன்றி, தாம் நினைக்கும் சில்லறைத் தீர்வு எதனையும் திணித்து விடுவதுதான் இலங்கை அரசின் உள்ளார்ந்த திட்டம்.

ஏற்கனவே - இருபத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் - இந்திய அரசுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ராஜீவ் - கே. ஆர் ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்ட வடக்கு - கிழக்கு இணைந்த மாநில சுயாட்சிக்கான ஏற்பாட்டை நீதிமன்றத்தைச் 'சாட்சி வைத்து' உடைத்தது ஜீ.எல். பீரிஸ் அங்கம் வகிக்கும் இப்போதைய மஹிந்த அரசுதான்.

அதுவும் போதாது என்று, தனக்குள்ள அதீத பெரும்பான்மைப் பலத்தைப் பயன்படுத்தி மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட பொலிஸ் அதிகாரங்களையும், நிர்வாகக் கட்டமைப்புடன் சம்பந்தப்பட்ட அதிகாரங்களையும் அரசமைப்புச் சட்டத்துக்கான பதினெட்டாவது திருத்தச் சட்டத்தைப் பயன்படுத்தி பறித்தெடுத்து - பிடுங்கியெடுத்து - விட்டதும் இந்த அரசுதான்.

.தமிழர்களுக்கு எதிராக எந்த வகையான அரசியல் 'வம்புத்தன' த்தையும் செய்யலாம், அதற்கான அதிகாரங்களும் சிங்கள மக்களின் ஆணையும் உண்டு என்ற பெரும் 'கெப்போர்த்' தனத்துடனேயே இன்றைய இலங்கை அரசும் செயற்பட்டு வருகிறது.

தமிழர்களின் பறிக்கபட்ட உரிமைகளை வழங்குவதற்கு மனங்கொள்ளாமல், அவர்களை இந்த நாட்டின் இரண்டாந்தரப் பிரசைகளாக அடக்கி ஒடுக்கி வைத்திருக்கவே இந்த நாட்டு அரசுகள் விரும்பின; இன்றைய அரசும் விரும்புகிறது. ஆனால் வெளி உலகத்துக்கு - சர்வதேசங் களுக்கு - அவர்களுக்குரிய எல்லா உரிமைகளும் வழங்கப்பட்டு விட்டதாக வாய்ப் பந்தல் கட்டிக்காட்டுகிறது.

இந்த நாட்டை ஆண்ட அத்தனை சிங்கள அரசுகளும், காலத்துக்குக் காலம் தமிழர்களின் உரிமைகளைப் பறிப்பதிலும் அவர்களை அரசியல் ஒட்டாண்டிகள் ஆக்குவதிலுமே காலத்தைக் ஓட்டின. இந்த வரிசையில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸூம் பலே அரசியல் கில்லாடி!

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய இரண்டு பிரதான கட்சிகளும் மாறி மாறி ஆட்சிக்கு வரும் போது, ஆளும் தரப்பாக எந்தக் கட்சி வருகிறதோ அதில் தொற்றிக் கொள்வது அவரது " நல்ல பழக்கம் ". சந்திரிகா குமாரதுங்காவின் முதலாவது ஜனாதிபதி பதவிக்காலம் தொட்டு சிறுசிறு இடைவெளிகளுடன் அந்தந்த வேளை அரசுகளுடன் ஏதோ ஓர் அமைச்சராகப் பதவி வகித்து வருகிறார் அவர். பேராசிரியர் என்பதால் இது அவருக்குரிய சிறப்புக் கெட்டித்தனம் போலும்!

ஜனாதிபதி மஹிந்த அரசில் இரண்டு தடைவைகளும் அவர் வெளிவிவகார அமைச்சராகவே பதவி வகிக்கின்றார். அரசாங்கத்துக்குச் சர்வதேச மட்டத்தில் சங்கடங்களும், திக்குமுக்காடல்களும் வரும்போது அவற்றை முதலில் கையாளும் பொறுப்பு அவரிடமே வழங்கப்படுகிறது.

இலங்கை அரசாங்கத்தின் மீது சுமத்தப்பட்டுள்ள போர்க் குற்றங்கள் தொடர்பாக தமக்கு ஆலோசனை வழங்குவதற்கு ஐ.நா செயலாளர் நாயகம் நிபுணர்குழுவை நியமிக்காமல் தடுப்பதற்கு இலங்கை அரசின் சார்பில் நியூயோர்க்குக்கு - அமெரிக்காவுக்கு - பேராசிரியர் பீரிஸ் சென்றிருந்தார். ஆனால் அவரது முனைப்புகள், அது சம்பந்தமான சந்திப்புகள், முயற்சிகள் தோல்வி அடைந்திருந்தன. கடந்த வருடம் ஜுலை மாதத்தில் இது நடைபெற்றிருந்தது.

கடந்த வருட இறுதியில் - டிசெம்பர் மாதத்தில் -

இலங்கை அரசு தனது நாட்டில் மனித உரிமைகள் நிலவரத்தை முன்னேற்ற வேண்டும். வன்னியில் நடைபெற்றதாக குற்றம் சுமத்தப்படும் போர்க் குற்றங்கள் குறித்து அது விசாரணைகளை நடத்த வேண்டும் என்று பிரிட்டன் (வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹக் ஊடாக) வலியுறுத்தியது. அந்த சூட்டைத் தணிக்கவும் அமைச்சர் ஜீ.எல். பீரிஸே அனுப்பி வைக்கப்பட்டார்.

ஆனால் அதிலும் அவர் தோல்வி கண்டார். அதன் விளைவு பிரிட்டனுக்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அங்குள்ள ஒக்ஸ்போர்ட் யூனியனில் உரையாற்ற முடியாமல் திரும்பி வந்ததும்-

அதன் எதிர் விளைவாக பிரிட்டனின் பாதுகாப்பு அமைச்சர் லியம் பொக்ஸ் கொழும்பு வந்து, லக்ஷ்மன் கதிர்காமர் நினைவுப் பேருரையை நிகழ்த்தாமல் ரத்துச் செய்தமையும் - குறிப்பிட்டு கூறிக்கொள்ளத்தக்கவை. அது இரண்டு நாடுகளிலும் பெரும் உணர்வலைகளையும் உண்டாக்கியது.

இம் முறை-

தமிழ் மக்களுடன் நல்லிணக்கம் காண்பதற்கு தமது அரசுக்கு கால அவகாசம் தருமாறு மேற்கு நாடுகளிடம் கேட்டிருக்கிறார் அமைச்சர் பீரிஸ். அவர் தமது இந்த முயற்சியில் வெற்றி பெறுவாரா என்பது பொறுத்திருந்து பார்க்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

மனித உரிமைகள் விவகாரம் மற்றும் இறுதிப் போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறுதல் தொடர்பில் எதிர்காலத்தில் உண்டாகக் கூடிய முன்னேற்றங்களைப் பொறுத்தே கொழும்பு அரசுடனான ஒத்துழைப்பு அமையும் என்று அமெரிக்க நாடாளுமன்றத்தின் வெளிவிவகாரக் குழுவுக்கு பகிரங்கமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மனித உரிமைகள், ஜனநாயகம் மற்றும் ஆட்சி அதிகாரம் சம்பந்தப்பட்ட விடயங்களிலும் முன்னேற்றம், இன நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கான உறுதியான நடைவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்-

இல்லையேல் இலங்கையுடனான ஒத்துழைப்பும் அதற்கான உதவிகளும் மட்டுப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுவிட்டது. அதே போன்று இரு நாடுகளுக்கும் இடையேயான இராணுவ ரீதியான ஒத்துழைப்பையும் வெட்டிக்குறைக்க வேண்டும் என்று அமெரிக்க நாடாளுமன்றிடம் பரிந்துரைசெய்யப்பட்டிருக்கிறது.

இந்த உறைப்பான விடயத்தின் காரத்தை மணந்து பிடித்தே, இலங்கையில் தமிழ் மக்களுடன் நல்லிணக்கம் காண்பதற்கு மேற்கு நாடுகள் அவகாசம் தர வேண்டும் என்று வெகு பவ்வியமாகவும் விநயத்துடனும் கேட்டிருக்கிறார் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ்.

இலங்கை அரசாங்கம் நியமித்துள்ள கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியான பின்னர் அதன் அடிப்படையில் தமிழ் மக்களுடன் நல்லிணக்கம் காணப்படும் என்று உலக நாடுகளை நம்பவைக்கும் அமைச்சர் பீரிஸின் முயற்சி இது!

இனப்பிரச்சினை, தமிழர்களின் உரிமைகள் குறித்து ஏறெடுத்தும் பார்க்காமல், தமிழர் தரப்புடனான பேச்சுவார்த்தைகளை இழுத்தடித்து வரும் அரசு, நல்லிணக்கம் குறித்து உணர்வுபூர்வமாக எப்போது சிந்திக்கும் என்று எதிர்பார்ப்பது?

தமிழ் மக்களுக்குரிய உரிமைகளைத் தருவதாகக் கடந்த ஆறு தசாப்தங்களாக தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் ஏய்க்காட்டி வரும் பின்னணியில் அமைச்சரின் கூற்றை சர்வதேசம் கருத்தில் எடுக் குமா என்ன? இதுவும் காலத்தை இழுத்தடிக்கும், காதில் பூச்சுற்றும் வழமையான உத்திதான் என்பதனை உலக நாடுகளால் விளங்கிக்கொள்ள முடியாமல், புரிந்து கொள்ள முடியாமலா போகும்...?

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு இம்மாதம் முதல் 5 ஆயிரம் ரூபா ஊக்குவிப்புக் கொடுப்பனவு

## கல்வியமைச்சுச் செயலர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.8

வடமாகாணத்தில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கு இம்மாதம் முதல் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படும்; அது ஊக்குவிப்புக் கொடுப்பனவே அன்றிச் சம்பளம் அல்ல. இதனைச் சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் ஆர்.இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடமாகாணத்தில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்களின் பணியை ஊக்குவிக்கும் பொருட்டு கல்வியமைச்சின் அறிவுறுத்தலுக்கிணங்க ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

மாகாணசபையின் நிதியுதவியுடன் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவாக தலா 5 ஆயிரம் ரூபா இம்மாதம் முதல் வழங்கப்படவுள்ளது.

வருமானம் குறைந்த முன்பள்ளிகளைத் தெரிவுசெய்து அதன் அடிப்படையில் 2 ஆயிரத்து 500 ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்குவதால் முன்பள்ளிகளின் தரம் உயரும் என்று நம்புவதாகவும் அவர் மேலும்தெரிவித்தார். (ஐ-9)

# சங்கானை வர்த்தகரிடம் 4½ லட்சம் ரூபா அபகரிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.8

சங்கானையைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரிடம் நான்கரை லட்சம் ரூபா பணம் கடந்த திங்கட்கிழமை இரவு 9 மணியளவில் திருடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

குறித்த வர்த்தகர் இரவு தனது வர்த்தக நிலையத்தைப் பூட்டிவிட்டு தனது மனைவியுடன்மோட்டார்சைக்கிளில் அருகிலுள்ள ஆலயத்துக்குச் சென்றுள்ளார்.

அதேநேரம் அந்தப் பகுதியில் மின்சாரம் தடைப்பட்டிருந்தது. இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி அவரது மோட்டார் சைக்கிளில் பையுடன் இருந்த நான்கரை லட்சம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-313)

# சமூகச் சீரழிவுகளுக்குத் தீர்வுகாண பாடசாலைகளில் விழிப்புணர்வு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்.8

யாழ். மாவட்டங்களில் இடம்பெற்றுவரும் சமூகச்சீரழிவுகள், பெண்கள் கேலிக்கு உள்ளாதல் போன்றவற்றால் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாகவும் பாடசாலை மட்டத்தில் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன.

யாழ். மாவட்டங்களில் உள்ள அனைத்துப் பாடசாலை மாணவர்களையும் இலக்காகக்கொண்டு விழிப்புணர்வுக் கருத்தரங்குகளைப் பாடசாலைச் சமூகத்தின் ஒத்துழைப்போடு மகளிர் சங்கத்தினரால் நடத்துவதற்கு ஏற்பாடு செய்து வருவதாக மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவசந்திரன் தெரிவித்துள்ளார்.

இளம் பராயத்தினருக்கு ஆன்மீக சிந்தனைகள் ஊடாக ஒழுக்க நெறிகளை எவ்வாறு போதிப்பது, அதன் நன்மைகள் பற்றியும் கருத்தரங்குகளில் எடுத்துக்கூறப்படும்.

அத்தோடு, பாடசாலை மாணவர்கள் கல்வி முன்னேற்றத்தில் தங்களை எவ்வாறு ஈடுபடுத்துவதன் மூலம் அறிவு பூர்வமான சமூகத்தை உருவாக்கலாம் என்ற ஆலோசனைகளும் கருத்தரங்கில் தெரிவிக்கப்படும். (ஐ-311)

# காய்களையா பறிப்பது?

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் அறம் பற்றிய சிந்தனையோடு வாழ வேண்டும். மனம், மொழி, மெய்களால் அறம் புரிவது பற்றிப் பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். கடவுள் நினைவு, நல்ல சிந்தனைகளோடு வாழுதல் மனத்தால் புரியும் அறங்கள். ஆண்டவன் திருநாமங்களை ஓதுதல், பிறருடன் இன்சொல்லில் பேசுதல் என்பன மொழியால் புரியும் அறங்கள். தொண்டு செய்தல் உடலால் புரியும் அறம்.

பிறரோடு இன்சொல்லில் பேசுவதென்பது எப்போதும் ஆற்றவேண்டிய அறம்.

**"யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே"**

என்பது திருமூலர் வாக்கு.

இனிய வார்த்தைகளைப் பேசுவதன் அவசியம் பற்றி வள்ளுவரும் 'இனியவை கூறல்' என ஓர் அதிகாரத்தை அமைத்தளித்தார்.

முகம் மலர்ந்து இன்சொல் உடையவனாக இருக்கப்பெற்றால், மனம் மகிழ்ந்து பொருள் கொடுக்கும் ஈகையை விட நல்லதாகும் என்பது அவரது வாக்கு.

**"அகன் அமர்ந்து ஈதலின் நன்றே முகன் அமர்ந்து**
**இன்சொலன் ஆகப் பெறின்"**

இன்சொல் பேசுதலில் பரம்பரை, சூழல், முதிர்ச்சி, கற்றல் ஆகிய காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

உளவியல் ரீதியான ஆற்றுப்படுத்தல்களில் இன்சொல் பேசுதல் அருமருந்தாக அமையக்கூடியது.

ஞானக்கதிர்

நோயுற்றவருக்கு இன்னுரை வழங்குவதன் ஊடாக நோயின் தீவிரத்தைக் குறைத்துவிடலாம் என்பது அனுபவ அறிவு. நோயாளர்களைக் கண்டு அகநலம் விசாரிப்பதற்கோ உள ஆற்றுப்படுத்தல் வழங்குவதற்கோ இந்து சமயத் தளத்தில் முன்வருவோருடைய எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருக்கின்றது.

பிறரோடு இன்னுரை பகரும் பண்புகளை இளமைப் பருவத்திலிருந்தே வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இன்னாத சொற்களைக் கூறுவோன் இயல்பு எவ்வாறானது என்றால், கனிகள் நிறைந்துள்ள ஒரு மரத்தில் வகையறியாமல் சுவை மிகுந்த கனிகளை விலக்கிக் கசப்புடைய காய்களைப் பறித்து உண்ணுவதற்கு ஒப்பானதாகும் என்கிறார் வள்ளுவர்.

**"இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனியிருப்பக் காய்கவர்ந்து அற்று"**

கனிகளைப் பறிக்கப்போகிறோமா?
காய்களைக் கவரப்போகிறோமா?
இன்சொல் பேசி அறம் வளர்ப்போம்.

ச.லலீசன்,
விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் நிர்வாகப் பணிகள் யாவும் இராணுவ மயப்படுத்தப்பட்டே உள்ளன

## சுட்டிக் காட்டுகிறார் சரவணபவன் எம்.பி.

வடக்கில் சகல விதமான நிர்வாகப் பணிகளும் இராணுவ மயமான பாணியிலேயே இடம்பெறுகின்றன. எந்த ஒரு விடயமானாலும் இராணுவத்தினரோ, ஆளுநரோ தலையிடும் நிலைமை உருவாகியுள்ளது.

அவசர காலச் சட்ட நீடிப்பு தொடர்பான விவாதம் நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்றபோது யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் இவ்வாறு சுட்டிக் காட்டியுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:

கடந்து சென்றுவிட்ட முப்பது வருடங்களின் பின்பு அபிவிருத்திக் காற்று மெல்ல மெல்ல வடக்கை நோக்கி வீச ஆரம்பித்திருக்கின்றது. அடிக்கடி இடம்பெறும் அடிக்கல் நாட்டு விழாக்களும் எப்போதாவது ஒருமுறை இடம்பெறும் திறப்பு விழாக்களும் எமது மக்கள் மத்தியில் சில எதிர்பார்ப்புக்களை உருவாக்கி வருகின்றன.

30 வருடங்கள் அபிவிருத்தியில் பின்னடைந்து போயிருந்த வடக்கு கிழக்குப் பகுதிகள் முறையானதும் மக்களுக்குப் பயன்தரும் வகையிலும் அபிவிருத்தித் திட்டங்களை வேண்டி நிற்பதை எவரும் தவறென்று கூறிவிட முடியாது.

ஆனால் இவ்வாறான திட்டங்கள் நிறைவேறவும் அவற்றின் பலாபலன்கள் மக்களுக்குச் சென்றடையவும் ஓர் அமைதியான, சுமுகமான சூழல் நிலவ வேண்டியது அவசியமாகும்.

அது மட்டுமன்றி அரசுக்கும் மக்களுக்கும் இடையே ஒரு அன்னியோன்னியமான உறவு நிலவ வேண்டும். மக்கள் நாம் எதிர்நோக்கும் பிரச்சனைகளை அச்சமின்றியும் திறந்த மனத்துடனும் தெரிவிக்கக் கூடிய ஒரு சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும். அப்படி ஒரு சூழல் உருவாகாதவாறு தடைக்கற்களாக இடையில் சிலசக்திகள் செயற்பட்டு வருகின்றன.

அரசுக்கும் மக்களுக்குமிடையே உறவுப் பாலமாக விளங்கி வருபவர்கள் அரச அதிகாரிகளே. மக்களின் தேவைகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ற வகையில் திட்டங்களை வகுத்து நிர்வாகத்தை மேற்கொள்வது அவர்களின் பொறுப்பாகும்.

ஆனால் யதார்த்தமோ, அவர்கள் சுதந்திரமாகப் பணியாற்ற முடியாத வகையில் வெளித் தலையீடுகள் மூலம் அவர்கள் மீது அழுத்தம் பிரயோகிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக இன்று வடக்கில் சிவில் நிர்வாகம் இடம்பெறுகின்றதா அல்லது இராணுவ ஆட்சி இடம்பெறுகின்றதா என்று சந்தேகிக்கத் தோன்றுகின்றது.

இந்த நிலையில் வடக்கு மாகாண சபையின் ஆளுநரோ முழு அதிகாரங்களையும் தனது கையில் எடுத்துக்கொண்டு சகலவற்றையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் இயங்க வைக்கிறார். இவர் ஓர் இராணுவ அதிகாரி என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இராணுவ நிர்வாகம் வேறு. சிவில் நிர்வாகம் வேறு.

ஒரு இராணுவ அதிகாரி தனக்கு இடப்படும் கட்டளைக்கு கேள்விக்கு இடமற்ற வகையில் கீழ்ப்படிய வேண்டும். அதேபோல் அவர் இடும் கட்டளைகளையும் கீழ் உள்ளவர்கள் அப்படியே நிறைவேற்ற வேண்டும். ஆனால் சிவில் நிர்வாகம் என்பது அப்படியல்ல எல்லா விவரங்களும் ஆழமான பரிசீலனைக்கு உட்படுத்தப்படும். திறந்த விவரங்கள் மூலம் சரியான தீர்வுகள் எட்டப்படும். நிறைவேற்றப்படும் திட்டங்களும் சிவில் சமூகத்தால் கண்காணிக்கப்படும்.

கிளிநொச்சியில் மக்களுக்கு வழங்குவதற்காக இந்தியா கொடுத்த கூரைத் தகடுகள் மக்களுக்கு வழங்கப்படாமலே அங்கு வைக்கப்பட்டிருந்தன. அது பற்றிக் கேட்ட போது இராணுவம் அனுமதி தரவில்லை எனக் கூறப்பட்டது. ஆனால் அவற்றில் ஒரு பகுதி இராணுவம் தமது தேவைகளுக்கு எடுத்துச் செல்வதாக மக்களால் புகார் கூறப்பட்டது.

காணிகள் தொடர்பான பிரச்சினைகளை நிர்வகிக்கக் காணி அதிகாரிகள் உள்ளனர். அவர்கள் சமூகமளிக்காத சந்தர்ப் பங்களில் பிரதேச செயலர், அரச அதிபர் என உயர் அதிகாரிகள் உள்ளனர்.

ஆனால் கிளிநொச்சியிலோ காணிப்பிரச்சனைகளில் இராணுவ அதிகாரிகள் நேரடியாகவே தலையிடுகின்றனர்.

முன்பு காணி உரிமங்கள் இரத்துச் செய்யப்பட்ட உரிமையாளர்கள் பழைய அனுமதிப் பத்திரங்களைக் காட்டி இராணுவத்தின் உதவியுடன் வேறு நபர்களுக்கு வழங்கப்பட்ட காணிகளை அபகரிக்கின்றனர். அதுமட்டுமன்றி தங்கள் காணிகளை லட்சக்கணக்கான ரூபாவுக்கு விற்றவர்கள் கூட தங்கள் பழைய அனுமதிப் பத்திரங்களைக் காட்டி இராணுவ உதவியுடன் உரிமை கொண்டாடுகின்றார்கள்.

வடக்கில் எந்த ஒரு பொது நிகழ்வு இடம்பெற்றாலும் அதில் இராணுவ அதிகாரிகள் அழைக்கப்பட வேண்டும் என்பது எழுதப்படாத விதிப்பாகிவிட்டது. அப்படி ஒரு விழாவுக்கு அவர்கள் அழைக்கப்படாவிட்டால் அவர்கள் சந்தேகக் கண்கொண்டு பார்க்கப்படும் நிலைமை உருவாகிவிட்டது.



பாரம்பரிய சிறு கைத் தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது அமைச்சுச் சாராத பிரச்சினைகளிலும் தலையிடுவார். அவர் தனக்கு அதிகாரமில்லாத விடயங்களிலும் தலையிட்டு வாக்குறுதிகளை வழங்குவது, தானே தீர்த்து வைக்கப் போவதாகப் பாசாங்கு செய்து பிரச்சினைகளைத் திசை திருப்புவது, சில மக்கள் விரோத நடவடிக்கைகளை நியாயப்படுத்துவது, சிவில் நிர்வாகத்தில் தலையீடு செய்வது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார்.

குறிப்பாக நாவற்குழியில் சிங்கள மக்கள் சட்டவிரோதமாகக் குடியேறியது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக வெளிக்காட்டி வடபகுதி மக்களின் கோபாவேசத்தைத் திசை திருப்பினார்.

அதைத் தீர்க்கும் அதிகாரத்தை ஜனாதிபதி தனக்கே வழங்கிவிட்டதாகவும் கூறினார். அது இன்றுவரை தீர்க்கப்படவில்லை. இப்போதும் சிங்கள மக்கள் அங்கேயே குடியிருக்கின்றனர்.

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி வந்து வலைகளை அறுத்தெறிந்த 136 இந்திய மீனவர்களை இலங்கை மீனவர்கள் பிடித்துப் பொலிசில் ஒப்படைத்த போது கனிமொழிக்கு, தமிழக முதல்வருக்குக் கடிதங்கள் எழுதி ஆரவாரம் செய்தார்.

அதன் பின்பும் இந்திய மீனவர்கள் அத்து மீறலில் ஈடுபடுகின்றனர். அமைச்சரோ எந்தவிதமான உருப்படியான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

(22 ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் நிலையம் தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்க 4 பேர் கொண்ட குழு நியமனம்

யாழ்ப்பாணம், ஏப்.8

வட மாகாணத்தில் சகல மாவட்டங்களிலுமுள்ள அனைத்துச் சிறுவர் பராமரிப்பு நிலையங்களின் அதனது செயற்பாடுகள், தற்போதைய நிலைமைகள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவென ஒவ்வொரு மாவட்டத்துக்கும் நான்கு பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

யாழ். பொது நூலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடல் ஒன்றின் போது இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஆர். விஜயலட்சுமி, அவர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கினார்.

ஒரு மாத காலப் பகுதியினுள் சகல மாவட்டங்களிலும் உள்ள பதிவு செய்யப்பட்ட - பதிவு செய்யப்படாத - சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கும் இந்தக் குழுவினர் சென்று அது தொடர்பான அறிக்கையை வடமாகாண ஆளுநருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

அறிக்கை சமர்ப்பித்த பின்னர் அது தொடர்பாகப் பரிசீலனை செய்து உரிய அளவுப் பிரமாணங்களின்படி இயங்காத, உரிய வசதிகளைக் கொண்டிராத சிறுவர் இல்லங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கலந்துரையாடலில் வடமாகாண நன்னடத்தைத் திணைக்கள உத்தியோகத்தர்கள், யாழ்.மாவட்ட நன்னடத்தைத் திணைக்கள உத்தியோகத்தர்கள், சுகாதாரத் திணைக்கள அலுவலர், தேசிய சிறுவர் பராமரிப்பு அதிகார சபை அலுவலர், வலய முன்பள்ளி உதவிப் பணிப்பாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ-4)

# யாழ். பல்கலைக்கழக பொறியியல் பீடம் விரைவில் கிளிநொச்சியில் அமையும்

## அறிக்கை சமர்ப்பிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப்.8

யாழ். பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தை விரைவில் கிளிநொச்சியில் அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கான அறிக்கை ஒன்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அனுமதிக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக மூதவையும் பேரவையும் இதற்கான தீர்மானங்களை எடுத்துள்ளன என்று யாழ். பல்கலைக்கழகம் அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பொறியியல் பீடம் கிளிநொச்சியில் அமைக்கப்பட வேண்டும் என்று யாழ். பல்கலைக்கழக மூதவையும் பேரவையும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிடம் வேண்டுகோள் விடுத்தன.

இந்த வேண்டுகோள் ஏற்கப்பட்ட நிலையில் நாட்டில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலைகளால் இது தொடர்பான முன்னேற்றச் செயற்பாடுகள் எவையும் இடம்பெறவில்லை.

இந்த நிலையில், தற்போது யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் இதற்கான பணிகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# இளைஞர்களின் தங்குமிடமாக மாறும் கணக்கர் சந்தி பேருந்துத் தரிப்பிடம்

யாழ்ப்பாணம், ஏப்.8

கொழும்புத்துறை கணக்கர் சந்திப் பகுதியில் உள்ள பஸ் தரிப்பிடத்தில் இளைஞர்கள் கூடி நின்று பயணிகளுக்கு இடைஞ்சல் செய்வதால் தரிப்பிடத்தில் நின்று பயணிகள் பேருந்தில் ஏற முடியாதுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனால் பஸ் தரிப்பிடத்துக்கு சற்றுத் தள்ளி நின்று பயணிகள் பஸ்ஸை மறிக்கும்போது பஸ் நிற்காமல் செல்வதால் - பஸ்ஸையும் தவறவிடும் நிலைமையும் ஏற்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

பஸ் தரிப்பிடத்தில் நின்று ஏறாமல் பயணிகள் இடையில் நின்று பஸ்ஸில் ஏறுவதால் பஸ் நடத்துநர்களால், பஸ் தரிப்பிடத்தில் நின்று ஏறுமாறு கூறப்படுவதுடன் அவர்களின் பேச்சுகளுக்கும் ஆளாக வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

இளைஞர் குழு மேற்படி பஸ் தரிப்பிடத்தை ஆக்கிரமித்து அங்கிருந்துகொண்டு காலையும், மாலையும் அரட்டை அடித்து பொழுது போக்குவதற்காகப் பயன்படுத்துவதால் கூடுதலாகப் பெண்கள்தான் பாதிக்கப்படுகின்றனர் எனச் சுட்டிக் காட்டப்படுகிறது.

ஆகவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி, உரிய நடவடிக்கையை எடுத்துப் பயணிகளின் போக்குவரத்துக்கு ஆவண செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றனர். (எ-135)

## விழிப்புணர்வு...



உலக சுகாதார தினத்தை முன்னிட்டு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் (பயிலுநர்கள்) வெளியிடப்பட்ட 'சுகாதார விழிப்புணர்வுக் கையேடு' நேற்றைய தினம் யாழ்.மாவட்டச் செயலகத்தில் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரிடம் கையளிக்கப்பட்டது. (313)

# இலக்கியப் பேரவையின் விருது பெறும் நூல்களின் விவரங்கள் வெளியாகின

யாழ்ப்பாணம், ஏப்.8

இலங்கை இலக்கியப் பேரவையின் 2009 ஆம் ஆண்டுக்கான விருது, சான்றிதழ் பெறும் நூல்களின் விவரம் வெளியிடப்பட்டுள்ளன.

விருதைப் பெறும் நூல்களாவன -

நீ.பி.அருளானந்தத்தின் 'துயரம் சுமப்பவர்கள் ' நாவல், கலாநிதி எஸ்.ஜெபநேசனின் 'இலங்கைத் தமிழர் சிந்தனை வளர்ச்சியில் அமெரிக்கமிஷன்' ஆய்வு, அல் அஸீமத்தின் 'குரல் வழிக் கவிதைகள்', பண்டிதர் ம.ந.கடம் பேஸ்வரனின் 'தீந்தேன்' சிறுவர் இலக்கியம், து.வைத்திலிங்கத்தின் 'ஒருவருக்காக அல்ல' சிறுகதை, சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கத்தின் 'ஞானதீபம்' சமயம், பேராசிரியர் கலாநிதி ம.இரகுநாதனின் 'பண்டைத் தமிழர் பண்பாட்டுத் தடங்கள் ' பல்துறை, அகளங்கனின் 'கங்கையின் மைந்தன்' நாடகம், திக்குவல்லை கமாலின் ' திறந்த கதவு சிறுகதைகள்' மொழிபெயர்ப்பு.

சான்றிதழ் பெறும் நூல்களாவன - ஆரையூர் தாமரையின் 'விற்பனைக்கு ஒரு கற்பனை', ஏ.இக்பாலின் 'இக்பால் கவிதைகள்' ஆகிய கவிதைகள், கே.எம்.எம்.இக்பாலின் 'தாமரையின் ஆட்டம்', ஓ.கே.குணநாதனின் 'குறும்புக்கார ஆமையார்' ஆகிய சிறுவர் இலக்கியங்கள், வதிரி இ.இராஜேஸ்கண்ணனின் 'தொலையும் பொக்கிஷங்கள்', த.கலாமணியின் 'பாட்டுத் திறந்தாலே' ஆகிய சிறுகதைகளும், கௌரி சண்முகலிங்கனின் 'இலங்கையில், கல்வியும் இன உறவும்', ஸ்ரீ பிரசாந்தனின் 'சதாவதானி நா.கதிரவேற்பிள்ளை' ஆகிய பல்துறையும் கலையார்வனின் 'கூத்துக்கள் ஐந்து' நாடகம் ஆகிய நூல்களே விருதுகளும், சான்றிதழ்களும் பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. (ம-313)

# தென்மராட்சி வலய பௌர்ணமிதின விழா

தென்மராட்சி,ஏப்.8

மாகாணக் கல்வித் திணைக்களத்தினரால் மாதாந்தம் வலய ரீதியாக நடத்தப்படும் பௌர்ணமி தினவிழா இந்த மாதம் தென்மராட்சிக் கல்வி வலயத்தில் நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 17ஆம் திகதி பி.ப 2 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன். இந்த நிகழ்வில் தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளின் அதிபர்களையும் தரம் 10 வகுப்புக்கு மேல் கற்கும் மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (ம-207)

# பயிற்றப்படாத ஆசிரியர்களுக்கு தொலைக்கல்வி நிலையம் ஊடாகப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஏப்.8

பட்டதாரிகள் அல்லாத பயிற்றப்படாத ஆசிரியர்களுக்குத் தொலைக்கல்வி நிலையங்கள் ஊடாக ஆசிரியர் பயிற்சி அளிப்பதற்குக் கல்வி அமைச்சு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

ஒருவருட காலம் தொலைக் கல்வி நிலையங்களில் பொதுப் பயிற்சி வழங்கிய பின்னர், அடுத்த வருடம் ஆசிரியர் கலாசாலையில் இணைக்கப்பட்டு பாடத்துறை ரீதியிலான பயிற்சி வழங்கப்படவுள்ளது.

பயிற்சி தொடர்பான விவரங்கள் கடந்த 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அரச சார்புப் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளது.

ஆசிரியர் பயிற்சி பெறாமல் சேவையில் இருக்கும் பட்டதாரிகள் அல்லாத அனைத்து ஆசிரியர்களுக்கும் ஆசிரியர் பயிற்சி வழங்குவதற்குக் கல்வி அமைச்சு விசேட ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

மேற்படி திட்டத்தின்கீழ் ஒருவருடம் தொலைக்கல்வி நிலையங்கள் ஊடாகப் பொதுப் பயிற்சியும் இரண்டாம் வருடம் ஆசிரிய கலாசாலைகளில் நியமனம் பெற்ற பாடரீதியாக விசேட பயிற்சியும் வழங்கப்படவுள்ளன.

ஒருவருடகாலப் பொதுப் பயிற்சியில் கல்வி உளவியல், கல்வித் தத்துவங்கள், கல்வி அளவீடும் மதிப்பீடும் ஆகிய மூன்று பாடங்களும் கற்பிக்கப்படும். அதை அடுத்துவரும் ஒருவருட காலமும் நியமனம் பெற்ற பாடத்துக்கான விசேட பயிற்சி மற்றும் கற்பித்தல் பிரயோகம் என்பன தொடர்பான பயிற்சி அளிக்கப்படும்.

அந்த வகையில், ஒருவருட கால பயிற்சியை நிறைவு செய்த 9ஆயிரம் ஆசிரியர்களும் கடந்த மாதம் 14 ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் உள்ள ஒன்பது ஆசிரிய கலாசாலைகளிலும் இணைப்புச் செய்யப்பட்டு விசேட பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றன. யாழ்.மாவட்டத்தில் மட்டும் 421 பேர் ஆசிரிய உதவியாளர்களாக நியமனம் பெற்று ஆசிரிய பயிற்சியை நிறைவு செய்யாமல் கடமையில் உள்ளனர்.

இவர்களுக்கான தொலைக் கல்வி நிலையம் யாழ்.நகரில் உள்ள கல்லூரி ஒன்றில் அல்லது கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் செயற்படலாம் என்று கூறப்படுகின்றது. விண்ணப்பத்தில் கல்வியைத் தொடர விரும்பும் இடம் தொடர்பாகவும் தகவல் அறிவதற்குரிய விவரங்களும் கோரப்பட்டுள்ளன.

கடந்த வருடம் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் யாழ். மாவட்ட ஆசிரியர் உதவியாளர்களுக்கான பதிவுகள், பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் போக்குவரத்து வசதி இல்லை என்ற காரணத்தால் பயிற்சி நெறி இடைநிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருமையுடன் வாழ்த்துகின்றோம்

யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப்
பதவியேற்றுள்ள
முதுநிலைப் பேராசிரியர்

## வசந்தி அரசரட்ணம்



சாவகச்சேரியில் சரித்திரப்
புயலாயெழுந்து
சர்வ சாதனைகள் சாலவே
புரிந்து முதல் பெண்ணுரு
துணைவேந்தராய்
எம் யாழ்.பல்கலை வரலாறு
தொட்டு மருத்துவ பீடப்
பீடாதிபதியென்ற
பதவியின் முற்றினைத்
தொடராக்கி
தொடர்ந்திடும் பதவி
அதனினும் நீர் வரைந்திடும்
சாதனைகள் வளமாக!
வாழ்த்தி நிற்கும் உள்ளங்கள்
எம் பல்கலை இல்லத்தின்
யன்னல்கள்....

வணிகத்துறை மாணவர் ஒன்றியம்,
(3074)(41,19,24) யாழ்.பல்கலைக்கழகம்,யாழ்ப்பாணம்.



## முதலாம் ஆண்டின் நிறைவின் நினைவாக



இவ்வுலகில்: 15.03.1929
இறை அருகில்: 08.04.2010

இவ்வுலகில்: 04.02.1938
இறை அருகில் 17.05.2009

அமரர்களான
பெனடிற் மகாலிங்கம் மகாலிங்கம் எமிலின்

உயிரோடு இருக்கும்போது என்னிடம் நம்பிக்கை
கொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார்.
யோவான் 11:26

பாசத்தின் உறைவிடமாய் இருந்து
வாழ்க்கை என்றால் இப்படித்தான் என்று
வாழ்ந்து காட்டிய எம் அன்புத் தெய்வங்களே!
எம்மை விட்டுப் பிரிந்தாலும்
நினைவுகள் என்றும் பிரிவதில்லை

குருசு மதவடி, ஆனைக்கோட்டை. (40-23) -பிள்ளைகள்.



## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 01 . 01 . 1930
மறைவு 09 . 03 . 2011

## வீரகத்தி கனகசபை

அன்பிலும் பண்பிலும் உயர்ந்திட்டீர்
உண்மைக்கும் பொறுமைக்கும் உறைவிடமாகிவிட்டீர்
வாழ்க்கைக்கே இலக்கணமாய் வாழ்ந்துவிட்டீர்
உத்தமனாய் தொழிலில் சிறந்திட்டீர்
மனைவி, பிள்ளைகளைச் சிறப்புடனே காத்திட்டீர்
நிறைவான உம் வாழ்வில் ஆறுதல்
அடைந்து, போதும் இவ்வுலக வாழ்வு
என எண்ணி விட்டீரோ?
கண்களால் விடைபெற்று
காலனுடன் சென்றீரோ?
நிகரில்லா நித்தியனே என்றும்
எம் நினைவாக நீர் இருப்பீர்.

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (39-20-50)

ஈரவிழிகளுடன்
உம் குடும்பத்தினர்.


## விஞ்ஞான வினாடி வினாப் போட்டி

யாழ்ப்பாணம்,ஏப்.8

யாழ்.பல்கலைக்கழக விவசாயபீட மாணவர் ஒன்றியத்தினால் குணசிங்கம் கிருபாகர், துரைராஜா ஜெயக்குமார் ஆகியோரின் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் விஞ்ஞான வினாடி வினாப் போட்டி நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிக்கான பரீட்சை நிலையங்கள் யாழ்.வலயத்தினருக்கு விவசாயபீடம் பிரதான மண்டபத்திலும், வலிகாமம் வலயத்தினருக்கு யாழ்.இராமநாதன் கல்லூரியிலும், தீவக வலயத்தினருக்கு வேலணை மத்திய கல்லூரியிலும், தென்மராட்சி வலயத்தினருக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும், வடமராட்சி வலயத்தினருக்கு வட இந்து மகளிர் கல்லூரியிலும், கிளிநொச்சி மாவட்டத்தினருக்கு கிளிநொச்சி மகா வித்தியாலயத்திலும் இடம்பெறும். (ம-313)

## யோகாசன பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.8

யாழ்.சைவ பரிபாலனசபை மண்டபத்தில் ஓம் பதஞ்சலி யோக கேந்திரா நிலையத்தால் நடத்தப்படவுள்ள யோகாசனமும் தளர்வு பயிற்சி வகுப்பும் நாளை சனிக்கிழமை காலை 6.15 மணிக்கு சைவ பரிபாலன சபை மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளன.

இந்தப் பயிற்சி வகுப்புகள் பிரதி வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 6.15 மணி முதல் 7.15 மணி வரை நடைபெறவுள்ளன.

இந்த வகுப்பில் ஆண், பெண் வேறுபாடின்றிக் கலந்து கொள்வதோடு நோயாளர்களுக்கு விஷேட கவனிப்பு வழங்கப்படும் என்று பயிற்சி ஆசிரியர் ந.கணேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ற)

## புதுவருட போட்டிகள்

புதுவருட தினத்தை முன்னிட்டு நெடுந்தீவு கடற்படையினர் விளையாட்டுப் போட்டிகள், இசை நிகழ்வுகளை நடத்தவுள்ளனர்.எதிர்வரும் 20 ஆம் திகதி இந்தப் போட்டிகள் இடம்பெறவுள்ளன. கரபந்தாட்டம், வலைப் பந்தாட்டம், நீச்சல், சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம், மாட்டுவண்டிச் சவாரி போன்ற போட்டிகளும் இசை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. நெடுந்தீவு கடற்படை அதிகாரி சி.ரணசிங்க இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார். (ம-7)

## அபராதம் விதிப்பு

அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிட்ட அளவுக்கு மேலதிகமாக மணல் ஏற்றி வந்த வாகனத்தை பொலிஸார் சோதனைச் சாவடியில் வைத்துப் பிடித்துள்ளனர். வாகனத்தின் சாரதியைக் கடந்த திங்கட்கிழமை பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். வழக்கினை விசாரித்த நீதிவான் வாகனத்தின் சாரதிக்கு 10ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகையை செலுத்தத் தவறின் மூன்று மாத சிறைத்தண்டனையை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (எ-207)


## விற்பனைக்கு

* குபோட்டா (KUBOTA) ஜெனறேற்றர் 5 K.W.
* ELF ஜெனறேற்றர் (10 K.W,தானியங்கி)
* ஐஸ்கிறீம் கோண் மெசின், சோக்கேஸ் என்பன

உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- இல.601, நாவலர் வீதி,
(கைலாசபிள்ளையார் கோயிலடி, நல்லூர்)
தொ.பே:- 0716357267
(39-20-24)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2214 திகதி 06-04-2011

ஆங்கில எழுத்திற்கும் R

வெற்றி எண்கள் 02 41 67 70

போனஸ் இல: 45

ஜக்பொட் பரிசு ரூ. 19,531,350/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 211582 | 20/- | 4,231,640/- |
| 2 இல | 15234 | 100/- | 1,523,400/- |
| 3 இல | 320 | 1,000/- | 320,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8372 | 40/- | 334,880/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 539 | 1,000/- | 539,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 05 | 10,000/- | 50,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 19,531,350/- | - |
| 1 இல + போனஸ் இல | 10151 | 100/- | 1,015,100/- |
| 2 இல + போனஸ் இல | 488 | 500/- | 244,000/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 338 | 200/- | 67,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 14 | 1,500/- | 21,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 9,846,620/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 247059 | | 10,446,620/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| களுத்துறை | 203027228-3-16 |
| வவுனியா | 203029487-2-07 |
| மொனராகலை | 203024178-3-06 |
| கண்டி | 203033744-3-43 |
| கண்டி | 203022510-1-24 |
| கேகாலை | 203023200-6-13 |
| கம்பஹா | 203023911-6-14 |
| கொழும்பு | 203026611-6-23 |
| அம்பாந்தோட்டை | 203018943-1-38 |
| மாத்தறை | 203019230-5-23 |

இந்த சனிக் கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ. 20,108,625/-

பச்சை நிற டிக்கட்டுகள் 2011 ஏப்ரல் 09 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிலேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7


## கண்ணீர் அஞ்சலி



A.N.குழந்தைவேலு
(உத்தரவு பெற்ற நில அளவையாளர்)

எமது சங்கத்தின் நீண்ட நாள் உறுப்பினரான நில அளவையாளர் A.N.குழந்தைவேலு அவர்களின் மறைவையொட்டி எமது சங்கத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

உத்தரவு பெற்ற நில அளவையாளர் சங்கம்,
வடபகுதி
(39-20-50)



## மரண அறிவித்தல்

### செல்வி கந்தையா திருச்செல்வம்



பறாளாய் வீதி, சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி கந்தையா திருச்செல்வம் 07.04.2011 வியாழக்கிழமை சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கந்தையா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தவச்செல்வம் மற்றும் அருட்செல்வம் (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற முக்கண்ணமூர்த்தி (வைத்திய நாதன்) மற்றும் முத்தையா, கணேசமூர்த்தி, சுந்தரமூர்த்தி, பாஸ்கரமூர்த்தி, காலஞ்சென்ற சிவஞானமூர்த்தி மற்றும் முத்தீஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ் சென்ற நாகராஜா மற்றும் தாமோதரலிங்கம் (ஆஸ்திரேலியா), தெய்வராணி, சிவபாக்கியம், கமலாம்பிகை, மங்களேஸ்வரி, தர்மதாசன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.04.2011) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக திருவடிநிலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
சுழிபுரம். (3077)(41,23,24) சகோதரர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 26 வருடங்களின் பின்னர்

# முல்லைத்தீவு குமுழமுனை கிழக்கு மக்கள் சொந்த இடத்தில் இன்று மீள்குடியமர்வு

முல்லைத்தீவு,ஏப்.8

வவுனியா 'மெனிக்பாம்' முகாமில் உள்ள 127 குடும்பங்கள் முல்லைத்தீவு குமுழமுனை கிழக்குப் பகுதியில் இன்று மீள்குடியமர்த்தப்படவுள்ளனர். 26 வருட இடைவெளியின் பின்னர் அவர்கள் சொந்த இடங்களில் மீள்குடியமர்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ.பத்திநாதன் இந்தத் தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

கடந்த 1984 ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் காரணமாக குமுழமுனை கிழக்குப் பகுதியில் உள்ள மக்கள் இடம்பெயர்ந்து வன்னியில் பல்வேறு பகுதிகளில் தங்கியிருந்தனர்.

பின்னர் வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது இராணுவத்தினரிடம் சரணடைந்த இந்த மக்கள் மெனிக்பாம் முகாமில் தங்க வைக்கப்பட்டனர். கடந்த மாதம் மெனிக்பாம் முகாமில் இருந்த 59 குடும்பங்கள் முல்லைத்தீவு கருநாட்டுக்கேணியில் மீள்குடியமர்த்தப்பட்டனர்.

அடுத்த கட்டமாக இன்று வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைபற்று உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள குமுழமுனை கிழக்குப் பகுதியில் 127 குடும்பங்களைச் சேர்ந்த 422 பேர் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

இதேவேளை, குமுழமுனை மத்தி கிராம சேவையாளர் பிரிவில் எதிர்வரும் 20 ஆம் திகதி வவுனியா மெனிக்பாம் முகாமில் உள்ள 105 குடும்பங்களைச் சேர்ந்த 293 பேர் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-9)

# ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்துக்கு புலம்பெயர் பழைய மாணவர் உதவி

முல்லைத்தீவு,ஏப்.8

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தின் பௌதீக வளச் செயற்பாடுகளுக்குப் பழைய மாணவர் சங்க புலம்பெயர் லண்டன் கிளையினர் பல்வேறு உதவிகளை வழங்கி வருவதாகப் பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

யுத்தம் முடிவடைந்து மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்ட பின்னர் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் இந்தப் பாடசாலை மீளவும் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது பாடசாலையின் பௌதீக வளங்கள் யாவும் சிதைக்கப்பட்ட நிலையிலேயே காணப்பட்டன. இந்த நிலையில் பாடசாலையின் பழைய மாணவர் சங்கப் புலம்பெயர் லண்டன் கிளையினர் பல்வேறு உதவிகளை வழங்கினர்.

தாய், தந்தையரை இழந்த பின் தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு இவர்களால் நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் பாடசாலை வளாகத்திற்கான இரும்புக் கேற், விளையாட்டு உபகரணங்கள் என்பனவற்றையும் இவர்கள் வழங்கியுள்ளனர்.

இதைப் போன்றே ஏனைய புலம்பெயர்ந்து வாழும் இந்த மாவட்டப் பாடசாலைகளின் பழைய மாணவர்களும் தாம் கல்விகற்ற பாடசாலைகளுக்கு உதவவேண்டுமெனப் பாடசாலை அதிபர் மேலும் தெரிவித்தார். (க-500)

# பாடசாலைக்கு குடி தண்ணீர் விநியோகம்

முல்லைத்தீவு,ஏப்.8

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய மாணவர்களுக்கான குடிதண்ணீர் விநியோக நடவடிக்கைகள் சிறப்பாக இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒட்டுசுட்டான் கமநலச் சேவைத் திணைக்களத்தின் உதவி ஆணையாளரின் வழிகாட்டலின் கீழ் இந்தக் குடிதண்ணீர் விநியோக வேலைகள் நடைபெற்று வருகின்றன. இதனை கமநலச் சேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தரான கந்தசாமி நெறிப்படுத்தி வருகின்றார்.

கமநல சேவைத் திணைக்களத்தின் இத்தகைய உதவியானது பாடசாலைச் சமூகத்துக்குப் பெரும் பயனுள்ளதாக அமைந்திருப்பதாகப் பாடசாலை அதிபர் ந.கருணாகரன் தெரிவித்தார். (க-500)

### சேவைக்குப் பாராட்டு....



*பொருத்தமான பரிசு: முல்லைத்தீவு மாவட்டம் பேராறு கிராம அலுவலர்களின் சேவைநலன் பாராட்டு விழாவின்போது கிராம அலுவலர் ந.யோகரத்தினத்துக்கு கிராம அபிவிருத்திச் சங்கப் பொருளாளர் க.குமாரசாமி பரிசு வழங்குகின்றார். (500)*

# கிளிநொச்சியில் சாரதி அனுமதிப் பத்திரப் பரீட்சை

கிளிநொச்சி, ஏப்.8

கிளிநொச்சி மாவட்டச் செயலகம் ஊடாகச் சாரதி அனுமதிப் பத்திரத்துக்கு விண்ணப்பித்து எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான ஓட்டுநர் பரீட்சார்த்தப் பரீட்சை இன்றும் நாளை சனிக்கிழமையும் காலை 9 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

பரீட்சைகள் மட்டுப்படுத்தப் பட்ட அளவிலே நடைபெறுவதால் பதிவு ஒழுங்கிலேயே பரீட்சைகள் நடைபெறும் என்று கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஒ-10)

# வன்னியில் ஆசிரியர் வெற்றிடங்கள்; மாணவர் கல்வியில் பெரும் பாதிப்பு

முல்லைத்தீவு, ஏப்.8

ஆசிரியர் இடமாற்றத்தின் போது வன்னிப் பாடசாலைகளிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர் வெற்றிடங்கள் இதுவரை நிரப்பப்படாமலுள்ளதால் மாணவர்களின் கல்வி நிலையில் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகப் பெற்றோர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது விடயமாகப் பலமுறை உயரதிகாரிகளுக்கு எடுத்துக் கூறியபோதும் இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லையென அவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

யுத்தத்தினால் மிகவும் பாதிக்கப்பட்ட வன்னிமக்கள் மீள்குடியேறியுள்ள நிலையில் இங்குள்ள பாடசாலைகள் பல்வேறு குறைபாடுகளுடன் இயங்கி வருகின்றன. இந்த நிலையில் ஆசிரியர் பற்றாக்குறையும் சேர்ந்து கல்வி நிலையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

வன்னிப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் பல்வேறு காரணங்களைக் கூறித் தமது கடமைப் பொறுப்புக்களை ஏற்காதுள்ளனர். சுமார் 46 ஆசிரியர்கள் வன்னியிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள போதிலும் 15 ஆசிரியர்களே இவர்களுக்குப் பதிலாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளனர். மீதி 31 இடங்களும் வெற்றிடமாகவே உள்ளன. இதனால் மாணவர்களின் கல்வி நிலையில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

ஆகவே இதனைக் கருத்தில் கொண்டு வடமாகாண உயர்கல்வி அதிகாரிகள் இந்த ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆவன செய்ய வேண்டுமென பெற்றோர், மாணவர்கள், பாடசாலைச் சமூகத்தினர் எனப் பலரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-500)

# முறையாக இயங்காத கூ.சங்க கிளைகள்

முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவிப் பிரதேசத்திலுள்ள குஞ்சுக்குளம், பாலமோட்டை ஆகிய கிராமங்களில் இயங்கிவரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் முறையாக இயங்கவில்லையென அந்தப் பகுதி மக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

கொடிய யுத்தத்தின் பின்னர் மீள்குடியமர்த்தப்பட்ட இந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது அன்றாடத் தேவைகளுக்காகப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளையே நாடி வருகின்றனர். ஆனால் இவை முறையாக செயற்படாமையால் பாவனையாளர்கள் ஏமாற்றமும் சிரமமும் அடைகின்றனர்.

ஆகவே உரியவர்கள் மக்களின் இந்த அவல நிலையைக் கருத்தில் கொண்டு சங்கத்தை நல்ல முறையில் இயங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க-313)

# உழவு இயந்திரங்கள் விவசாயிகள் பயன்பாட்டுக்கு

கமநல சேவை நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உழவு இயந்திரங்களை விவசாயிகள் பயன்படுத்துவதற்கான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

கமநல சேவை நிலையங்களுக்கு இந்திய அரசினால் வழங்கப்பட்ட உழவு இயந்திரங்களை விவசாயிகள் பயன்படுத்தும் வகையிலும் விவசாய நிலங்களைப் பண்படுத்தும் வகையிலும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன்படி கிளிநொச்சி கமநல சேவை நிலையத்தில் கடந்த 25 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத் தீர்மானத்தின் பிரகாரம் நிலங்களைப் பண்படுத்தும் வகையில் றொட்டேட்டர் ஒரு ஏக்கருக்கு 1600 ரூபாவும் றில்லர் ஓர் உழவு ஏக்கருக்கு 700 ரூபாவும் இரண்டு உழவுக்கு 1300 ரூபாவும் ஓர் ஏக்கர் டிஸ் வெட்ட 2400 ரூபாவும் எனத் தீர்மானிக்கப்பட்டு அதன்படி விவசாயிகள் பயன்படுத்தும் வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (க-6)

# கிளிநொச்சியில் தையல் பயிற்சி நிலையம்

கிளிநொச்சி, ஏப்.8


கிளிநொச்சி மலையாளபுரம் கிராமத்தில் தையல் பயிற்சி நிலையமொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

சிறகுகள் பண்பாட்டு மன்றத்தின் ஏற்பாட்டில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவுமுகமாகவே இந்தத் தையல் பயிற்சி நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.


கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் மலையாளபுரம் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் இந்த நிலையம் திறந்து வைக்கப்பட்டது. சிறகுகள் பண்பாட்டு மன்றத்தின் தலைவியான தேவிகா கேதீஸ்வரன் இதனைத் திறந்து வைத்தார். முதற் கட்டமாக 60 பெண்கள் இந்த நிலையத்தில் பயிற்சிகளைப் பெறுவர். பயிற்சியின் நிறைவில் தையல் [illegible] வழங்கப்படும். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயங்களின் திருக்காட்சி



சங்கரத்தை, பிட்டியம்பதி பத்திரகாளி அம்மன் ஆலய 7 ஆம் திருவிழா உற்சவத்தின்போது வீரபத்திர பத்திரகாளி சமேதரராக பக்தர்களுக்கு அருள்காட்சி அளிக்கிறார்.



காரைநகர், மணற்காடு, முத்துமாரி அம்மன் ஆலயத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற தேர்த்திருவிழாவில் பக்தர்கள் புடை சூழ அம்பாள் தேரில் வலம் வருகின்றார். (250)

# ஒத்தி வைக்கப்பட்ட உள்ளூராட்சிச் சபைகளுக்கு தற்போதைய நடைமுறைப்படியே தேர்தல்

## அமைச்சர் தினேஷ் கூறுகிறார்

பதவிக் காலம் நீடிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான வாக்களிப்பை தற்போதுள்ள நடைமுறைக்கு அமைவாகவே நடத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. அரச தரப்புக் கட்சியின் கொறடாவான அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நாடாளுமன்றில் இதனைத் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இடம் பெற்ற உள்ளூராட்சி மன்றங்கள் சட்ட மூலம் மற்றும் உள்ளூராட்சிச்சபைகள் தேர்தல்கள் திருத்தச் சட்ட மூலம் தொடர்பான விவாதத்தின் போதே அமைச்சர் அரசின் இத் தீர்மானத்தைத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், எஞ்சியுள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலைப் புதிய முறைமையின் கீழ் நடத்துவதானால் தொகுதிகளின் எல்லைகள் நிர்ணயிக்கப்பட வேண்டியுள்ளதோடு, அதற்குச் சில கால அவகாசமும் தேவைப்படுகிறது. பின்தள்ளி வைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தலை தற்போதைய முறைமையின் கீழ் நடத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது எனத் தெரிவித்தார். (எ-22)

# ஒருங்கிணைந்த மாவட்ட சுகநலச் சங்கம் உருவாக்கப்படுதல் அவசியமான ஒன்றாகும்

## ஜமுனானந்தா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.8

யாழ். மாவட்டத்தில் ஒருங்கிணைந்த மாவட்ட சுகநலச் சங்கம் உருவாக்கப்படுதல் அவசியமான ஒன்றாகும் என யாழ். மாவட்ட காச நோய் கட்டுப்பாட்டு அதிகாரி வைத்திய கலாநிதி சி.ஜமுனானந்தா தெரிவித்தார்.

ஏப்ரல்-07 உலக சுகாதார தினத்தை முன்னிட்டு பயிலுநர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் ''சுகாதார விழிப்புணர்வுக் கையேடு'' நூல் வெளியீட்டு நிகழ்வு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஆய்வுரைகளை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஆயிரக்கணக்கான வேலையற்ற பட்டதாரிகள் யாழ். மாவட்டத்தில் உள்ளனர்.

இவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தமிழ் இனத்தின் எதிர்கால ஆரோக்கியமான நலனுக்கான சேவையினை வழங்க வேண்டும்.

இந்தச் செயற்பாடுகளுக்கு ''சுகநலச் சங்கம்'' உருவாக்கப்படுதல் வேண்டும்.

ஒவ்வொரு வயதினருக்கும் அவர்களின் வயதுக்கேற்ப உடல், உளநோய்கள் ஏற்படலாம். இவை தொற்று நோயாகவும், நாள்பட்ட நோயாகவும் இருக்கலாம்.

இது தொடர்பான விழிப்புணர்வுகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டியது அவசியமானதாகும்.

குறிப்பாக பாலியல் சார்ந்த நோய்கள் தொடர்பான விழிப்புணர்வு சமூகத்துக்குத் தேவையான ஒன்றாகும்.

அத்துடன் விசேட தேவையுடையவர்கள் தொடர்பான நலன்களில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

எனவே, சுகநல சேவைகளை வழங்கும்போது திட்டமிடல் அவசியம் தேவை.

தற்போது முதலுதவிச் சங்கம், செஞ்சிலுவைச் சங்கம் போன்ற தொண்டர் அமைப்புக்களின் செயற்பாடுகள் மங்கிப் போயுள்ளன.

எனவே பொது மக்களின் நலன் கருதி மருத்துவத்தினை வியாபார நோக்கில் நடத்தாமல் மனித நேயத்துடன் சுக நலத்துக்கான செயற்பாடாக வழங்குதல் வேண்டும் என்றார்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட சுகாதாரப் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் சிவராணி மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பயிலுநர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ-313)

# தேவார இசைப்பாடல்கள் இறுவட்டு வெளியீடு



நல்லூர் திருநெறிய தமிழிசை வெளியீட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் இசைப்புலவர் தாவடியூர் கே.எஸ்.ஆர். திருஞானசம்பந்தன் பாடிய தேவார இறைப் பாடல்களின் ஐந்து பாகங்கள் ஒரே இறுவட்டில் வெளியிடப்பட்டுள்ளன.

இதில் முதலாவது பாகத்தின் அணி இசை கலைஞர்களாக ச.திவாகரன், சி.துரைராஜா, கி.சிவகுருநாதசுவாமி, இரத்தினம் இரத்தினதுரை ஆகியோரும் பங்குபற்றியுள்ளனர்.

அடுத்த நான்கு பாகங்களிலும் தென்னிந்திய இசைக் கலைஞர்களான டி.எச்.வசந்தா, பி.சிவகுமார், எஸ்.ரெங்கராஜன், எச்.பரமசிவம், ஆர்.எஸ்.தீனதயாளு ஆகியோரும் பங்குபற்றினர்.

இந்த இசைப்பாடல்களை இல. 18, குமாரசாமி வீதி, ஸ்ரீசிவ குருநாத குருபீடம், வேதாந்த மடம், கந்தர்மடம் என்னும் முகவரியில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (204)

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 600
திகதி 06/04/2011
சுப்பர் இலக்கம் 16
வெல்லப்பட்ட இலக்கங்கள் 04 24 38 59

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 12,023,359.20 | - |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியா இருப்பின் | ரூ. 1,000,000.00 | 02 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் 3 இலக்கங்கள் சரியா இருப்பின் | ரூ. 50,000.00 | 11 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியா இருப்பின் | ரூ. 2,000.00 | 263 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் 2 இலக்கங்கள் சரியா இருப்பின் | ரூ. 1,000.00 | 520 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியா இருப்பின் | ரூ. 100.00 | 13139 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் 1 இலக்கம் சரியா இருப்பின் | ரூ. 40.00 | 7592 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியா இருப்பின் | ரூ. 20.00 | 190227 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியா இருப்பின் | ரூ. 20.00 | 30422 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசுத்தொகை ரூ. 9,626,560.00
வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்பு திகதியில் இருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்
ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிசட்டத்திட்டங்களுக்கு உட்பட்டு பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு 12,023,359.20
தேசிய லொத்தர் சபை
அவசர தேவைக்கு 2473360
இணையத்தளம் - WWW.nlb.lk



# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஏப்.8

யாழ். இந்துக் கல்லூரியின் சிவஞான வைரவர் ஆலயத்தின் கும்பாபிசேக தின நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு மகேஸ்வர பூசையும் இடம்பெறும். (ற-313)

* * *

யாழ்ப்பாணம், ஏப்.8

ஊரெழு கிழக்கு நாவலம்பதி ஞான வைரவர் ஆலயத்தின் அலங்காரத் திருவிழா கடந்த 2ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

திருவிழா நாள்களில் தினமும் மாலை 6 மணிக்கு நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு 'கானகதாவாரிதி' பிரம்மஸ்ரீ சிவை. வை. நித்தியானந்தசர்மா 'சிவ லீலை' என்னும் தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தி வருகிறார்.(ற)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.8

மாதகல் நுணசை முருகமூர்த்தி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நேற்றுமுன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ள இந்தத் திருவிழாவில் எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும்.

திருவிழாக் காலங்களில் முற்பகல் 11 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை சைவசித்தாந்த பண்டிதர் க.நித்தியதசீதரன் ''முருகப் பெருமானின் வழிபாடும் அடியார் பக்தி நிலையும்'' என்னும் தொனிப் பொருளில் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார். (ற)

* * *

காரைநகர், ஏப்.8

காரைநகர் கருங்காலி போசுட்டி முருகமூர்த்தி கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெற உள்ளது.

இந்த உற்சவத்தின் தேர்த் திருவிழா எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமையும் தீர்த்தத் திருவிழா மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளன. (ற-250)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.8

குப்பிளான் வீரமனை கன்னிமா கௌரி அம்பாள் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ற)

* * *

நவாலி,ஏப்.8

மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று முன்தினம் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 16 ஆம் திகதி தேர்த்திரு விழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ம-100)

* * *

உயரப்புலம் உத்துங்க விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா இன்று நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் இந்தத் திரு விழாவில் எதிர்வரும் 16ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறு நாள் தீர்த்த் திருவிழாவும் இடம் பெறும். (ம-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகரில் சுத்திகரிப்புப் பணிகளை தனியாரிடம் ஒப்படைக்கத் தீர்மானம்

## ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம்,ஏப்.8

யாழ்நகர் வட்டாரத்தை உள்ளடக்கிய சுற்றாடல் பகுதியின் சுத்திகரிப்புப் பணி தனியாரிடம் ஒப்படைக்கப்படவிருக்கின்றது.

யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் இந்தத் தகவலை மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மாகாணத்தின் பெரும்பகுதியில் துப்புரவுப் பணி சீராக நடைபெறுவதில்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது. கொழும்பு போன்று இந்தப் பகுதியையும் சுத்தமாக வைத்திருப்பதற்கான வழிமுறைகள் குறித்து ஆராய விசேட கூட்டம் ஒன்றை வடக்கு மாகாண ஆளுநர் ஏற்பாடு செய்திருந்தார்.

இந்தப் பணியைத் தனியாரிடம் ஒப்படைப்பது நல்லது என ஆளுநர் ஆலோசனை வழங்கினார். அதற்கான நிதியை வழங்கவும் அவர் இணக்கம் தெரிவித்தார்.

இதன்படி, பரீட்சார்த்தமாக நகரப் பகுதியின் சுத்திகரிப்புப் பணியைத் தனியாரிடம் ஒப்படைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

முதல்வர், உறுப்பினர்கள், சுகாதாரப் பகுதியினர் இதற்கு அனுமதி வழங்கினால், உடன் பணிகள் தனியாரிடம் ஒப்படைக்கப்படும் - என்றார். (ஐ-7)

# பேர்த்தியின் சடலத்தைப் பார்த்து மயங்கி வீழ்ந்தவர் மரணமானார்

யாழ்ப்பாணம், ஏப். 8

அகால மரணமடைந்த இளம் யுவதியின் உடலைப் பார்வையிட்ட அவரது பேர்த்தியார் மயங்கி விழுந்து பின்னர் மரணமானார்.

இந்தச் சம்பவம் சங்குவேலி தெற்கு மானிப்பாயில் நேற்று முன்தினம் அதிகாலை 3 மணியளவில் நிகழ்ந்துள்ளது. சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ரி.திலகவதி (வயது-68) என்பவரே மரணமானவர் ஆவார்.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:-

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் திருகோணமலைக்குச் சென்று திருமணம் முடித்து வாழ்ந்து வந்த பிரஸ்தாப யுவதி, குடும்பத் தகராறு காரணமாக நஞ்சருந்தி உயிரை மாய்த்துக் கொண்டார் எனக் கூறப்பட்டது.

இந்த நிலையில், குறித்த யுவதியின் உடல் நேற்றுமுன்தினம் அதிகாலை 3 மணியளவில் மானிப்பாயில் உள்ள அவரது வீட்டுக்குக் கொண்டுவரப்பட்டது. அப்போதே அவரது பூதவுடலைப் பார்த்த பேர்த்தியார் மயங்கி வீழ்ந்தார். அவரை உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்ட போதும் அவர் உயிரிழந்து விட்டார். (ஓ-4)

# முகிழ்நிலை ஆசிரியர்களின் செயற்பாடு: கல்லூரிக்கு அவப்பெயரை ஏற்படுத்தியது!

## இணைப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.8

யாழ். தேசிய கல்வியியல் கல்லூரியின்பீடாதிபதி மனிதத்துவம், அன்பு, பாசம் கொண்ட மனிதன் என்பதால் கல்லூரிக்கு இத்தகைய நிலை ஏற்பட்டுள்ளது என யாழ். தேசிய கல்வியியல் கல்லூரியின் உப பீடாதிபதி பா.தனபாலன் தெரிவித்துள்ளார்.

யாழ். தேசிய கல்வியியல் கல்லூரியில் 'ராகிங்' இல் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட முகிழ் நிலை ஆசிரியர்களுக்கான 3 ஆம் கட்ட விசாரணைகள் நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றில் இடம் பெற்றன. விசாரணைகள் முடிவடைந்ததும் 'ராகிங்கில்' ஈடுபட்ட முகிழ் நிலை ஆசிரியர்களின் பெற்றோரைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:-

கல்வியியல் கல்லூரியின் நிலையை ஊடகங்கள் ஊடாக உலகமே அறிந்துள்ளது. முகிழ்நிலை ஆசிரியர்களின் தவறான செயற்பாட்டினால் இத்தகைய அவப்பெயர் ஏற்பட்டுள்ளது. கல்லூரியின் பீடாதிபதி மாணவர்கள் மீது அளவற்ற அன்பு, பாசம் கொண்ட மனிதன். பிள்ளைகளுடன் பண்பாகப் பழகும் நாகரிகமானவர். இந்தப் பலவீனத்தால் தான் மாணவர்களின் செயற்பாடுகள் எல்லை மீறிச் சென்றுள்ளன.

நல்ல மனிதர்களால் நல்ல தெரு சிறந்த நிர்வாகத்தை நடத்த முடியும். எமது பீடாதிபதியின் நல்ல பண்புகளைப் பலவீனமாகக் கருதி எல்லோரும் சேர்ந்து பழி வாங்கிவிட்டார்கள் என்று கவலையுடன் தெரிவித்தார். (எ-9)

## ஆரம்பித்து வைப்பு...



யாழ்ப்பாணம் விஞ்ஞானச் சங்கத்தின் 18 ஆவது வருடாந்த மாநாட்டின் முதல் நாள் அமர்வுகள் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன. யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியை வசந்தி அரசரட்ணம் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைக்கிறார். விஞ்ஞான சங்கத் தலைவர் கலாநிதி சி.சிறி சற்குணராசாவும் படத்தில் உள்ளனர்.

# இணைய வடிவமைப்புப் போட்டியில் வேம்படி மகளிர் முதலிடம் பெற்றது

யாழ்ப்பாணம், ஏப். 8

உள்ளூர் மயமாக்கப்பட்ட செயலகங்களுக்கான சிறப்பு மையம், மொறட்டுவப் பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை ஆள்கை மையம் ஆகியன இணைந்து வழங்கிய யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக் கிடையிலான இணையத்தள வடிவமைப்புப் போட்டியில் வேம்படி மகளிர் கல்லூரி முதலிடம் பெற்றது. இதற்கான பரிசளிப்பு விழா நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம்பெற்றது.

லக்பாஸ் நிறுவனத்தின் உறுப்பினர் கே.சர்வேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக லக்பாஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் சனத்ஜெயசேன, முகாமையாளர் டி.பிரபாத் ஆகியோரும் வலயக்கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள், மாணவர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான இந்தப் போட்டியில் யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை முதலாம், மூன்றாம் இடத்தையும், புலோலி மெ.மி.த.க.பாடசாலை இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

இந்தப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் ஏனைய வலய மட்டப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (ஐ-313)

# ஆங்கில கற்கை நாள் பாடசாலை

யாழ்ப்பாணம்,ஏப்.8

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் 2010/2011 ஆம் கல்வியாண்டில் ஆங்கில சான்றிதழ் கற்கை நெறிகளைக் கற்கும் மாணவர்களுக்கான நாள் பாடசாலை வகுப்புகள் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறுமென இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)

# வலி.வடக்கில் இதுவரை 182 குடும்பங்கள் மீள்குடியமர்வு

யாழ்ப்பாணம், ஏப். 8

வலி.வடக்கில் மக்கள் மீள் குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் இதுவரை 182 குடும்பங்கள் மீள்குடியமர்ந்துள்ளன என வலி.வடக்கு பிரதேச செயலக உயர் அதிகாரியொருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும்தெரிவித்தவை வருமாறு:-

வலி.வடக்கில் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட வித்தகபுரம், மாவைகலட்டி, இளவாலை வடமேற்கு, இளவாலை வடக்கு, சேந்தாங்குளம், வசந்தபுரம் ஆகிய இடங்களில் மக்கள் படிப்படியாக மீள்குடியமர்ந்து வருகின்றனர்.

மாவைகலட்டியில் 78 குடும்பங்களும், வித்தகபுரத்தில் 16 குடும்பங்களும், இளவாலை வடமேற்கில் 24 குடும்பங்களும், வசந்தபுரத்தில் 50 குடும்பங்களும், சேந்தாங்குளத்தில் 14 குடும்பங்களும் இதுவரை மீள்குடியமர்ந்துள்ளன.

மீள்குடியமர்ந்த மக்களின் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-9)

# சமுர்த்தி பயனாளிகளுக்கு இருமாத நிவாரணம் இன்னமும் வழங்கப்படவில்லை

## உடன் கிடைக்க ஏற்பாடு செய்யுமாறு தமிழரசுக்கட்சி கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 8

கடந்த 2011 ஆம் ஆண்டு ஜனவரி, பெப்ரவரி, மார்ச் ஆகிய மூன்று மாதங்களுக்கும் சமுர்த்தி நிவாரணப் பயனாளிகளுக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினால் நிவாரணப் பொருள்கள் வழங்கப்படவில்லையென எமது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. ... முறைப்பாடுகள் ... விதம் கட்டுப்பண முற்பண வழங்கலின் அடிப்படையிலேயே சங்கங்கள் விநியோகங்களை மேற்கொள்கின்றன. எனினும், மேற்குறிப்பிட்ட மூன்று மாதங்களுக்கான கட்டுப்பணம் இதுவரை விடுவிக்கப்படாதநிலையில் இரண்டு மாதம் பட்டியல் மட்டும் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

நிதி வசதியுள்ள ஒன்று அல்லது இரண்டு சங்கங்கள் மீளளிப்பை எதிர்பார்த்து நிவாரணப் பொருள்கள் விநியோகத்தை மேற்கொள்கின்ற அதேவேளை, பெரும்பான்மையான சங்கங்கள் விநியோகத்தை மேற்கொள்ளவில்லை.

வறுமைக்கோட்டில் வாழும் சமுர்த்திப் பயனாளிகளின் நிலைமையை மனிதாபிமானத்தோடு கருத்திலெடுத்து, 2011 ஜனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களுக்கான சமுர்த்தி நிவாரணப் பொருள்களை உடன் வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு வேண்டுகிறோம் - என்றுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப்.8

அண்மையில் வெளியாகிய ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் பாடசாலை அதிபர்கள் உதயனுக்கு அனுப்பி வைத்துள்ள பெறுபேற்று விவரங்கள் வருமாறு:

**வைத்தீஸ்வராக் கல்லூரி**

ஈஸ்வர சந்திரகாந்தி தனுஜன்- 7ஏசிஎஸ், பாஸ்கரன் கோபிகா- 4ஏபி3சி, செல்லத்துரை நவநீதா- 3ஏ3பிசி, அலெஸ்ரீன் மேரிநிசாந்தினி- 3ஏ 2சிஎஸ், நல்லைநாதன் சுஜிகரன்- 2ஏ3 பி4சி, கணேசலிங்கம் சிவனந்தன்- 2ஏபி4சிஎஸ், மனோகரன் நிதுசாளினி- 2ஏபி3சி3எஸ், சுப்பிரமணியம் பிறே மாலினி- 2ஏபி3சி3எஸ், சிறிகணேசராசா சண்சிகா- 2ஏபி3சி2எஸ், மகேஸ்வரன் தக்சினி- 2ஏபி 2சி4எஸ், அசோக்குமார் தரண்யா- 2ஏபி3சிஎஸ்.

**மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்**

அன்னலிங்கம் கீர்த்திகா- 8ஏபி, புவனேந்திரன் ஜென்சி- 8ஏபி, கணேசமூர்த்தி புஸ்பவேணி- 6ஏ 2பிசி, பாலச்சந்திரன் தர்சனா- 6ஏ2பிசி, மகாலிங்கம் கார்த்தீபன்- 6ஏபி2சி, தம்பிராஜ் அருட்கரன்- 5ஏ2பிசி, கந்தசாமி இதயந்தனன்-5ஏ2பிசி, தம்பிராசா கஜந்தினி- 4ஏ2பி3சி, பாலச்சந்திரன் மதுரியன்- 4ஏ2பி2சிஎஸ், செல்வரஞ்சன் கீர்த்தனா- 4ஏ5சி, இராசையா கோபிகா- 3ஏ2பி3சிஎஸ், தனபாலசிங்கம் மதுரா- 3ஏ5பிசி, யோகேஸ்வரன் கார்த்திகா- 3ஏபி4சிஎஸ், வன்னியசிங்கம் சதுர்சன்- 3ஏபி5சி, அருந்தவராஜ் கிருபரூபன்- 3ஏ பி4சிஎஸ்.

**சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்**

இ.கார்த்திகா- 8ஏபி, சி.பிரசாந்- 5ஏ2சி2எஸ், இ.தனுசிகா- 3ஏபி5சி, நோ.ஜோய்கரன்- 2ஏபி 5சிஎஸ், சி.விசாகன்- 2ஏபி5சி, பா.திவ்வியா- 2ஏ 4சி3எஸ், இ.கிஷாளினி- 2ஏ6சி, து.சங்கீதா- 2ஏ 2சி3எஸ்.

**புங்குடுதீவு சுப்பிரமணியம் ம.வி.**

லோ.லோஜிகா- 4ஏ2பி2சிஎஸ், அ.உஷாந்தி- 4ஏ3பிஎஸ், து.துளசிகா- 2ஏ2சிஎஸ், கு.கம்சி- ஏ2 பி2சிஎஸ், வை.மைதிலி- ஏபி 2சி3எஸ், செ. சோபிகா- ஏ3சி2எஸ், செ.நிஷாந்தினி- 2பி சி3எஸ்.

**வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம்**

லி.தஸிந்தாஸ்-5ஏ2பிசி, மு.யசிந்தினி-2ஏ2பி4எஸ், யோ.பிரதாபன்-2ஏ2சி3எஸ், அ.துயிந்தன்-ஏபி4சி2எஸ், பி.சுயிந்தன்-ஏ2பி2சி3எஸ், என்.நளினி-ஏபிசி5எஸ், பா.யசிகன்- ஏபிசி3எஸ், என்.காருண்யா-ஏ3சி4எஸ், வை.நிஸாந்தன்-ஏ3 சி4எஸ், இ.கீர்த்தனன்-ஏ2சி3எஸ், ச.எஜிந்தா- 3சி 5எஸ், ஆர்.துசிதா- 4சிஎஸ், பி.நிருஷா- பிசி5எஸ்.

**அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்**


ப.மிலக்சியா-6ஏபிசிஎஸ், நி.சிந்துரன்- 3ஏ2பி2சி2எஸ், கு.டிதர்சன்- 2ஏ பி5சி, ஈ.சர்மிளா-6சி2எஸ்.

**ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்**

சி.சுஜீத்-8ஏஎஸ், அ.சங்கீதா- 4ஏ3 பி2சி, த.லக்ஸன்- 3ஏ2 பி3சி, சி.கேதீபன்-3ஏ2சி3எஸ், அ.லனோத்-பிசி3எஸ், பா.யஜீவன்-ஏபி4சிஎஸ், அ.சதீஸ்வரன்- 2ஏ4பி2சி, இ.வரேந்திரன்-பி2சி3எஸ், இ.கம்சினி-3ஏபி2சிஎஸ், செ.யனோதினி-பி2சி4எஸ், வி.கஜீபனா- பி2சி3எஸ், சி.சர்மிளா- ஏசி6எஸ், க.அனோசா- பி2சிஎஸ், சு.ரஜீதா-ஏ2பி2சிஎஸ், து.கௌசிகன்-ஏபி3சி2எஸ், கு.விஜிதா- 2பி2 சி4எஸ்; அ.சமந்திகா-2ஏபி3சிஎஸ், சி.நீராங்கன்-2ஏ4சி2எஸ், வே.நிரோப்பிரியா-2ஏ4சி3எஸ், சி.தாட்சாயினி- 2பி2சி2எஸ், ந.பிறேமினி-2ஏபி5சி, சு.நிசாந்தினி-2ஏபி4சிஎஸ், சி.நிரோசா- ஏபி2சி3எஸ், தெ.யனோசினி-ஏ6சி, ம.சானுகா-பி2சி4எஸ், ச.சயந்தினி- பி5சிஎஸ், து.அனுசன்- ஏபி5சிஎஸ், சி.நோர்வேந்தன்-2பி5சி, செ.கஜனன்- பி3சி4எஸ்.

தென்மராட்சி, கொடிகாமம், கச்சாய் றோட், கச்சாய் அரசினர் பாடசாலைக்கு அருகில் எதிர்கால முதலீட்டுத் திட்டத்துக்கு ஏற்றவகையில் பெரிய நிலப்பரப்பு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகொள்ள:- 0750476078, 0772021691, 0247911178.




## தவறவிடப்பட்டுள்ளது

கடந்த 01.04.2011 வியாழக்கிழமை மாலை கண்டி வீதியில் கொடிகாமத்திற்கும் புத்தூர்ச்சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் கைலேஞ்சியால் முடியப்பட்ட நிலையில் தாலிக்கொடி உட்பட தங்க நகைகள் மோட்டார் சைக்கிளில் வரும்போது தவறவிடப்பட்டுள்ளன.

கண்டெடுத்தவர்கள் கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்துடன் தயவுகூர்ந்து தொடர்புகொள்ளவும். (42-19)

**தொடர்புகளுக்கு: 0750482155**

## கருணாலயம் சிறுவர் இல்லம்

பெண்கள் இல்லத்தில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பெண்கள் தேவை.

1. மேற்பார்வையாளர்கள்
2. சமையலாள்

வயதெல்லை : 30க்கு மேற்பட்டவர்கள்

சம்பளம், லீவு நாள்கள் பேசித் தீர்மானிக்கப்படும்.

சந்திக்கும் நேரம்: காலை 9.00-12.00

வேலை நாள்களில் நேரில் சமுகம் தரவும்.

131, பலாலி வீதி, திருநெல்வேலி.
(அரச விவசாய பாடசாலை முன்பாக) (48,20,26)

## உயர்தரத்துக்கு அனுமதி வழங்கல்

சாவகச்சேரி மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் ஜி.சீ.ஈ உயர்தர வகுப்பு கலை, வர்த்தகப் பிரிவுகளுக்கு அனுமதி பெறும் மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்புக்கு ஏற்ற முறையில் புதிய பாடச் சேர்க்கை ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படுவதுடன் ஜி.சீ.ஈ சாதாரண தரத்தில் உயர்பெறுபேற்றுடன் அனுமதி பெறும் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வசதிகளும் வழங்கப்படும் என்று பாடசாலையின் அதிபர் வி.கந்தசாமி அறிவித்துள்ளார். (ம-313)

## அந்தியேட்டி அழைப்பு



மலர்வு 07.04.1930 — உதிர்வு 23.02.2011

**சின்னத்தம்பி கிருஷ்ணசாமி**



மலர்வு 08.01.1940 — உதிர்வு 10.03.2011

**கிருஷ்ணசாமி அழகரத்தினம்**

அன்பிற்கு ஓர் ஆலயமாய்
அறிவிற்கு ஓர் ஆசானாய்
பண்புடன் வாழ்ந்த
இரு இதயங்களே!
இன்பமும் துன்பமும் பங்கிட்டு
இல்லற வாழ்வு வாழ்ந்தீர்களே!
எம்மை மட்டும் துன்பத்தில் தள்ளிவிட்டு
நீங்கள் இருவரும் சென்றதென்ன?
எங்களுடன் நீங்கள் வாழ்ந்த காலத்தை
எண்ணி மகிழ முன் மறைந்தீர்களே!

எம்மை விட்டுப் பிரிந்த எம் குலதெய்வங்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (09.04.2011) சனிக்கிழமை அதிகாலை 4 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னார்களது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"சிவகிரி",
முக்கராவத்தை, ஊரிக்காடு, வல்வெட்டித்துறை. (39-19)

கி.சிவநேசன் (மகன்),
சிந்தாமணி (குடும்பத்தினர்).

SHAMROCK
A/L - 2013
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகளுடன்
O/L English (Paper Class)
Gr 1 முதல் O/L வரை
ENG. Medium 6 To 11
(3065)(45)

# மாற்று வலுவுள்ளோருக்கு உதவிக் கொடுப்பனவுகள்

தென்மராட்சி, ஏப்.8

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள 27 மாற்று வலுவுள்ளோருக்கு மாதாந்தம் 3ஆயிரம் ரூபா வீதம் வழங்குவதற்கான நிதியை சமூக சேவைகள் அமைச்சு வழங்கியுள்ளது.

பின்வரும் பயனாளிகள் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றுடன் தொடர்புகொண்டு கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கந்தையா தர்மலிங்கம்-கைதடி கிழக்கு, நல்லதம்பி வர்மிளா-கச்சாய் வடக்கு, தேவகுமார் ஜலோரன்ஸ்- சாவகச்சேரி, இராமன் சிவனேஸ்வரன்-மந்துவில் வடக்கு, இரத்தினம் கந்தராசா-சாவகச்சேரி, தம்பிப்பிள்ளை தனலட்சுமி- அல்லாரை தெற்கு, கனகரத்தினம்-மகேந்திரன்- கொடிகாமம், மகாலிங்கம் சுதாகரன்-நுணாவில் மேற்கு,

வேலன் பற்குணம்-வெள்ளாம் போக்கட்டி, சின்னத்துரை சசிகுமார்- கெருடாவில் வடக்கு, கணபதிப்பிள்ளை இன்பராஜ்- மீசாலை வடக்கு, கணபதி மார்க்கண்டு- மட்டுவில் வடக்கு, பொன்னையா தேவராசா-மீசாலை வடக்கு, முருகேசு விக்னேஸ்வரன்- கரம்பைக் குறிச்சி, சுந்தரம் குணரத்தினம்- நாவற்குழி தெற்கு, ஐயம்பிள்ளை சிவக்கொழுந்து- அல்லாரை வடக்கு,

இராசரத்தினம் சதீஸ்குமார்-மருதங்குளம், எழுதுமட்டுவாழ், குமாரசாமி நாகராசா-சாவகச்சேரி, சின்னத்தம்பி நிலாகரன்-மந்துவில் கிழக்கு, சின்னாட்டி ஞானசேகரன்- ஊரியான், கைதடி, வேலும் மயிலும் சிவபாலன்-அல்லாரை தெற்கு, காசிநாதர் விஜயராசசிங்கம்-மந்துவில் கிழக்கு, சாம்பசிவ ஐயர் விமலாம்பிகை-நுணாவில் மத்தி, வேலன் சிவராசா- வரணி இயற்றாலை, சின்னையா மயில்வாகனம்- மட்டுவில் வடக்கு, இராசலிங்கம் நவீன்குமார்- நாவற்குழி தெற்கு, கணபதி பரமானந்ததேவி- கைதடி கிழக்கு (ம-207)

## தேவை

O/L - A/L படித்த பெண் பணியாளர்கள் எமது புடைவை நிறுவனத்துக்குத் தேவை.
தொடர்பு: 077 2850753 (இ-577433)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சின்னையா றஜி



தோற்றம்: 25.02.1980
மறைவு: 20.03.2010

ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறாது துவழ்கிறதே எங்கள் உள்ளம்
உன் திருவதனம் காண
தினம் தினம் ஏங்கித் தவிக்கின்றோம்
உன் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.

நிரந்தர முகவரி:
வெளிப்புலம்,
சுன்னாகம்.

தற்காலிக முகவரி:
பருத்திக்கலட்டி, சுன்னாகம். (49-19)

சகோதர,
சகோதரிகள்.

## S.L.E.S. III (திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட)

போட்டிப் பரீட்சை பயிற்சிக் கருத்தரங்கு (தமிழ், ஆங்கில மொழி மூலம்)

1. நுண்ணறிவு
2. கல்வி நிர்வாகம் சார்ந்த விடய ஆய்வு
3. கிரகித்தல்

திகதி : 10.04.2011/11.04.2011 (இருநாள்கள்)
நேரம்: காலை 9 மணி – பி.ப. 4 மணி வரை
இந்தப் பயிற்சிக் கருத்தரங்கு கல்வி நிர்வாகத் துறையில் அனுபவம் வாய்ந்த சிறப்பு விரிவுரையாளர்களினால் நடத்தப்படும்.

மேலதிக விவரங்களுக்கு:
E Tec Jaffna
ரெக் ஸ்ரீ லங்கா, மானிப்பாய் வீதி, கோப்பாய் சந்தி, கோப்பாய்.
தொ.பே.: 0783619545

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100%சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
PACKED BY:
ROYAL Industries
Colombo 12, T.P 0777277670
அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா
நறுமணப்
பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

100 % டெக்றோஸ் மொனோகைட்றேட் (Dext rose Monohydrate) அடங்கிய சர்வதேச தரத்திற்கு நிகரான றோயல் குளுக்கோஸ் (100g) மிகக் குறைந்த விலையான ரூபா 31.90 இற்கு சந்தையில் கிடைக்கும்போது ஏன் மற்றைய குளுக்கோஸுக்கு அதிகவிலை கொடுக்கவேண்டும்?

இலவசம்

அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!

எம்மிடம் 18 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான அழகிய வர்ண ரீ-சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாய் பெற்றுக்கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் பெயரை அடிக்கடி உச்சரிக்கும் அமைச்சர்கள்; பதவிகள் பறிபோய்விடும் என்பதால்தான் இந்த நிலையோ?

ஐயோ கடவுளே எல்லாவற்றுக்கும் ஜனாதிபதிதானா! அமைச்சர்களான நீங்கள் எதையுமோ செய்வதில்லையா? ஜனாதிபதியின் பெயரை அடிக்கடி உச்சரிக்காதுவிட்டால் உங்களுடைய பதவிகள் பறிபோய்விடுமோ? என்று கிண்டல் அடித்தார் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரான தயாசிறி ஜயசேகர.

நேற்று நாடாளுமன்றில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்திலேயே அவர் இப்படிக் கேட்டு சபையைச் சூடேற்றி விட்டார்.

கிழக்கு மாகாணத்தில் பொத்துவில் - பாணம வீதி அபிவிருத்தி செய்யப்படுமா? அதற்கான திட்டங்கள் ஏதும் உண்டா? அவ்வாறு உள்ளடக்கப்பட்டிருந்தால் எத்தனை கிலோமீற்றர் தூரம் அபிவிருத்தி செய்யப்படும் என தயாசிறி ஜயசேகர கேள்வி எழுப்பினார்.

இக்கேள்விக்குப் பதிலளித்த பிரதி அமைச்சர் ''அதி மேதகு ஜனாதிபதியின் கிழக் கின் உதயம்'' வேலைத்திட் டத்தின் கீழ் இப்பாதை அபிவிருத்தி செய்யபபடவுள்ளன. முதற்கட்டமாக 17 கிலோமீற்றர் தூர பாதை அபிவிருத்தி வேலைகள் ஆரம்பமாகிவிட்டன என்று புள்ளிவிவரங்களுடன் பதிலளித்தார்.

அப்போது குறுக்கிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர சபாநாயகர் அவர்களே! இந்தச் சபையில் நாங்கள் எந்த ஒரு கேள்வியைக் கேட்டதும் பதில் சொல்லும் அமைச்சர்கள் எல்லோரும் எல்லாச் செயற்பாடுகளும் அதிமேதகு ஜனாதிபதியின் திட்டம் என்றே கூறுகின்றனர். இந்த அமைச்சர்களுக்குத் தனியாக எந்த ஒரு திட்டமும் இல்லையா அல்லது ஜனாதிபதியின் பெயரைக் கூறிவிட்டால் இவர்களுக்கு ஏதும் பாதிப்பு ஏற்பட்டு விடுமா? என்று கேட்டார்.

இப்படி ஒரு திடீர் கேள்வியை எதிர்பாராத பிரதி அமைச்சர் நாட்டின் தலைவர் ஜனாதிபதிதானே. அவரின் பெயரைக் கூறுவதில் தவறு ஒன்றும் இல்லை என்று கூறி சர்ச்சை எழாமல் தடுத்துவிட்டார் பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி.

**500 ஏக்கர் அரச காணியை தனியார் ஒருவர் விற்பனை செய்கிறார்**

நாடாளுமன்றம் நேற்றுப் பிற்பகல் பிரதி சாபாநாயகர் சந்திம வீரக்கொடி தலைமையில் கூடியது. வழமையான சபை நடவடிக்கைகளின் பின் வாய்மூல விடைக்கான கேள்விகள் எழுப்பபப்பட்டன.

முதலாவது கேள்வியை ஐ.தே.க. கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ரவி கருணாயநாயக்க நிதித் திட்டமிடல் அமைச்சரிடம் எழுப்பியிருந்தார். நேற்று கேள்வி நேரம் ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே ரவி கருணா நாயக்க சபைக்கு வந்துவிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த ஐந்து வருடங்களில் வங்குறோத்து நிதிக்கம்பனிகள் எத்தனை? அங்கு வைப்பிலிட்ட பொதுமக்களின் பணத்துக்கு மத்திய வங்கி பொறுப்பில்லையா?

இந்த நிதிக் கம்பனிகளால் ஏமாற்றப்பட்ட வைப்பாளர்களின் எண்ணிக்கை என்ன?

இப்பணம் மீளப்பெற்றுக் கொடுக்கப்படுமா என்று ரவி கருணாநாயக்க கேள்வி எழுப்பினார். இக்கேள்விக்குப் பதில் அளிப்பதற்கு ஒரு மாதகால அவகாசம் கேட்டார் பிரதி அமைச்சர்.

ஐயா நாய் இருந்தால் கல் இல்லை கல் இருந்தால் நாய் இல்லை என்பது போல் நான் நாடாளுமன்றத்தில் இருந்து கூப்பிடு தூரத்தில் இருந்து கொண்டு சபைக்குப் பிந்தி வருகிறேன் என்று குற்றம் சாட்டுகின்றனர். நான் முந்தி வந்து விட்டால் பதில் அளிக்க கால அவகாசம் கேட்கின்றனர். நான் இந்தக் கேள்வியை மூன்றாவது தடவையாகக் கேட்கிறேன். ஆனால் பதில்தான் கிடைக்கவில்லை என்று சலிப்புடன் கூறினார் ரவி கருணா நாயக்க.




மற்றொரு கேள்வியையும் எழுப்பினார் ரவி கருணா நாயக்க.

இப்போது அரசுக்குச் சொந்தமான 400 ஏக்கர் காணியை தரகர் ஒருவர் தன் இஷ்டப்படி விற்பனை செய்கின்றார். இதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கி உள்ளது என்று இடைக் கேள்வி ஒன்றையும் எழுப்பிய அவர் -

புதிய உல்லாசப் பிரயாண அபிவிருத்திப் பிரதேசங்களாக இனம்காணப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவை?

இவற்றில் 'அரசும் வெளிநாட்டுக் கம்பனிகளும் எந்த வகையில் முதலீடு செய்கின்றன. இதனால் எமக்குக் கிடைக்கும் நன்மைகள் என்ன என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சரிடமே கேள்வி எழுப்பினார்.

இக்கேள்விக்குப் பிரதி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பாவே பதில் கூறினார்.

**உல்லாசப் பிரயாண அபிவிருத்திக்கு 2,000 ஏக்கர் காணியாம்**

குச்சவெளி, கற்பிட்டி, வாகரை மற்றும் யால ஆகிய நான்கு பிரதேசங்கள் புதிய உல்லாச பிரயாண அபிவிருத்திப் பிரதேசங்களாக இனம் காணப்பட்டுள்ளன. ஒவ் வொரு பிரதேசங்களில் இருந் தும் தலா 500 ஏக்கர் காணி பெறப்படும்.

உல்லாசப் பிரயாணத் துறையில் அனுபவமிக்க 10 வெளிநாட்டுக் கம்பனிகள் 573 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்ய முன்வந்துள்ளன.

இதன்மூலம் 25,000 பேருக்கு நேரடி தொழில் வாய்ப்புகளும் 75,000 பேருக்கு மறைமுகத் தொழில் வாய்ப்புக்களும் கிடைக்கும் என்று பிரதி அமைச்சர் கூறினார்.

**ஜனாதிபதியின் போதைக்கு முற்றுப்புள்ளி - இங்கே இல்லையா?**

அமைச்சர் கூறுவது சரிதான். இங்கே ஜனாதிபதி போதைக்கு முற்றுப்புள்ளி என ஒரு இயக்கத்தையே நடத்துகின்றாரர். இரண்டாயிரம் ஏக்கரில் உல்லாசப் பிரயாண தோட்டங்களை ஆரம்பிக்கக்கோரும் வெளிநாட்டுக் கம்பனிகள் அங்கு மதுபானம், மற்றும் 'கஸினோ', நிலையங்களை அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதா? அங்கு ஜனாதிபதியின் போதைக்கு முற்றுப்புள்ளி இல்லையா என்று ஒரு கேள்வியை தூக்கிப்போட்டார். பிரதி அமைச்சரோ பிடி கொடுக்காமல் இவற்றுக்கான அனுப்பி கோரப்படவில்லை என்று கூறி சிக்கலில் மாட்டிக் கொள்ளாமல் தப்பிகொண்டார்.

**நெல்லின் விலையோ குறைவு அரிசியின் விலையோ அதிகரிப்பு**

இவ்விடயத்தில் உரையாற்றிய ஜே.வி.பி. உறுப்பினரான அனுரகுமார திஸநாயக்க முன்பு விவசாய அமைச்சராக இருந்தார். இவர் ஒரு விடயத்தை சுட்டிக்காட்டினார். அதாவது நெல்லில் இருந்துதான் அரிசி உற்பத்தி செய்யப்படுகின்றது.

ஆனால் ஒரு புதினம் என்னவென்றால் விவசாயிகளிடம் பெறும் நெல்லுக்கு விலை குறைவு.

அதேவேளை பொது மக்களுக்கு வழங்கும் அரிசியின் விலையோ அதிகரிக்கப்படுகின்றது. இதன் மர்மம் புரியவில்லை.

**இரா.புத்திரசிகாமணி**

நெற்சந்தைப்படுத்தும் துறையில் தனியார் 'மாபியா' வுக்கு அரசாங்கம் அங்கீகாரம் அளித்துள்ளதுதான் காரணம் என்றும் அனுரகுமார திஸாநாயக்க குற்றம் சாட்டினார்.

**கிழக்கு மாகாண் சபையை நாங்கள் ஏற்கவில்லை**

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் பி.அரியநேந்திரன் கிழக்கு மாகாண மக்களின் அவலங்கள், பாரபட்சங்கள் தொடர்பாக சபையில் விவரித்தார். அப்போது தலைமை வகித்த குழுக்களின் பிரிதித் தலைவர் இவ்விடயம் தொடர்பாக கிழக்கு மாகாண சபைக்கு அறிவிப்பீர்களா என்று கேட்டார்.

நாம் என்றும் கிழக்கு மாகாண சபையை ஏற்கவில்லை. இதனால்தான் இங்கு பேசுகிறோம். அரசாங்கமே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முகத்தில் அடித்தால் போல் கூறிவிட்டார் அரியநேந்திரன்.



பகவான் சத்ய சாயி பாபாவின் உடல் நிலை தேறி சகஜ நிலைக்குத் திரும்ப வேண்டும் என உலகம் முழுவதும் உள்ள அவரது லட்சக்கணக்கான பக்தர்கள் பிரார்த்தனை மேற்கொண்டுள்ளனர். புட்டபர்த்தி, பிரசாந்தி நிலையத்துக்கு அருகில் பகவானின் உருவப்படங்களை விற்பனை செய்யும் கடை ஒன்றை இங்கு காண்கின்றீர்கள்.

## முல்லைக்கடலில் காணாமற்போன

# சிப்பாய்களைக் கண்டுபிடிக்க உயர் மட்ட அதிகாரிகள் குழு

கொழும்பு, ஏப்.8

முல்லைத்தீவு கடற்பரப்பில் வைத்து காணாமற்போன நான்கு கடற்படைச் சிப்பாய்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு உயர் அதிகாரிகள் உள்ளடங்கிய விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

-இப்படி கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூர்ய நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சோமதிலக திஸாநாயக்கவின் விசேட பணிப்புரையின் பேரிலேயே இக்குழு நியமிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

முல்லைத்தீவு வடக்கு கடற்பரப்பில் கடந்த மாதம் 29ஆம் திகதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நான்கு கடற்படைச் சிப்பாய்கள், அவர்களின் டிங்கிப் படகுடன் காணாமற்போனமை அறிந்ததே.

இதனையடுத்து முப்படையினரும் கூட்டாக இணைந்து கரையோரப் பிரதேசங்களில் விசேட தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன் பிரதிபலனாக 30ஆம் திகதி வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் வைத்து படகு மாத்திரம் எதுவித சேதமுமின்றி கண்டுபிடிக்கப்பட்டது.

எனினும், கடற்படைச் சிப்பாய்கள் காணாமற்போய் நேற்றுடன் எட்டு நாள்கள் கடந்துள்ள நிலையிலும் இதுவரை அவர்கள் தொடர்பாக எதுவித தகவல்களும் கிடைக்கவில்லை எனக் கடற்படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

முப்படையினரும் கூட்டாக இணைந்து தொடர்ந்தும் கரையோரப் பிரதேசங்களில் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

(ஒ-சி)

# ஆயுள்வேத மருந்து உற்பத்திகள் தர நிர்ணயம் செய்யப்பட்டு சந்தைக்கு

கொழும்பு,ஏப்.8

புதிதாக உற்பத்தி செய்யப்படும் ஆயுள்வேத உற்பத்திகள் தொடர்பான ஆய்வுகளை நடைமுறைப்படுத்தவும் மற்றும் அனைத்து ஆயுள்வேத உற்பத்திகளை தர நிர்ணயம் செய்து சந்தைக்கு அறிமுகப்படுத்தவும் தேசிய வைத்திய அமைச்சு தீர்மானித்துள்ளது.

எந்தவொரு மருத்துவக் கல்வியறிவோ வேறும் தகுதிகளோ கொண்டிராத நபர்கள் பல்வேறு வர்த்தகப் பெயர்களின் கீழ் ஆயுள்வேத மருந்துகளை உற்பத்திசெய்து சந்தைப் படுத்துவதைத் தடுத்து நிறுத்துவது தொடர்பாக ஆயுள்வேத உற்பத்திகளை தர நிர்ணயம் செய்வதற்குத் தீர்மானிக்[illegible] வைத்திய[illegible] பண்டு பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார். (எ-22)

# 15ஆம் திகதி அரச, வங்கி விடுமுறை

கொழும்பு, ஏப்08

ஏப்ரல் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை விசேட அரச மற்றும் வங்கி விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டே இந்த விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என்றும் அரசு தெரிவித்துள்ளது.

பொது நிர்வாக அமைச்சு முன்வைத்த கோரிக்கைக்கு இணங்கவே அரசு இத்தீர்மானத்தை எடுத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
விருப்பம் இல்லாமல் சில செலவுகளைச் செய்ய லாம். வெளியிடங்களுக்குச் செல்லும் போது நண்பர் ஒருவரை எதிர்பாராமல் பார்க்கலாம். அடுத்த சில நாள்களுக்கு பின், நடைபெற உள்ள காரியங்களுக்காக முன்னேற்பாடு செய்வீர்கள். கனவுத் தொல்லையுண்டு.

**இடபம்:**
எந்த வேலையையும் பொறுப்பாகச் செய்ய முற்படுவீர்கள். குடும்பத்தினரின் விருப்பங்களை நிறை வேற்றி வைக்க முற்படுவீர்கள். வெளியூர் போக்குவரத் துகளால் அனுகூலம் உண்டு. சிக்கலான பிரச்சினை ஒன்றை சமாளிக்க நண்பர்கள் உதவி செய்யலாம். பணவரவுகளைப் பெறலாம்.

**மிதுனம்:**
கடும் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். சக ஊழி யர்கள் சிலர் உங்களிடம் பண உதவி கேட்கலாம். யாருக்கும் வாக்குக் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை அவசியம். நினைத்த காரியம் ஒன்று நடக்காமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம்.

**கடகம்:**
உறவினர்களின் பாச மழையில் நனைவீர்கள். மாற்று மொழி பேசுவோர் வகையில் அனுகூலமான உதவி கிடைக்கும். கடனாகக் கொடுத்த பணம் ஒன்று திரும்ப வரலாம். சிலரின் அன்புக் கட்டளைகளுக்கு ஆள்பட லாம். மனைவி, குழந்தைகளின் சின்ன சின்ன ஆசைகளை நிறைவேற்றுவீர்கள்.

**சிங்கம்:**
கணவன் மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக் கும். சிலரிடம் கடனாகக் கேட்ட பணம் கிடைக்கும். நீண்ட நாளைய எண்ணங்கள் நிறைவேறும். தொழில் ரீதியாக சிலர் உங்களை விமர்சித்தாலும், அதை அறிவுரையாக எடுத்துக் கொள்வீர்கள். விருந்தினர்கள் வீட்டிற்கு வரலாம். பெரிய மனிதர்களின் நன்மதிப்பை பெறுவீர் கள்.

**கன்னி:**
முடிந்து விட்டதாக நினைத்த பிரச்சினை ஒன்று மீண்டும் தலை தூக்கலாம். சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். கடனாக வாங்கிய பணம் ஒன்றை திருப்பக் கொடுப்பீர்கள். உத்தியோகத்தர்கள் அதிகாரிகளை அனுசரித்துச் செல்ல வேண்டும்.

**துலாம்:**
மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலை ஒன்று முடியாமல் அதை நீங்களே மீண்டும் செய்யலாம். ஒரு காரியத்திற்காக பல முறை அலைய நேரிடலாம். சிலருடன் தேவையற்ற விடயங்கள் குறித்து வாக்குவாதங்கள் செய்யலாம். நீங்கள் செய்த வேலை ஒன்றை மற்றவர்கள் தாங்கள் செய்ததாக காட்டிக் கொள்ளலாம். மறதியால் அவதியுண்டு

**விருச்சிகம்:**
எதற்காகவும் அலட்டிக் கொள்ளாமல் அமைதியாக காரியம் சாதிப்பீர்கள். வியாபாரிகள் எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். உங்களுக்காகவோ அல்லது குடும்ப உறுப்பினர்களுக்காகவோ ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். பால்ய நண்பர்களைச் சந்தித்து பழங்கதைகள் பேசி மகிழ்வீர்கள். பணவரவு உண்டு.

**தனுசு:**
அடுக்கடுக்காக பல வேலைகளை திட்டமிட்டு செய்வீர்கள். பிள்ளைகள் வழியில் சுபச் செலவு களைச் சந்திக்கலாம். நீங்கள் எதிர்பார்த்தபோது நடக்காத ஒரு விடயம், இப்போது எதேச்சையாக நடக்கலாம். தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம். அயலார் உங்களிடம் யோசனை கேட்டு செயற்படலாம். அனுகூலமான நாள்

**மகரம்:**
திட்டமிட்ட காரியம் ஒன்று நடக்காமல் போனாலும், திட்டமிடாத காரியம் ஒன்று நடக்கும். பிள்ளை களுக்கு நல்ல அறிவுரை கூறுவீர்கள். நீண்ட தூர பயணங்கள் செல்ல போட்ட திட்டம் நிறைவேறும். எதிர்பாராத திடீர் செலவுகளைச் சந்திக்கலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். வயிறு உபாதை நேரும்.

**கும்பம்:**
சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப் பளுவைச் சந்திக்கலாம். மற்றவர்களுக்குக் கிடைத்த வாய்ப்பு ஒன்று உங்களுக்குக் கிடைக்கவில்லையே என மனவருத்தம் அடைவீர்கள். குடும்பத்தினர் தொடர்பான சில விடயங்களில் கண்டிப்புடன் நடந்து கொள்வீர்கள். மற்றவர்களுக்காகச் செலவு செய்யலாம்.

**மீனம்:**
ஆசைப்பட்ட சில பொருள்களை வாங்குவீர்கள். மற்ற வர்களுக்குத் தெரியாமல் தந்திரமாக சில காரியங் களைச் செய்வீர்கள். பெண்கள் வழியில் சிறு உதவி கள் கிடைக்கலாம். சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் நாள்.

# பொங்கி எழுந்தனள் 6


புகுஷிமா அணு உலையில் வெடிப்பு

அணுக் கசிவு அல்லது அணு உலையில் வெடிப்பு ஏற்படும் போது உலக நாடுகளில் அணு உலைகளின் உள்ளே பணி செய்ய றோபோக்களையே அதிகம் நம்பியிருக் கிறார்கள்.

ஜப்பான் நாடோ றோபோக்கள் விடயத்தில் நுட்பம் மிக்க முன்னணி நாடு என்பது வெளிப்படை. அப்படியானால் ஏன் இதுவரை அணு உலைகளின் உள்ளே கடினமான ஆபத்தான பணிகளில் றோபோக்கள் ஈடுபடுத்தப் படவில்லை என்ற கேள்வி பரவலாக எழுப்பப் படுகிறது.

அணு உலைப் பணியாளர் ஒருவர் வேலை செய்யும் சூழலில் 50 மில்லிசிவேட்ஸ் கதிரியக்கம் அமெரிக்காவில் சட்டபூர்வமாக அனுமதிக்கப்படு கிறது. பிரிட்டனில் அதைவிடக் குறைவாகவே வாசிப்பு இருக்க வேண்டும். ஜப்பானில் இது 100 ஆக்கப்பட்டு அவசரகால நிலைமை பிரகடனப் படுத்தப்பட்டு தற்போது 250 மில்லிசிவேட்ஸ் வரை சட்டபூர்வமாக்கப்பட்டுள் ளது.

இது சட்டபூர்வமாக்கப்பட்டாலென்ன இல்லா விட்டாலென்ன கதிர்வீச்சும் அதன் தாக்கங்களும் மனிதனுக்கு ஒன்றாகத்தான் இருக்கப் போகிறது. அது சட்டபூர்வமாக பணியாள்களை தியாகிப் பட்டம் சூட்டிக் கொலை செய்யும் அல்லது நோயாளி யாக்கும் முறையே தவிர வேறில்லை. இதனால் புற்றுநோய் உள்ளிட்ட நீண்டகாலத் தாக்கம் கொண்ட மாற்ற இயலாத நோய்களுக்கு மனிதர்கள் ஆளாகும் வாய்ப்புக்களே அதிகம்.

அணு உலைகளில் மூன்று வெடிப்புக்களும் இரண்டு தீவிபத்துக்களும் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளன. பலியானோர் காயமடைந் தோர் பற்றிய சரியான தகவல்கள் கிடைக்கவில்லை. பல வழிகளிலும் வெப்பம் ஏறுதலை தடுக்கப் போராட்டம் தொடர்கிறது.

ஹெலிகொப்டர்கள் பெரும் கொள்கலன்களில் கடலில் தண்ணீரை அள்ளிச் சுமந்து அணு உலைகள் மீது பொழிகின்றன. புதிதாக குளிரூட்டி களை செயற்பட வைக்க மின் இணைப்பு வேலைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர ஜப்பானில் கையிருப்பு முடிவடையும் நிலையில் உள்ள போரிக் அமிலத்தை வழங்க பல நாடுகள் முன்வந்துள்ளன.

பூகம்பம் இடம்பெற்ற வேளையில் தனது கணவர் புகுஷிமா அணுமின் நிலையத்தில் கடமையில் இருந்ததார் என்று குறிப்பிடுகிறார் அமெரிக்க பெண்மணி ஜெனி இயுடி.. அங்கு அவர் கடமையில் இருக்கும்போது சிறு சிறு அதிர்வுகள் ஏற்படுவது வழமைதான். ஆனால் அன்று அவர்கள் கூரையிலிருந்து கொட்டுப்படும் பொருள்களுக்குள் புதையாத குறையாகத் தப்பி வெளியேறினர் என்கிறார் அவர்.

வாயு விநியோகம் சீர்குலைந்து போனதால் எரிபொருள் கொள்கலன்களையும் அனுப்ப ரஷ்யா தயாரானது. ரஷ்யா அங்கு ஏற்பட்டுள்ள பெரும் மின்சாரப் பற்றாக்குறையை நிவர்த்திக்க தன்னால் இயன்ற மின்சாரத்தை வழங்க முன்வந்துள்ளது என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. மின்சாரத்தை பெட்டியில் அடைத்து விமானத்தில் அனுப்பவா முடியும்? அந்த ஏற்பாடுகளுக்குச் சில காலம் பிடிக்கும்.

வீதியில் காணும் அசைகின்ற காட்சியெல்லாம் மீட்பு வாகன அணிகள்தான். அவை தண்ணீர் பவுசர்கள் பெரும் ஜெனரேட்டர்கள் புல்டோசர்கள் கிறேன்கள் மருத்துவ வசதிகள் என்பவற்றை சுமந்து விரைகின்றன. எல்லாம் யானைப் பசிக்கு சோளப்பொரி போடுவது போன்ற முயற்சிகள்தான். இயற்கையின் சக்தி அப்படி கொடூரமாக அமைந்துவிட்டது.

இவ்வளவையும் காப்புறுதி செய்திருப்பார்களே அதையெல்லாம் கொடுத்துத் தள்ள காப்புறுதி நிறுவனங்கள் என்ன செய்யும்? என வினவினார் இராணுவ மீட்புப் படையணியாளர் ஒருவர். ஒருவேளை காப்புறுதியும் கதிர்வீச்சில் செயலிழந்து விடுமோ என நகைச்சுவையாக பதிலையும் அவரே தந்தார் என்றார் ஒரு நிருபர்.


''என்னுடைய மகளைப் பார்த்து நான் பெருமைப்பட்டேன். கொடுமையான பூகம்பம் தாக்கிய வேளையில் அவள் ஒரு ஜப்பானிய பெண்ணாக துணிச்சலுடன் இருந்தாள். பயந்து நடுங்கிய நான்கூட அவளிடம்தான் துணிவைக் கற்றுக் கொண்டேன்'' என்கிறார் ரோக்கியோவிலிருந்து கொபுத்தமமா என்பவர். ஆனால் ''இப்போது அழிவுகளைக் கண்டு அவள் துவண்டு போயிருக்கிறாள். அவளைத் தேற்ற வழியின்றி திணறுகிறேன்'' என்றார் மேலும்.

ஒனாகாவாவிலிருந்து கொம்பொ பேசுகையில், ''நான் உயிரோடுதான் இருக்கிறேன். ஆனால் என்னைச் சுற்றி எல்லாமே இறந்துவிட்டன என்றார். அமிலமழை பொழியப் போகிறது. மழையுடன் கதிரியக்கப் பொருள்கள் இறங்கப் போகின்றன. காற்று வீசும் திசை ரோக்கியோவுக்குச் சாதகமாக இருக்கிறது. ஆனால் பசுபிக் நோக்கி இந்த மாசடைதல் காவப்படுகிறது என்றெல்லாம்


ஜப்பானியப் பிரதமர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுமைத் தாய்: பொறுக்குமா வையகம்?



கொட்டும் பனியிலும் மீட்புப் பணிகள்

வல்கள் கசிந்தன. அனைத்து நாடுகளும் தமது ன் பரப்பை கண்காணிக்கும் பணியில் களமிறங்கின. உலகப் பிரசித்தமான பொழுதுபோக்கு மையம் ாக்கியோவின் டிஸ்னிலான்ட் இழுத்து மூடப்பட்டு ட்டது. குறைந்தது பத்து நாள்களுக்கு அது சயற்படாது. எல்லாம் சேர்ந்து பொருளா ரத்தையும் வர்த்தகத்தையும் பூகம்பத்தைவிடக் டுமையாக உலுக்கத்தான் போகின்றன. வங்கிகள் தலில் 55 பில்லியன் யென் (ஜப்பானியப்

மு.சிவநேசன்
sivanesan@usa.com

ணத்தின் பெயர்) நிதியைத் திறந்துவிட்டு சரிவைச் க்கட்ட முனைகின்றன. இயற்கையின் சக்தியுட ம் அணுசக்தியுடனும் போராடி வென் றாக வேண் ம். ஏனெனில் ஜப்பான் வாழ்ந்தாக வேண்டும்.

இதற்கிடையில் அணு உலைக் கட்டுப்பாட்டில் ன்னேற்றம் கண்டிருப்பதாக அடிக்கடி செய்திகள் ந்தாலும் நிலைமைகள் சாணேற முழம் றுக்குவதாகவும் காணப்படுகின்றன. எனவேதான் டிப்புகளும் தீவிபத்தும் கதிர்வீச்சும் தொடர் தயாகின்றன. முதலாவது வெடிப்பின்போது ர்வீச்சுக் கொள்கலன் பிரியாமல் தப்பிவிட்டது. தில் யுரேனியம்தான் எரிபொருளாக இருந்தது. து உருகி இருந்தாலும் பரவாயில்லை ாகிறார்கள் நிபுணர்கள். இரண்டாவது உலையில் ாள்கலன் உருகும் சாத்தியம் தென்படுவதாக ச்சம் நிலவியது. இதில் யுரேனியத்துடன் டோனியமும் இணைந்து உள்ளது. இது ருகிவிட்டால் கதிர்வீச்சு ஆபத்து மிக அதிகம் ாகிறார்கள் விஞ்ஞானிகள். படித்தவர்கள் லையைப் பிய்க்கும் விவகாரத்தில் மக்கள் என்னத்தைப் புரிந்து எப்படி நடப்பார்களோ?

இதற்கிடையில் இவ்வளவு இக்கட்டிலும் தாக்குப் பிடித்த அணு உலை அமைப்பை - இவ்வளவு தூரம் பிரியாமல் நின்றுபிடித்ததற்காகப் பாராட்டுகிறார்கள் ஒரு சாரார். ஏனெனில் இடம் பெற்றதோ மிக மிக அசாதாரணமான பூகம்பம்.

காணாமல்போனவர்களின் பட்டியல் கணிக்க இயலாதது. ஆனால் மிக மிக நீளமானது. இறந்தவர்கள், காயமடைந்தவர்கள், வீடிழந்தவர்கள், முகாம் பதிவுகள் எனப் பட்டியல்களின் எண்ணிக்கைகளும் வளரலாயின. இவற்றையெல்லாம்விட ஆபத்தான புதிய பட்டியல் கதிரியக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான பட்டியல். அதிலும் ஆரம்பத்தில் 160 பெயர்கள் இருந்தன. பட்டியலிடப்படாமல் எத்தனைபேர் கதிர்வீசித் திரிகிறார்களோ? பாவம் நிலைமை அவர்களுக்கே புரியாதது.

மீட்புப் பணியில் ஈடுபடும் ஹெலிகளுக்கு எரிபொருள் வழங்கவென 'றொனால்ட் றேகன்' என்ற அமெரிக்கப் போர்க் கப்பலொன்று ஜப்பானிய கரையை அண்மித்து இருந்தது. இவ்வாறு இயன்ற வழிகளில் எல்லாம் உதவிகளும் கிடைத்தபடிதான் இருந்தன. இரண்டு போர்க் கப்பல்களும் மூன்று நாசகாரிகளுமாக ஒரு அமெரிக்கக் கடற்படை அணி, கடலில் அள்ளிச் செல்லப்பட்டு மிதக்கும் குப்பைகளுக்குள் மனிதத் தடயங்களை தேடிக் கொண்டிருந்தன.

'றொனால்ட் றேகன்' கப்பல் பணியாளர்கள் அணு உலை வெடிப்பில் இருந்து கசிந்து காற்றில் பரம்பிய கதிரியக்க அலை ஒன்றிற்குள் அகப்பட்டுக் கொண்டதாக தகவல்கள் வெளியாகின. அவர்கள் ஒரு மணி நேரத்தில் பெற்றுக் கொண்ட கதிரியக்கம் சாதாரணமாகப் பூமியில் மனிதனொருவன் ஒரு மாதத்தில் பெறுகின்ற கதிரியக்க அளவினை ஒத்திருந்ததாகக் கணிக்கப்படுகின்றது.

[illegible]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அன்னை உள்ளம்



ஒரு வயதான அம்மா இருந்தார். அவர் தினமும் தவறாமல் கோயிலுக்குப் போய் சுவாமியிடம் வழிபடும் போது என்ன வேண்டிக் கொள்வார் தெரியுமா?

''நான் இறந்து போனால் நேராக நரகத்துக்குத்தான் போய்ச் சேர வேண்டும்... அதுக்கு அருள்புரிய வேண்டும்'' என்று .

தினமும் இந்த அம்மா இப்படி வேண்டிக்கொள்வதை அந்தக் கோயிலில் உள்ள ஒருத்தர் கவனித்துக் கொண்டே வந்தார். ஒரு நாள் நேராகவே கேட்டுவிட்டார். ''ஏனம்மா! எல்லோரும் சொர்க்கத்துக்குப் போக வேண்டும் என்று ஆசைப்படுவார்கள். ஆனால் நீங்கள் நரகத்துக்குப் போக வேண்டும் என்று சுவாமியிடம் வேண்டுதல் செய்கிறீர்களே? இதற்கு என்ன காரணம்?'' என்று கேட்டார்.

இதற்கு அந்த அம்மா ''ஐயா நான் நரகத்துக்குப் போய்ச் சேர வேண்டும் என்று ஆசைப்படுவது உண்மைதான். அதற்கு என்ன காரணம் என்றால்... எனக்கு ஒரு மகன் இருக்கிறான். நீண்ட நாள்களாக எனக்குப் பிள்ளை இல்லாமல் இருந்து அதற்குப் பின்னர் இவன் பிறந்தான். ஒரே பிள்ளை என்பதால் அவனை மிகவும் செல்லமாக வளர்த்து விட்டேன். அதனால் அவன் சேரக் கூடாதவர்களுடன் சேர்ந்து மிகவும் கெட்டுப் போய்விட்டான். பஞ்சமா பாதகங்கள் அத்தனையும் செய்கிறான். அவன் செய்கின்ற பாவச் செயல்களுக்கு நிச்சயமாக அவனுக்கு சொர்க்கம் கிடைக்காது. அவன் நரகத்துக்குத்தான் போவான். அதில் சந்தேகமே கிடையாது.

அவன் நரகத்துக்குப் போனால் மிகவும் கஷ்ரப்படுவான். அங்கே அவனை யாருமே கவனிக்கப் போவதில்லை. அதனால் அவனுக்கு முன் நான் அங்கே போய்ச் சேர்ந்து விட்டேன் என்றால் அவன் நரகம் வந்து சேரும் போது அவனைக் கவனிக்க முடியும். பணிவிடை செய்ய முடியும்.

அதனால் தான் இப்போது இருந்தே சுவாமியிடம் நரகத்துக்குப் போய்ச் சேர வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன் ''என்று கூறினார்.

தாயுள்ளம் என்பது இதுதான். இதற்கு ஈடாக வேறு எதனையும் சொல்ல முடியாது. இந்த உலகத்தில் பிள்ளைகளுக்காக தனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணிக்கின்ற தாய்மார்கள்தான் அதிகமாக உள்ளனர். ஆனால் அவர்கள் பெற்றெடுத்த பிள்ளைகள் எல்லோரும் தாயையும், தாயன்பையும் புரிந்து நடக்கிறார்கள் என்பது அரிதே.

உயிரோடு இருக்கும் போதே அன்னையின் கலப்படமற்ற உள்ளத்தைப் புரிந்து கொள்ளாதவர் சிலர் தாயைப் பிரிந்த போது வானமே தலையில் இடிந்து வீழ்ந்தது போல் கவலையடைகிறார்கள். அதனால் யாதொரு பயனும் ஏற்படப் போவதில்லை.

அன்னை தெரேசா நிறுவி நடத்தி வந்த ஆச்சிரமத்தில் உள்ள அறிவிப்புப் பலகையில் உள்ள வாசகம் என்ன தெரியுமா?

''நோயாளிகளை இங்கு அழைத்து வராதீர்கள். மருத்துவர்களால் கைவிடப்பட்டவர்களை மட்டும் இங்கு விட்டுச் சொல்லுங்கள்'' என்பதே ஆகும்.

இந்த உலகத்தில் மனிதர்களால் கைவிடப்பட்டவர்களுக்குச் சேவை செய்பவர்களை ஏற்கனவே பார்த்திருக்கிறோம். மருத்துவர்களாலேயே கைவிடப்பட்டவர்களுக்கு சேவை செய்பவர்களை இதற்கு முன்னாடி நாம் பார்த்ததில்லை. அப்படிப்பட்ட அன்னை தெரேசா வெள்ளிக்கிழமை இரவு உணவை முடித்து கொஞ்ச நேரம் பிரார்த்தனை செய்து விட்டு படுக்கைக்குப் போனார். திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டது. தண்ணீர் குடிக்க முயற்சி செய்து எடுத்த போது அது தவறிக் கீழே விழுந்து விட்டது.

எத்தனையோ பேரின் சுவாசக் காற்றுக்குக் காரணமாக இருந்த அவர்கள் சொன்ன கடைசி வார்த்தைகள் ''இனிமேல் என்னால் சுவாசிக்க முடியாது?'' என்பது தான்.

உண்மையான அன்பு- மிகவும் அமைதியான நிலையிலே ஏற்படுவது. அங்கே கோபத்துக்கோ, வெறுப்புக்கோ அல்லது கவர்ச்சிக்கோ இடம் கிடையாது. இதுதான் பெரியவர்கள் சொல்கிற அன்பின் விளக்கம்.

**கோ. சுவாமிநாதன்.**

# தற்கொலை முயற்சிக்குத் தள்ளப்பட்டுள்ள கிழக்கு விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குக!

## வங்கிக் கடன்களை ரத்துச் செய்யுமாறும் செல்வம் எம்.பி. கோரிக்கை

நாடாளுமன்றம், ஏப்.8

கிழக்கு மாகாணத்தில் வங்கிக் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாத விவசாயிகள் தற்கொலை முயற்சிக்குத் தள்ளப்பட்டுள்ளனர். யுத்தத்தினாலும் தொடர்ந்து இரண்டுமுறை வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்ட இம்மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் அவர்களின் வங்கிக் கடன்களை ரத்துச் செய்ய வேண்டும் என்று வன்னி மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் கோரிக்கைவிடுத்தார்.

உணவு (திருத்தம்) சட்ட மூலம் மற்றும் நெல் சந்தைப்படுத்தல் திருத்தச் சட்டம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இப்படிக் கோரிக்கை விடுத்தார்.

செல்வம் அடைக்கலநாதன் தொடர்ந்து உரையாற்றும்போது மேலும் கூறியதாவது:-

கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்கள் விவசாயத்தையும், கடற்றொழிலையும் வாழ்வாதாரமாகக் கொண்டவர்கள்.

ஆனால் நெல் விற்பனை தனியார்துறையினரின் கைகளிலேயே தங்கி உள்ளது. அதே வேளை அரசும் திட்டமிட்ட கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்கவில்லை. இதனால் தனியார் வர்த்தகர்கள் மிகவும் குறைந்த விலைக்கே நெல்லைக் கொள்வனவு செய்கின்றனர்.

கூட்டுத்தாபனமோ ஒரு சிறு தொகையை மட்டும் கொள்வனவு செய்துவிட்டு மிஞ்சிய எல்லாவற்றையும் தனியாரிடம் விட்டுவிட்டது.

நெல் சந்தைப்படுத்தலில் தனியார் ஆதிக்கம் ஒழிக்கப்பட்டு நிரந்தரமான கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட வேண்டும். அப்போது தான் விவசாயிகளுக்கு உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்கும்.

தொடர்ச்சியாக இரண்டு முறை பெரும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் ஆடு, மாடுகளையும், நகை நட்டுகளையும் விற்று விவசாயம் செய்தனர். இப்போது வங்கிகளில் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் தற்கொலை முயற்சிக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட எல்லா விவசாயிகளுக்கும் நஷ்டஈடு வழங்கப்படும் என்று கூறப்பட்டபோதும் அதிலும் பாரபட்சம் காட்டப்படுகின்றது. அனைத்து விவசாயிகளுக்கும் நஷ்டஈடுகளை வழங்க துரித நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதே போன்று மீனவர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒருபக்கம் இந்திய ட்றோலர்கள் வந்து மீன்களை அள்ளிக் கொண்டு போய்விடுகின்றன.

இங்கே படையினர் நமது மீனவர்களுக்கு நேரக்கட்டுப்பாட்டையும் கட்டாய பாஸ் முறைகளையும் நடைமுறைப்படுத்துகின்றதால் மீனவர்களும் வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர் - என்றார்.

இப்போது யுத்தம் இல்லை. எதற்காக பாஸ் முறை என்று கேள்வி எழுப்பிய செல்வம் அடைக்கலநாதன் உடனடியாக பாஸ் முறை ரத்துச் செய்யப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். (ஒ-2)

# நெல், அரிசிக்கான விலை நிர்ணயம்; முறையான பொறிமுறை அவசியம்

## சபையில் ஜே.வி.பி. உறுப்பினர் அநுர குமார

நாடாளுமன்றம், ஏப்.8

லட்சக்கணக்கான விவசாயிகள் வியர்வை சிந்தி அறுவடை செய்யும் நெல்லுக்கான விலை நிர்ணயம் மற்றும் அரிசிக்கான விலை நிர்ணயம் தொடர்பாக முறையான பொறிமுறை ஒன்று பின்பற்றப்பட வேண்டும் என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸநாயக்க நேற்றுத் தெரிவித்தார்.

நாடளுமன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற உணவு (திருத்தம்) சட்ட மூலம் மற்றும் நெற்சந்தைப்படுத்தல் தொடர்பான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த நாட்டில் நெல் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை கிடைப்பதில்லை. நெல் விலை அதிகரிக்கும்போது அரிசி விலை அதிகரிக்கும். நெல் விலை குறையும்போது அரிசி விலை குறைவடையும். இதுவே சந்தை மரபு. ஆனால் இங்கு நெல் விலை அதிகரிக்காத நிலையில் அரிசியின் விலை அதிகரிக்கப்படுகிறது.

ஒரு விவசாயி ஒரு கிலோ நெல்லை உற்பத்தி செய்ய 23 ரூபா 63 சதம் செலவாகின்றது. இரண்டாயிரம் ஏக்கரில் நெல் உற்பத்தியில் ஈடுபட்டால் அவருக்கு 16 ஆயிரம் ரூபா கிடைக்கும். சாதரணமாக அந்த விவசாயி 6 மாதங்களுக்கு தமது ஜீவனோபாயத்தை நடத்திச் செல்ல அத்தொகை போதுமானதல்ல.

ஒரு கிலோ நெல்லை 23 ரூபாவுக்கு கொள்வனவு செய்து அதனை 40 ரூபாவுக்கு விற்பனை செய்யும் சந்தர்ப்பம் அரசுக்கு உள்ளது. ஆனால் 23 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்டு 70 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. நெல், அரிசி விலை நிர்ணயம் தொடர்பான முறையான பொறிமுறை ஒன்று அரசிடம் இல்லாத காரணத்தினாலேயே இவ்வாறு தலைகீழாக மேற்கொள்ளப்படுகின்றது.

எனவே சரியான விலை நிர்ணய பொறிமுறை ஒன்று பின்பற்றப்பட வேண்டும். அத்துடன் விவசாயிகளிடம் இருந்து அதிகளவு நெல்லை அரசு கொள்வனவு செய்ய வேண்டும் - என்றார். (ஒ-5)

# கப்பக்கரர்களின் சொர்க்கபுரியாக மாறிவரும் பேலியகொட மீன் சந்தை

## ஐ.தே.க. உறுப்பினர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப்.8

பேலியகொட மீன்சந்தை கப்பக்காரர்களின் சொர்க்கபுரியாக மாறிவருகின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிசன் நேற்று குற்றம் சாட்டினார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற உணவு (திருத்தம்) சட்டமூலம் மற்றும் நெல் சந்தைப்படுத்தல் தொடர்பான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

யாழ்ப்பாணம், வவுனியா உள்ளிட்ட மாவட்டங்களில் நெல் கொள்வனவு செய்யப்படுகின்ற அதேவேளை, அனுராதபுரம் மாவட்ட விவசாயிகளிடம் இருந்து ஒரு நெல் மணி கூட இதுவரை கொள்வனவு செய்யப்படவில்லை. நெல் ஈரப்பதத்துடன் காணப்படுகின்றதால் அதனை களஞ்சியப்படுத்துவது இயலாத விடயம் என்று காரணம் கூறப்படுகிறது. இந்த நிலையில், இந்தப் பிரச்சினைக்கு அரசு இதுவரை தீர்வு தரவில்லை.

இந்தியாவிலிருந்து தக்காளி இறக்குமதி செய்யப்பட்டு, தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தில் விற்பனை செய்யப்படுகிறது. தக்காளி இறக்குமதி செய்வதற்கு எவ்வித தேவைப்பாடும் இல்லாத நிலையில் அரசு வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்துள்ளது.

கொழும்பிலிருந்த மீன் சந்தை பேலியகொடக்கு மாற்றப்பட்டுள்ள நிலையில் அங்கு கப்பக்காரர்களின் அட்டகாசம் நாளுக்கு நாள் பெருகி வருகின்றது. இதைத் தடுக்க அரசு தலையிட வேண்டும் - என்றார். (ஒ-5)

# தமிழர் வழங்கிய ஆணையை கருத்தில்கொண்டு ஜனாதிபதி உடன் தீர்வை முன்வைக்கவேண்டும்

## நாடாளுமன்றில் அரியநேத்திரன்

கொழும்பு, ஏப்.8

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமிழ் மக்கள் வழங்கிய ஆணையை ஜனாதிபதி கருத்திற்கொண்டு தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு தீர்வுத் திட்டத்தை இழுத்தடிக்காமல் தீர்வு வழங்க வேண்டும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ப. அரியநேத்திரன் நேற்று முன்தினம் தெரிவித்தார்

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற உணவு (திருத்தம்) சட்ட மூலம் மற்றும் நெல் சந்தைப்படுத்தல் தொடர்பான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த 22 ஆம் திகதி ஜனாதிபதி நாடாளுமன்றில் உரை நிகழ்த்தினார். மக்கள் வழங்கிய ஆணையை சகல கட்சிகளும் குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சி மதிக்க வேண்டும். கடந்த காலத் தேர்தல்களில் பல படிப்பினைகளை நாம் கற்றுக் கொண்டோம் என்று கூறினார்.

அதே போன்றுதான் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடந்த பொதுத் தேர்தல், உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரும் வெற்றியைக் கண்டது. ஆதலால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு அங்குள்ள மக்கள் வழங்கிய ஆணையை ஜனாதிபதி கருத்திற் கொண்டு , இனப்பிரச்சினைக்குத் தீர்வுத் திட்டத்தை இழுத்தடிக்காமல் நல்லதொரு தீர்வைத் தர வேண்டும்.

வெள்ளம் ஏற்பட்டு இரண்டு மாதங்கள் கழிந்துள்ளன . வெள்ளத்தால் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு லட்சத்து 43ஆயிரம் ஏக்கர் பயிர் நிலம் நாசமடைந்துள்ளது. இதில் 6 ஆயிரத்து 500 ஏக்கர் மாத்திரமே காப்புறுதி செய்யப்பட்டிருந்தது. இதனால் விவசாய மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று அரசுக்கு கூறியிருந்த போதும் எந்தவொரு நடவடிக்கையும் இன்று வரை மேற்கொள்ளப்படவில்லை.

திருகோணமலை மாவட்டத்தில் சம்பூரில் 15 ஆயிரம் ஏக்கர் நிலம் உயர்பாதுகாப்பு வலயமாகக் காணப்படுகிறது. அதில் மக்களை மீளக்குடியமர்த்தி விவசாய நடவடிக்கைகளையும் மேற்கொள்ளமுடியும். ஆனால் அப்படி எதுவும் அந்தத் தரிசு நிலத்தில் இதுவரை நடக்கவில்லை.

தாதியர்களுக்கான தேர்தல் ஒன்று நாளை மறுதினம் 9ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில் வாக்களிக்க கிழக்கு மாகாணத்தில் 1500 தாதியர் தகுதி பெற்றுள்ளனர். ஆனால் அவர்கள் வாக்களிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. ஜனநாயகமான இந்த நாட்டில் இவ்வாறான ஒரு நிலைமை ஏற்றட்டுள்ளது. இது தொடர்பாக அரச தாதி உத்தியோகத்தர் சங்கத்தின் கவனத்துக்கு கொண்டு வந்தோம். அந்த தாதியர்களின் பெயர்கள் வாக்காளர்கள் இடாப்பில் குறிப்பிட்டுள்ளது. எனவே இத் தேர்தலை இடைநிறுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மட்டு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் தமிழர் காணிகள் சூறையாடப்படுகின்றன. அத்துமீறல்கள், இடம்பெறுகின்றன. தமிழ் பேசும் மக்களின் குடிப்பரம்பலை தடுக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது குறித்து அரசு கவனம் செலுத்த வேண்டும் - என்றார். (ஒ-5)

# நியமனப் பணிப்பாளர்களால் சங்கங்கள் நிர்வகிப்பது ஜனநாயகத்துக்கு முரணானது

## சீ.வி.கே. சிவஞானம் தெரிவிப்பு

யாழ். மாவட்டத்திலுள்ள அநேகமான பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நியமன இயக்குனர் சபைகளினாலேயே நீண்டகாலமாக நிர்வகிக்கப்பட்டு வருகின்றன என இலங்கைத் தமிரசுக் கட்சியின் துணைச் செயலாளர் சீ.வி.கே. சிவஞானம் செய்திக் குறிப்பில் தெரிவித்தார்.

அவர் தனது செய்திக் குறிப்பில் மேலும் தெரிவித்ததாவது:-

கூட்டுறவு அமைப்புகள் யாவும் அடிப்படை ஜனநாயகத்தின் இருப்பிடங்களில் ஒன்றென்பதால், மக்களால் தெரிவுசெய்யப்படாத நியமனப் பணிப்பாளர்களால் இவ்வாறு சங்கங்கள் நிர்வகிக்கப்படுவது ஜனநாயக விழுமியங்களுக்கு முரணானது.

மிக நீண்டகாலமாக அரச அலுவலர்களால் நிர்வகிக்கப்பட்டு வந்த நகர சபைகள், பிரதேச சபைகள் என்பவற்றுக்குக் கூட தேர்தல் நடைபெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்ந்தும் நியமனப் பணிப்பாளர்களினால் நிர்வகிக்கப்படுவது நியாயப்படுத்த முடியாத ஒன்றாகும்.

எனவே, நியமனப் பணிப்பாளர்களினால் நிர்வகிக்கப்படும் சகல பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பொதுச் சபை மற்றும் பணிப்பாளர் சபைத் தேர்தல்களை நடத்தி கூட்டுறவின் ஜனநாயக கோட்பாட்டை மீண்டும் நிலை நிறுத்துமாறு வேண்டுகிறோம் என தெரிவித்தார். (ஏ)

# வலைபந்தாட்டம்

தென்மராட்சி, ஏப்.8

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் 15,17,19 ஆகிய வயது பெண்கள் வலைப் பந்தாட்ட அணிகளுக்கு இடையிலான சுற்றுப் போட்டிகள் நாளை சனிக்கிழமை தொடக்கம் மூன்று தினங்கள் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி. மைதானத்தில் நடைபெறும்.

ஏப்ரல் 9,10,12 ஆகிய தினங்களில் போட்டிகள் நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஒ-207)

# சண்டிலிப்பாயில் வெகுவிரைவில் புதிய சந்தை அமைக்கப்படவுள்ளது

சண்டிலிப்பாயில் பொதுமக்களின் நன்மைகருதி வெகுவிரைவில் புதிய சந்தை ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் அதிகளவான குடும்பங்கள் வசிப்பதனால் அத்தியாவசியப் பொருள்களை வாங்குவதற்கு மானிப்பாய், சங்கானை ஆகிய பொதுச் சந்தைகளுக்குச் செல்லவேண்டியதால் சண்டிலிப்பாய் பிரதேசத்தில் புதிய சந்தை ஒன்றினை அமைத்துத் தருமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் இடம் பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதனடிப்படையில் சந்தைக்குப் பொருத்தமான காணியினை ஒழுங்கு செய்து கொடுத்தால் சந்தை அமைத்துத் தருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக நாடாளுமன்றஉறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சிப் பிரதேச தடகளப் போட்டிகள்

தென்மராட்சி, ஏப்.8

தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தடகளப் போட்டிகள் நாளையும் நாளை மறுதினமும் வரணி மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளன.

நாளை தெரிவுப் போட்டிகளும் மறுநாள் இறுதிப் போட்டிகளும் நடைபெறும்.

பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் நடைபெறும் இந்தப் போட்டிக்கு முதன்மை விருந்தினராக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரும், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரை, உதவிப் பணிப்பாளர் சு.கனகராசா ஆகியோரும் கலந்து கொள்வர்.

மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் கைதடி வளர்மதி விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான கர பந்தாட்ட இறுதிப் போட்டியும்-

மட்டுவில் தெற்கு அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களின் இடைவேளை நிகழ்வும் - நடைபெறும்.

(ம-207)

## மல்லாகம் ம.வி 3ஆம் இடம்

வலி. வடக்கு, ஏப்.8

வலிகாமம் கல்வி வலையப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் மல்லாகம் மகா வித்தியாலயம் மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற மூன்றாம் இடத்துக்கான போட்டியில் மல்லாகம் மகாவித்தியாலயமும் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயமும் மோதிக் கொண்டன.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் சுற்றை அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் 25:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

அடுத்த இரண்டு சுற்றுக்களையும் மல்லாகம் மகாவித்தியாலயம் 25:19, 25:18 என்றபுள்ளிகள் அடிப்படையில் வென்றது.

ஆட்ட நிறைவில் மல்லாகம் மகாவித்தியாலயம் 2:1 என்ற அடிப்படையில் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தை வென்று மாவட்ட மட்டத்தில் விளையாடத் தகுதி பெற்றது.

(த-86)

## பாடசாலை ஹொக்கிச் சங்கத்தில் யாழ். மாவட்ட அணிகளும் இணைவு

வலி. வடக்கு, ஏப்.8

இலங்கைப் பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்துடன் யாழ். மாவட்டப் பாடசாலைகள் 30 வருட இடைவெளிக்குப் பின்னர் இணைக்கப்பட்டுள்ளன.


கடந்த ஆண்டு யாழ். மாவட்டப் பாடசாலைகள் ஹொக்கிச் சங்கம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் நோயல் விமலேந்திரனின் முயற்சியினால் அமைக்கப்பட்டது. இதன் பலனாக தேசிய மட்டத்தில் இப்போது யாழ். மாவட்டப் பாடசாலைகளும் இணைக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆகியன இதில் இணைக்கப்பட்டுள்ளன.

பெண்கள் அணிகளாக மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலை, உடுவில் மகளிர் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆகியன இணைக்கப்பட்டுள்ளன.

இதே வேளை:-

இலங்கைப் பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்துடன் இணைய விரும்பும் பாடசாலைகளை யாழ். மாவட்ட ஹொக்கிச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்படுகின்றது. (த-86)



சிரேஸ்ட லீக்குகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட பருத்தித்துறை உதைபந்தாட்ட வீரர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ். நாவலர் மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நினைவுச் சின்னத்தை பருத்தித்துறை லீக் அணித் தலைவர் ராஜ்குமாரிடம் வழங்கிக் கௌரவிக்கிறார். (த-14)

## அருணோதயா முதலிடம்

யாழ்ப்பாணம், ஏப்.8

தெல்லிப்பழை கோட்ட மட்ட மெய்வன்மைப் போட்டியில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி முதலிடம்பெற்றுள்ளது.

இந்தப் போட்டியில் அருணோதயக் கல்லூரி 56 முதலிடங்களையும், 36 இரண்டாமிடங்களையும், 19 மூன்றாம் இடங்கையும் பெற்று முதலிடத்தில் உள்ளது. (த)

# 17 வயதுப் பிரிவு உதைபந்தாட்டம்; தெல்லிப்பழை மகாஜனா சம்பியன்



யாழ்ப்பாணம்,ஏப்.8

இலங்கை உதைப்பந்தாட்டச் சம்மேளனத்தினால் பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்குடையிலான உதைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி சம்பியனானது.

கடந்த வாரம் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இந்த இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியை எதிர்த்து ஊர்காவற்துறை சென்.அன்ரனிஸ் கல்லூரி அணி மோதியது.

இரு கல்லூரி அணிகளும் ஆட்டம் தொடங்கியது முதல் மிகவும்விறுவிறுப்பானஆட்டத்தை வெளிப்படுத்தின. ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்ட போது இரு கல்லூரி அணிகளும் தலா ஒரு கோலினைப் பெற்றிருந்தன.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரு அணியினரும் மேலும் கோல்களைப் பெற வேண்டும் என்ற உத்வேகத்துடன் ஆடினார்கள்.

இரு தரப்பினரும் எதிரணியின் கோல் பரப்பை அடிக்கடி ஆக்கிரமித்த வண்ணமிருந்தனர்.

இந்த வேளையில் மகாஜனக் கல்லூரி அணி தமக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தி தமது அணிக்கான இரண்டாவது கோலைப் போட்டது.

ஆட்டம் நிறைவடைந்த போது தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரி அணியை 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டு சம்பியனானது.(த-23)

## விளையாட்டு விழா

காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம. வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

காரைநகர் உதவி அரச அதிபர் ஆர்.டி.ஜெயசீலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எவ்.ஜே. ரூபசிங்கம், தொழிலதிபர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம், காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா ம.ம.வித்தியாலய அதிபர் பொ.சிவானந்தராஜா ஆகியோரும் கலந்து கொள்வர்.

(ம-250)

# அரியாலை பெரு விளையாட்டு விழா இறுதிப் போட்டிகள் 10 ஆம் திகதி

கொழும்புத்துறை, ஏப்.8

அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தின் 92 ஆவது விழாவின் பெரு விளையாட்டு விழாவின் இறுதிச் சுற்றுப் போட்டிகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பகல் இரவுப் போட்டிகளாக அரியாலை சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

உள்ளூர் மற்றும் மாவட்ட மட்டத்தில் நடைபெற்ற சுற்றுப் போட்டிகளின் இறுதியாட்டங்கள் ஞாயிற்றுக்கிழமை பி.ப.2 மணி முதல் இடம்பெறும்.

துடுப்பாட்ட (உள்ளூர்) போட்டியில் அரியாலை சரஸ்வதி ச.ச. நிலைய அணியும், அரியாலை ச.ச.நிலைய அணியும் மோதுகின்றன. மாவட்ட மட்டத் துடுப்பாட்டப் போட்டியில் யாழ். யமகா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

மாவட்ட மட்டப் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் வி.கவும் யாழ்.பல்கலைக்கழக அணியும் மோதவுள்ளன. மாலை 6 மணிக்கு மின்னொளியில் நடைபெறும் இறுதிப் போட்டிகளில் கரப்பந்தாட்டம், கபடி ஆகியவற்றில் உள்ளூர் மட்டத்தில் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையமும், அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய அணிகள் மோதுகின்றன.

கெந்தி அடித்தல் போட்டியில் அரியாலை அருணோதயா சனசமூக நிலைய அணியை எதிர்த்து அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய அணி மோதும். கிளித்தட்டுப் போட்டியில் அரியாலை காந்தி சனசமூக நிலைய அணியும் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய அணியும் மோதவுள்ளன.

கரப்பந்தாட்ட மாவட்ட மட்டப் போட்டியில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும், உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

உதைபந்தாட்டத்தில் 3 ஆம் இடத்துக்கான போட்டி யாழ். நீதிவான் நீதிமன்ற அணிக்கும் யாழ்.மாநகர சபை 'பி' அணிக்குமிடையில் நடைபெறும்.

உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் யாழ்.மாநகர சபை 'ஏ' அணியை எதிர்த்து யாழ் மாவட்டச் செயலக அணி மோதவுள்ளது. (த-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேய்ச்சல் நிலங்களில் விவசாயம்; தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை

மட்டக்களப்பு, ஏப்.8

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் எல்லைப் பிரதேசமான வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கிராமங்களில் மேய்ச்சல் நிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களில் அத்துமீறி விவசாயச் செய்கையில் ஈடுபடுபவர்களை வெளியேற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா மாவட்ட அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை மட்டக்களப்பு வவுணதீவு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்ற நீர்ப்பாசன விவசாயச் செய்கை ஆரம்பக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா. துரைரெட்ணம், மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம். உட்பட அரச அதிகாரிகளும் விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மேற்குப்புற எல்லையில் கால்நடைகளுக்குரிய மேய்ச்சல் தரையில் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த பெரும்பான்மை இனத்தவரால் அத்துமீறி விவசாயம் செய்யப்படுவதுடன் அங்கு வேலிகளும் அமைக்கப்படுவதாக இந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா இது தொடர்பாகத் தெரிவிக்கையில், இந்த நடவடிக்கையை ஆரம்பத்திலேயே தடுக்க வேண்டும். இதற்கு அரச அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். இதற்குப் பதிலளித்த அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக உடனடியாகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலாளருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், இந்த நடவடிக்கையை உடனடியாக ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு வந்து தீர்த்து வைப்பதற்கு ஒரு வார காலம் அவகாசம் தருமாறும் தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார். (204)

# காட்டு யானைகள் அட்டகாசம்; 70 குடும்பங்கள் இடப்பெயர்வு

## தற்காலிக கூடாரங்களில் மக்கள் தஞ்சம்

மட்டக்களப்பு, ஏப்.8

மட்டக்களப்பு மாவட்டத்தில் வவுணதீவு , பட்டிப்பளை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் கடந்த மூன்று மாத காலத்துக்குள் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது. இதனால் சுமார் 70 வீடுகள் வரை சேதமடைந்துள்ளன. பாதிக்கப்பட்ட மக்கள் தற்காலிக கூடாரங்களிலும் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

யானைகளைக் கட்டுப்படுத்தும் விடயத்தில் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரி கள் அசமந்தப் போக்கில் உள்ளனர் என அந்தப் பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

காந்திநகர், பன்சேனை, காஞ்சிரங்குடா, பாவற்கொடிச்சேனை, தாந்தாமலை ஆகிய கிராமங்களிலேயே சுமார் நான்கிற்கும் மேற்பட்ட யானைகள் வீடுகளைச் சேதமாக்கி வருகின்றன. அத்துடன் அந்தக்கிராம வாசிகளையும் தாக்கி வருகின்றன.

காட்டு யானைகளின் அச்சத்தால் மக்கள் குழுக்கள் குழுக்களாக மாலை 5 மணிக்குப் பின்னர்.தீமூட்டிக்கொண்டு அச்சத்துடன் காலத்தைக் கழித்து வருகின்றனர்.

கடந்த வருடமும் இந்தவருடமும் இது வரை படுவான்கரைப் பிரதேசத்தில் யானை தாக்கி 15பேர் உயிரிழந்துள்ளனர்; 19பேர் படுகாயமடைந்துள்ளனர்; 108வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன; 55வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன; பல ஏக்கர் பயிர்களும் தென்னை மரங்களும் யானைத் தாக்குதலில் சேதமடைந்துள்ளன என்று அந்தப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

## மீளக் கட்டியெழுப்ப...



அம்பாறை மாவட்டத்தின் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பணத்திற்கான வேலைத்திட்டங்கள் நடைபெற்றுவருகின்றன. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீள் புனரமைப்புச் செய்தல் தொழில் பாதிக்கப்பட்டோர்களுக்காக வருமானத்தைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொடுத்தல் போன்ற நோக்கங்களுக்காக இந்த வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. (204)

# நாவிதன்வெளி பிரதேச செயலகம் நடத்தும் இரண்டாவது கலாசாரப் பெருவிழா இன்று

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த நாவிதன்வெளி பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடத்தும் பிரதேச கலாசாரவிழா இன்று வெள்ளிக்கிழமை நடை பெறவுள்ளது.

நாவிதன்வெளி பிரதேச செய லகக் கலாசாரப் பேரவை நடத்தும் இரண்டாவது பிரதேச கலாசார விழாவான இந்தப் பெருவிழா பிரதேச செயலக அரங்கில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

கடந்த 2000 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் திகதி நாவிதன் வெளிபிரதேச செயலாளராகப் பதவியேற்ற கலாநிதி எம்.கோபாலரெட்ணம் இன்றுவரை பிரதேச அபிவிருத்திக்காகவும் பிரதேச மக்களின் நலன்களுக்காகவும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகின்றார்.

பிரதேச அரசியல் முக்கியஸ் தர்கள், மாகாணசபை உறுப்பினர், பிரதேச சபைத் தவிசாளர் உட்படப் பல அரசசார்பற்ற நிறுவனங்களின் அனுசரணையுடனும் ஒத்துழைப்புடனும் இந்தப் பிரதேசத்தில் பல அபிவிருத்திப் பணிகளைப் பிரதேச செயலாளர் கலாநிதி கோபால ரெட்ணம் முன்னெடுத்துள்ளார்.

இவரது அர்ப்பணிப்பான சேவையைக் கௌரவித்து நாவி தன்வெளி முதலாம் பிரிவில் அமைக்கப்பட்டுள்ள 50 வீட்டுத்திட்டப் பகுதிக்கு அந்தப் பகுதி மக்கள் கோபாலபுரம் எனப் பெயரிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (204-30)

# சப்ரகமுவ பல்கலைக்கழகம் 18 இல் மீளஆரம்பம்

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் இரண் டாம், மூன்றாம், நான்காம் ஆண்டு மாணவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 18 ஆம் திகதி ஆரம்பிக்கப்படுமென உபவேந்தர் பேராசிரியர் மஹிந்த எஸ்.ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

மூடப்பட்டிருந்த சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் முதலாம் ஆண்டு மாணவர்களின் வகுப்புகள் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகியமை குறிப்பிடத்தக்கது.

# வீடொன்றினுள் 64 நாக பாம்புகள்

மட்டக்களப்பு மாவட்டம், செட்டிபாளை யம் பகுதியில் உள்ள வீடொன்றினுள் இருந்து 64 நல்ல பாம்புக்குட்டிகள் பிடிக்கப்பட்டுள்ளன. கடந்த செவ்வாய்க்கிழமை காலை செட்டிபாளையம் வைத்தியசாலை வீதியில் உள்ள கண்ணதாசன் என்பவரது வீட்டினுள் இருந்தே இந்த நல்ல பாம்புக் குட்டிகள் பிடிக்கப்பட்டன.

இந்த வீட்டை துப்புரவு செய்துகொண்டிருந்தபோது அங்கிருந்து ஒரு பாம்பு ஓடுவதை வீட்டு உரிமையாளர் கண்டார். இதனையடுத்து அந்தப்பகுதியில் தேடியபோது ஓர் இடத்தில் 65 பாம்பு முட்டைகளின் கோதுகளும், 64 பாம்புக் குட்டிகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

# இருளில் மூழ்கியுள்ள வீதிகள்

கடந்த பல மாதங்களாக அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் பல வீதிகள் மின்விளக்குகள் அற்ற நிலையில் இருளில் மூழ்கியுள்ளன.


தற்போது புதிதாகத் தேர்தல் நடைபெற்று புதிய உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களின் முதல்கட்ட வேலையாக இருளில் மூழ்கியுள்ள வீதிகளில் மின்விளக்குகளைப் பொருத்துமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். வெள்ளத்தின் பின்னர் பல வீதிகள் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றன. இரவு நேரங்களில் வெளிச்சமற்றுக் காணப்படும் இந்த வீதிகளில் மக்கள் பயணிக்கும் போது குழிகளுக்குள் விழவேண்டிய அபாயம் ஏற்படுகிறது.

அட்டாளைச்சேனை டீன்ஸ் வீதி, பெரிய ஜூம்ஆப் பள்ளிவாசல் வீதி, ஆற்றோர வீதிகள் ஆகியனவும் இருளில் மூழ்கியுள்ளன.

# மூன்று கோடி ரூபா செலவில் வெள்ளத்தடுப்பு அணைக்கட்டு

மட்டக்களப்பு,ஏப்.8

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குக் காரணமாகச் சேதமடைந்த மட்டக்களப்பு, வாழைச்சேனைப் பிரதான வீதியில் ஏற்பட்டுள்ள அழிவுகளைத் திருத்தியமைத்து, இந்த வீதியைச் சேதப்படுத்தி விடாமல் தடுக்கும் வெள்ளத்தடுப்பு அணைக்கட்டு அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஜப்பானிய அரசின் நிதியுதவியுடன் சுமார் 3 கோடி ரூபா செலவில் இந்தத் தடுப்பு அணைக்கட்டு அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



நெடுஞ்சாலைகள் அமைச்சின் அனுசரணையுடன் வீதி அபிவிருத்தித் திணைக்களம் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது. ஒரு கிலோமீற்றர் நீளத்துக்கு அமைக்கப்பட்டுவரும் இந்த வெள்ளத்தடுப்புஅணைக்கட்டு அமைக்கும் பணிகள் சில மாதங்களுக்குள் நிறைவடையுமென வீதி அபிவிருத்தித் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபால்மா அதிபரை வேலைநீக்கம் செய்யுமாறு கோரி மேலதிக வேலைநேரப் போராட்டத்தில் தொழிற்சங்கங்கள்

கொழும்பு, ஏப்.8

தபால்மா அதிபரைப் பதவியிலிருந்து நிறுத்த வேண்டும் என்பது உட்படப் பல கோரிக்கைகளை முன்வைத்து தபால் சேவை தொழிற்சங்கங்கள் மேலதிக வேலைநேரப்போராட்டமொன்றை ஆரம்பித்துள்ளன.

இந்த மேலதிக வேலை நேரப் போராட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு ஆரம்பிக்கப்பட்டது என இலங்கை தபால் சேவைச் சங்கத்தின் தலைவர் ஜயந்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

தபால்மா அதிபரைப் பதவியிலிருந்து உடனடியாக நிறுத்த வேண்டும் என்பதே தமது பிரதான கோரிக்கை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தபால்மா அதிபரைப் பதவியிலிருந்து நிறுத்தும் வரை தாம் இந்தப் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கோரிக்கைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணப்படாத பட்சத்தில் தாம் எதிர் வரும் தினங்களில் பரந்தளவிலான போராட்டங்களை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தபால் சேவை ஊழியர்களின் பிரச்சினைகளுக்கு வெகு விரைவில் தீர்வொன்றைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தபால் சேவைகள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

தபால் திணைக்களத்தில் ஒன்றிணைக்கப்பட்ட தபால் சேவையில் 'அ' தரத்தில் ''ஆ'' பிரிவில் 1,120 அதிகாரிகளுக்கு வெற்றிடங்கள் காணப்படுகின்றனஎனத்தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக நாடெங்குமுள்ள 647 பிரதான தபாலகங்களின் பணிகளை கிரமமாக முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை தோன்றியுள்ளது எனத் தபால்துறையின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அவ்வாறே 'ஆ' தரத்தில் 2 'ஆ' பிரிவில் 517 பிரதான உத்தியோகத்தர்களுக்கு வெற்றிடம் காணப்படுகின்றது.

2001 ஆம் ஆண்டு முதல் 2011 வரை தபால் திணைக்களத்துக்குப் புதியவர்கள் சேர்த்துக் கொள்ளப்படாத காரணத்தினாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

புதிய நியமனங்களுக்காக அமைச்சரவையின் அனுமதி கோரப்பட்டுள்ளது எனவும் அனுமதி கிடைத்ததும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தபால்துறை அமைச்சர் ஜீவன் குமாரதுங்க தெரிவித்தார்.

# சுகாதார அமைச்சு, யுனிசெவ் இணைந்து தேசிய போசாக்குச் செயல்திட்டம்

தேசிய போசாக்குச் செயல் திட்டமொன்றை மேற்கொள்வதற்கு யுனிசெப் அமைப்பு சுகாதார அமைச்சுக்கு இணக்கம் தெரிவித்துள்ளது.

நாட்டிலுள்ள தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு சுகாதார போசாக்குக்கான தேசிய செயற்றிட்டமொன்றைஇதுவரை நடைமுறைப்படுத்தவில்லை என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனால் போசாக்குக் குறைபாடுகள் தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் எழுந்துள்ளன என்று அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தநிலையில், தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் சரியான முறையில் போசாக்கைப் பெற்றுக் கொடுக்கும் வகையில்செயற்றிட்டமொன்றை நடைமுறைப்படுத்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

# நிலங்கள் மூலம் வருமானம் பெறத் திட்டம்

நாட்டின் அனைத்து நிலங்களையும் வருமானம் பெற்றுக் கொள்ளும் விதமாக மாற்றுவதே நோக்கம் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில்கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். பொருளாதார ரீதியில் பத்து லட்சம் குடும்பங்களை உருவாக்குவதற்கான திவி நெகும வேலைத்திட்டம் இதற்கு சக்தி அளிக்கும் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

# தெற்கில் 9 திட்டங்களுக்கு 3,141 கோடி ரூபா ஒதுக்கீடு

கொழும்பு, ஏப்.8

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஊடாக 9 வேலைத் திட்டங்களுக்கு நாடு முழுவதும் 3 ஆயிரத்து 141 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியின் ஊடாக மேல்மாகாண ரன் அருண, ருகுணு உதயம், மலைநாட்டு வசந்தம், வட மேல் மாகாண புபுதுவ, சப்ரகமுவ அருணலோ கய, புபுதுவ வெல்லஸ்ஸ,ரஜரட்ட உதயம் ஆகிய வேலைத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டங்களில் குடிதண்ணீர், விவசாயத்தை மேம்படுத்துதல், கண்ணிவெடி அகற்றல், மீள் குடியமர்வு, புதிய வீட்டுத் திட்டம், கல்வி, சமூக அபிவிருத்தி உட்பட்ட தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

வறுமை ஒழிப்பு முதலீட்டு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், பிரதேசத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டுவருகின்றது. நாட்டின் பொருளாதாரத்தை சக்தி மிக்கதாக மாற்றுவதற்காகவும் மனித வாழ்வை மேம்படுத்தும் நோக்குடனும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இவ்வாறான வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்கிறார். அத்துடன் எதிர் காலங்களிலும் பல்வேறு அபிவிருத் தித் திட்டங்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றார்-என்றார்.

## மாநாடு...




சார்க் நாடுகளின் பொலிஸ் தலைவர்களின் 9ஆவது மாநாடு கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்தநிகழ்வில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கலந்துகொண்டு உரைநிகழ்த்துகின்றார்.

(204)

# பிரதான வைத்தியசாலைகளில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவுகள்

கொழும்பு, ஏப்.8

புற்றுநோய்க்கான சிகிச்சைப் பிரிவுகளை நாடெங்குமுள்ள பிரதான வைத்தியசாலைகளில் அமைப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதன் முதற்கட்டமாக 12 கோடி ரூபா செலவில் குருநாகல் போதனா வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட கட்டடம் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவினால் கடந்த திங்கட்கிழமை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

அந்த நிகழ்வில் அமைச்சர் உரையாற்றும்போது தெரிவித்தவை வருமாறு:-

மூன்று மாடிகளுடன் அமைந்துள்ள இந்தக் கட்டடத்தில் ஒரே நேரத்தில் நூறு நோயாளிகள் தங்கி சிகிச்சை பெறமுடியும்.

இதற்கு மேலதிகமாக கராப்பிட்டிய, கண்டி, அம்பாறை, மட்டக்களப்பு, அநுராதபுரம், யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்டங்களில் உள்ள போதனா வைத்தியசாலைகளிலும் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவுகள் அமைக்கப்படவுள்ளன.

இதுவரை புற்றுநோய்க்கான சிகிச்சை மஹரகம வைத்தியசாலையில் மட்டுமே மேற் கொள்ளப்பட்டதால் அங்கு இட நெருக்கடி ஏற்பட்டது. அத்துடன் வெளி மாவட்டங்களில் இருந்து வரும் நோயாளிகள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகினர். இந்த நிலையைத் தவிர்க்கும் முகமாகவே புற்றுநோய் சிகிச்சைப் பிரிவுகள் நாடெங்கும் விஸ்தரிக்கப்படவுள்ளன.

இலவச மருத்துவ சேவைகளுக்காக அரசுவருடாந்தம் ஆயிரம் கோடி ரூபாவை செலவிடுகிறது. இந்தத் தொகையில் 350 கோடி ரூபா புற்று நோயாளிகளுக்கு செலவாகிறது. சில நாடுகளில் புற்று நோய்க்கான மருந்துகள் 80 ஆயிரம் ரூபா முதல் 3 லட்சம் ரூபா வரை விற்கப்படுகின்றன. இலங்கை அரசு எவ்வித கட்டணமும் இன்றி இலவசமாகவே சிகிச்சைகளை அளித்து வருகிறது.

இந்த நோய்க்கான 14 அத்தியாவசிய மருந்துகளை விற்பனை செய்ய வெளிநாட்டு நிறுவனமொன்று ஒப்பந்தம் செய்தது. அந்த மருந்துகளை ஒழுங்காக வழங்காததால் நோயாளிகள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

எனவே, விலை கூடிய மருந்துகளை வேறு நிறுவனங்களில் இருந்து இறக்குமதி செய்ய சுகாதார அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது - இவ்வாறு சுகாதார அமைச்சர் கூறினார்.

# இழந்துபோன வாழ்வை மீளக்கட்டியமைக்க புலம்பெயர் உறவுகளின் உதவிகள் அவசியம்

கொழும்பு, ஏப். 8

எமது மண்ணில் நாம் இழந்துபோன வாழ்வை மீளக்கட்டியமைக்க புலம்பெயர் உறவுகளின் புரிதலுடனான பங்களிப்பு எமக்கு முக்கியமானதாகும். அவர்களது நற்பணிகளுக்கு நன்றியாக இந்த உதவிகளை எமது வாழ்வாதாரத்துக்கு முழுமையாகப் பயன்படுத்தி கடினமாக உழைத்து வாழ்வை மீளமைப்பது எமது கடமையாகும்.

இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன்.

போர் மற்றும் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்களுக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கிவரும் மகாசக்தி பெண்கள் அமைப்பின் ஊடாக 'கனடா அன்புக்கரங்கள்' அமைப்பு தலா பத்தாயிரம் வீதம் 20 பயனாளிகளுக்கு முதற்கட்டமாக உதவி வழங்கியுள்ளது.

இந்த உதவிகள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இக்கட்டான காலத்தில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு மகாசக்தி பெண்கள் அமைப்பு செய்த - செய்கின்ற சமூகம் நோக்கிய நற்பணி பாராட்டுக்குரியது. அரசியலுக்கு அப்பால் பொதுவான சமூகத்தின் வாழ்வாதாரங்களை மேம்படுத்த மகாசக்தி பெண்கள் அமைப்பு உழைக்க வேண்டும். அத்தோடு பெண்கள் தொடர்பான பிரச்சினைகள் போன்றவற்றுக்கான தீர்வுக்கு வழிகாட்ட வேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டுமல்லாது மகாசக்தியின் பணி விரிவடைந்து சென்று ஏனையோருக்கும் ஒளியூட்ட வேண்டும் அதற்கு ஆற்றலும் வசதியும் உள்ள அனைவரும் துணைநிற்க வேண்டும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விச்சாலைக் காட்சிகள்...



யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் மெய்வன்மைப் போட்டியில் வெற்றிபெற்ற இல்லத்துக்கான வெற்றிக் கிண்ணத்தை மாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் எஸ். அண்ணாத்துரை வழங்குகிறார். கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.யோகநாதன், கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன், தொழிலதிபர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் ஆகியோர் அருகில் உள்ளனர். (7)



யாழ்.செங்குந்தா இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியின்போது விருந்தினர்கள் மைதானத்துக்கு அழைத்து வரப்படுகின்றனர். (313)



யாழ்.இந்துக் கல்லூரியின் வணிகத்தினமும் 'வரவு' மலர் வெளியீடும் மாணவன் லோ.ஆரூரன் தலைமையில் கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மக்கள் வங்கியின் பிராந்திய தலைமை அலுவலகத்தின் உதவிப் பிராந்திய முகாமையாளர் க.சுசீந்திரன் நூலை வெளியிட்டு வைக்க முதற் பிரதியை சுன்னாகம் ரஞ்சனாஸ்புடைவையக உரிமையாளர் பெறுகிறார். (311)



யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் முன்னாள் அதிபர் அமரர் செ.கனகரத்தினம் உருவச் சிலையை அவரது பாரியாரும் பாடசாலையின் முன்னாள் ஆசிரியருமான திருமதி இ.கனகரத்தினம் திறந்து வைத்தார். (313)



புத்தூர் ஸ்ரீ பஞ்ஞசிக வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். கல்வி வலய கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் மாணவர் ஒருவருக்குப் பரிசில் வழங்கினார். (11)

## தென்மராட்சி வலய நாட்டுக்கூத்துப் போட்டி

தென்மராட்சி, ஏப்.8

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலயமட்ட நாட்டுக்கூத்துப் போட்டியும் சகல எழுத்துப் போட்டிகளும் எதிர்வரும் மே முதலாம் திகதிஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள மாணவர்களைத் தயார்படுத்தி உரிய நேரத்துக்கு முன்னர் போட்டி நிலையத்துக்கு அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

மாவட்ட மட்ட எழுத்துப் போட்டிகள் மே ஐந்தாம் திகதி நடைபெறுமெனவும் அறிவித்துள்ளார். (ம-207)

## புற்றுநோய் உதவி 250 ரூபாவால் அதிகரிப்பு

தென்மராட்சி, ஏப்.8

புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு சமூக சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும் மாதாந்த உதவு தொகை 250 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி தொடக்கம் இந்தக் கொடுப்பனவுத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளதாக மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் க.சிவகரன் சகல பிரதேச செயலகங்களுக்கும் அறிவித்துள்ளார். இதுவரை 250 ரூபா நாளாந்தம் உதவித் தொகையாக பெற்றவர்களுக்கு 500 ரூபாவாகவும், 500 ரூபா பெற்றவர்களுக்கு 750 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார். நோயினால் பாதிக்கப்பட்டவருக்கு 500 ரூபாவும் பிரதான தங்கி வாழ்வோர் 100 ரூபாவும் ஏனைய தங்கி வாழும் நபர்களுக்கு தலா 50 ரூபா வீதம் ரெக்கத் தொகை 750 ரூபா வரை வழங்கப்படுமெனவும் அறிவித்துள்ளார். (ஐ-207)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப்.8

''இலங்கை அரசியல் வரலாற்றில் ஏப்ரல்-05'' தொடர்பான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆரியகுளம் புதிய உயர்கல்வி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் ஆர்வலர்களைக் கலந்துகொள்ளுமாறு யாழ். சர்வதேச மார்க்சிய குழுவினர் அறிவித்துள்ளனர். (ம-313)


### தவறிவிட்டது

2/1, நக்காலேன், சுண்டுக்குளி என்னும் முகவரியைச் சேர்ந்த கனகசிங்கம் ஜசந்தா என்பவரது தேசிய அ.அட்டை (527722756V) 10.03.2011 அன்று யாழ்.நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

T.P:- 0771607710

(3068)(41,20,60)

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1981 ஆம் ஆண்டு, அனுசம், 4ஆம் பாதம் Faculty Of Management Studies and Commerce, Jaffna University இல் பட்டம் பெற்ற U.K இல் Work Permit இல் வேலை செய்யும் 5'10" உயரமுள்ள மணமகனுக்குப் படித்த, அழகிய லண்டனில் P.R உள்ள மணமகள் விரும்பத்தக்கது.

T.P:- 0779906220

### பரிசுத்த ஆவிக்குச் செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே! உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக, உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே என் வாழ்வின் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன்.

-அடியாள்.

(C/577430)(41,20,60)

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் - 114

திகதி - 06.04.2011

ஜாதிக சம்பத Jathika Sampatha

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து R அதிர்ஷ்ட இலக்கம் (10) வெற்றி இலக்கம் 4 8 9 1 9

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
| --- | --- | --- | --- |
| சுப்பர் பரிசு | R (10) 4 8 9 1 9 | ரூ. 14,660,780.00 | பரிசு - |
| 1 பரிசு | (10) 4 8 9 1 9 | ரூ. 2,000,000.00 | பரிசு 01 |
| 2 பரிசு | 4 8 9 1 9 | ரூ. 100,000.00 | பரிசு 03 |
| 3 பரிசு | 8 9 1 9 | ரூ. 10,000.00 | பரிசு 33 |
| 4 பரிசு | 9 1 9 | ரூ. 1,000.00 | பரிசு 320 |
| 5 பரிசு | 1 9 | ரூ. 50.00 | பரிசு 3017 |
| 6 பரிசு | 9 | ரூ. 20.00 | பரிசு 29007 |
| இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு | | | |
| 7 பரிசு | 4 8 9 1 | ரூ. 1,000.00 | பரிசு 31 |
| 8 பரிசு | 4 8 9 | ரூ. 100.00 | பரிசு 300 |
| 9 பரிசு | 4 8 | ரூ. 50.00 | பரிசு 3043 |
| 10 பரிசு | R | ரூ. 20.00 | பரிசு 11925 |
| 11 பரிசு | R (10) | ரூ. 100.00 | பரிசு 1378 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,270,440.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை

234/2, காலி வீதி, கொழும்பு 03.

தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631

இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு

ரூ.14,660,780.00

### UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

**Post of Assistant Lecturer in Hindu Civilization**

Further to our advertisement appeare in Uthayan dated 07.04.2011 on 17th page entertaining applications for the above post on contract basis, the closing date given in the advertisement should be read as 20th April 2011.

Registrar

08.04.2011

(C/577431)(31)

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

பொன்னம்பலம் சின்னத்தங்கம்

தோற்றம்: 09.08.1942

மறைவு: 09.03.2011

எமது குடும்பத் தலைவி அமரர் பொன்னம்பலம் சின்னத்தங்கம் அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் இன்று (08.04.2011) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளன.

அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி மேற்கு, கைதடி. மு.தபேந்திரன் (தயா).

(39-20-23)

### 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 09.03.2011 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

அமரர் கனகு நாகரத்தினம்

அவர்களின் வீட்டுக்கிரியைகள் கடந்த 06.04.2011 புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்றன.

இன்று (08.04.2011) வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் அன்னாரது ஆத்மசாந்திக் கிரியைகள் நடைபெறும். அதைத் தொடர்ந்து எமது இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெறும் அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நாகம்மாள் கோயில் வீதி, உடுவில். (39) -குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸின் தோல்வியில்தான் தமிழ் இனத்தின் எழுச்சி உள்ளது; சீமான் கூறுகிறார்

கரூர்,ஏப்8

தமிழர்களுக்கு நிகழ்ந்துள்ள கொடுமைகளை நினைத்துப் பாருங்கள். காங்கிரஸ் தோல்வியில்தான் தமிழ் இனத்தின் எழுச்சி உள்ளதால், தேசத்துரோகிகளை வீழ்த்தவேண்டும். இவ்வாறு இயக்க நிறுவுநரும், இயக்குநருமான சீமான் கூறியுள்ளார்.

கரூரில் நாம் தமிழர் இயக்கப் பொதுக்கூட்டம் நடந்தது. இங்கு சீமான் கலந்துகொண்டு மேலும் பேசியதாவது:

இலங்கையில் இதுவரை நடைபெற்ற இனப்படுகொலைக்கு இலங்கை அரசும், இந்தியாவின் ஆதரவும்தான் காரணம்.

தமிழர்கள் மான, இன உணர்வு உள்ளவர்கள் உண்மை என்றால் கரூரில் காங்கிரஸ் கட்சி தோற்கடிக்கப்பட வேண்டும். வேட்பாளர் ஜோதிமணி காங்கிரஸ் கட்சியில் இருந்து வெளியேறி, தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைக்குக் காரணமாக இருந்த காங்கிரஸை கேள்வி கேட்க வேண்டும்.

வாக்குக்குப் பணம் கொடுப்பதை காவல்துறை கட்டுப்படுத்துகிறது. தற்போது காவல்துறை இதே நேர்மையில் நடந்தால் நாடு சிறப்பாக இருக்கும். இதுவரை தேர்தல் ஆணையம் தேர்தலை அறிவிக்கும் ஆணையமாக மட்டுமே இருந்தது. இப்போதுதான் தேர்தலை நடத்தும் ஆணையமாக மாறி உள்ளது.

இதை எந்தக் கட்சியினரும் தடுக்கவில்லை. இலங்கையில் அதிகரித்து வரும் சீனர்களால் இந்தியாவின் பாதுகாப்பிற்கே ஆபத்து உள்ளது.



வேட்பாளர் ஜோதிமணி காங்கிரஸ் கட்சியில் இருந்து வெளியேறி, தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைக்கு காரணமாக இருந்த காங்கிரஸை கேள்வி கேட்க வேண்டும்.

தமிழகத்தில் தற்போது 8மணி நேரம் மின் நிறுத்தம் உள்ளது. இதனால் விவசாயம் பாதிப்படைந்துள்ளது. அதே போன்று தொழில் வளர்ச்சியும் பாதிப்படைந்துள்ளது. ஆனால் தமிழகம் வளர்ச்சி பாதையில் செல்வதாக பொய் சொல்கிறார்கள் நடப்பவனுக்கு சரியான பாதை கூட அமைத்துக்கொடுக்கவில்லை. ஒரு ரூபாவுக்கு அரிசி வழங்கப்பட்டது.

தமிழனால் அதற்கு கூட உழைக்க முடியாது என்று அதையும் இலவசமாக வழங்குகிறோம் என்று அரசியல் கட்சியினர் அறிக்கை வெளியிட்டுள்ளனர். அந்த அளவிற்கு தமிழன் தன் மானம் குறைத்து மதிப்பிடப்படுகிறது. இவ்வாறு அவர் மேலும் கூறினார்.

(201)

## நடிகை சுஜாதா காலமானார்



சென்னை,ஏப்.8

தமிழ் சினிமா உலகின் முன்னணி நடிகையான சுஜாதா உடல் நலம் பாதிக்கப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் சென்னையில் காலமானார். அவருக்கு வயது 59.

இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட சுஜாதா, கே.பாலச்சந்தரின் 'அவள் ஒரு தொடர் கதை' படத்தின் மூலம் தமிழ்த் திரையுலகில் அறிமுகமானவர்.

சிவாஜி, கமல், ரஜினி உள்ளிட்டோருடன் நடித்துள்ள இவர் தமிழ், மலையாளம், தெலுங்கு ஹிந்தி என நூற்றுக்கணக்கான படங்களில் நடித்துள்ளார். 'அந்தமான் காதலி', 'விதி' ஆகிய படங்கள் இவருக்குப் பெரும் பெயர் வாங்கித் தந்தவை ஆகும்.

(ஒ-10)

## கோவையில் எதிரணியினர் நடத்திய கூட்டம் விஜயகாந்த் பங்கேற்காதமையால் பரபரப்பு

### இறுதிவரை வருவார் என அறிவிப்பு

கோவையில் அ.தி.மு.க., தே.மு.தி.க., கூட்டணியை எதிர்க் கட்சிகள் வெகுவாக விமர்சித்து வந்த நிலையில், நேற்று முன் தினம் மாலை நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதாவும், தே.மு.தி.க., தலைவர் விஜயகாந்தும் ஒரே மேடையில் பிரசாரம் மேற்கொள்வார்கள் என பலத்த எதிர்பார்ப்பு நிலவியது.

இந்த நிலையில் நேற்றுமுன் தினம் காலைவரை விஜயகாந்த் கூட்டத்தில் பங்கேற்பார் என கூறப்பட்டது. பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ள விஜயகாந்த் தஞ்சாவூரில் இருந்து கோவை விரைந்து கொண்டிருக்கிறார் என்றும் கூறப்பட்டது. இதனால் இரு கட்சித் தொண்டர்கள் மத்தியிலும் பலத்த எதிர்பார்ப்பு இருந்தது.

இந்த நிலையில் விஜயகாந்த் கோவைக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை அவருக்குப் பதிலாக பண்ருட்டி ராமச்சந்திரன் கலந்துகொண்டார். மார்க்சிஸ்ட் கம்யூ., கட்சி பொதுச்செயலாளர் பிரகாஷ்கரத், இந்திய கம்யூனிஸ்ட் ஏ.பி.பரதன், ஆந்திர முன்னாள் முதல்வர் சந்திரபாபு நாயுடு ஆகியோர் மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டனர். அ.தி.மு.க. கூட்டணித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்று வருகிறது.

(201)

### இதுதான் வாக்குவேட்டையா...?



அ.தி.மு.க., கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்ற தேர்தல் பிரசாரப்பொதுக்கூட்டம் ஜெயலலிதா தலைமையில் கோவை நடந்தது. மேடைக்கு வந்த ஜெ., ஆயிரக்கணக்கான தொண்டர்களைப் பார்த்து உற்சாகத்துடன் கை அசைத்தார். அருகில் தெலுங்கு தேசக் கட்சித் தலைவர் சந்திரபாபு நாயுடு காணப்படுகிறார்.

## ரஹ்மானின் வாழ்க்கை வரலாறு புத்தகமாக வெளியீடு

மும்பை,ஏப்.8

இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மானின் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகம் மும்பையில் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.

திரைத்துறையைச் சேர்ந்த நசரீன் கபீர் என்பவரால் இந்த வரலாறு எழுதப்பட்டுள்ளது. ஜூஹுவில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற விழாவில் திரைப்பட இயக்குநர் மணிரத்னம் இதனை வெளியிட்டு வைத்தார்.

(201)

# தமிழகத்தில் அ.தி.மு.க. தனித்துவத்துடன் வெற்றிபெறும்

### கோவையில் பிரகாஷ்கரத் பேட்டி

தமிழக சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணியில் நாம் அங்கம் வகிக்கிறோம். இந்தக் கூட்டணிக்கு வெற்றி வாய்ப்புப் பிரகாசமாக உள்ளது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்தியப் பொதுச் செயலாளர் பிரகாஷ்கரத் கூறியுள்ளார்.

கோவையில் நிருபர்களுக்கு நேற்றுமுன்தினம் பேட்டி அளித்த போதே இவ்வாறு கூறினார். தார். அந்தப் பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது:

தமிழ்நாட்டில் அத்தியாவசிய பொருள்களின் விலைவாசி உயர்வு, ஊழல் காரணமாக மக்கள் கடும் பாதிப்புக்கு ஆளாகி இருக்கிறார்கள். அதன் காரணமாக மக்கள் அரசியல் மாற்றத்தை விரும்புகிறார்கள்.

கேரளாவில் விலைவாசி உயர்வு இருந்த போதும் சங்கக் கடையில் மலிவு விலையில் அத்தியாவசியப் பொருள்களை வழங்கி கட்டுக்குள் வைத்துள்ளனர். அணுமின் நிலையத்தின் திட்டத்தைத் தொடர்ந்து நாம் எதிர்த்து வருகிறோம். இந்தத் திட்டத்தை செயற்படுத்தினால் மிகப் பெரிய ஆபத்து உள்ளது.

மத்திய உள்துறை மந்திரி ப.சிதம்பரம் கடந்த செவ்வாய்க் கிழமை கோவையில் பேசும் போது கேரளாவிலும், மேற்கு வங்கத்திலும் கம்யூனிஸ்ட்கள் எதிர்க்கட்சி வரிசையில் அமரத் தயாராகி விட்டன எனக் கூறியுள்ளார்.

அவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். அவர் அதைப்பற்றி கவலைப்படத் தேவையில்லை. தமிழ்நாட்டைப் பற்றி மட்டும் அவருக்கு கவலை இருக்கட்டும்.

வாக்காளர்களுக்கு பணம் கொடுப்பதைத் தடுக்க வேண்டும் என தேர்தல் ஆணையாளரிடம் வலியுறுத்தி இருந்தோம். தேர்தல் ஆணையமும் தமிழகத்தில் தீவிர சோதனை நடத்தி சட்டவிரோதமான பணங்களை பறிமுதல் செய்து வருவது வரவேற்கத்தக்கது.

கடந்த செவ்வாய்க்கிழமை திருச்சியில் 5 கோடி பணம் பறிமுதல் செய்யப் பட்டுள்ளது. இதே போல் தொடர்ந்து தீவிர வாகன சோதனை நடத்தி பணக் கொடுப்பனவுகளை முழுமையாகத் தடுக்க வேண்டும்.

இந்தத் தேர்தலில் அ.தி.மு.க. தனித்துவத்துடன் வெற்றி பெறும். கூட்டணி மந்திரிசபை அமைப்பதற்கான வாய்ப்பு எழவில்லை. சி.பி.ஐ. தாக்கல் செய்த ஸ்பெக்ட்ரம் குற்றப்பத்திரிகையில் எங்களுக்கு முழுமையான திருப்தி இல்லை. முழுமையான காரணம் வெளிவரும்வரை நாடாளுமன்றத்தை நடத்த விட மாட்டோம் என்றார் அவர்.

# கேரளாவில் பிரதமர் பிரசாரம்; கூட்டம் நடத்த அனுமதி மறுப்பு

கேரளாவில், பாடசாலை மைதானத்தில் பிரதமரின் தேர்தல் பிரசாரப் பொதுக்கூட்டத்தை நடத்த தேர்தல் ஆணையம் அனுமதி மறுத்துள்ளது.

140 சட்டசபை தொகுதிகளைக் கொண்ட கேரளாவில், எதிர்வரும்13 ஆம் திகதி, ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறுகிறது. இதையொட்டி, காங்கிரஸ் கூட்டணிக்கு ஆதரவு திரட்டுவதற்காக, பிரதமர் மன்மோகன்சிங் நாளை சனிக் கிழமை கேரளா செல்கிறார்.

இதேவேளை கோட்டயத்தில் எம்.டி.செமினரி பாடசாலை மைதானத்தில் பிரதமர் மன்மோகன் சிங்கின் தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தை நடத்த உள்ளூர் காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் திட்டமிட்டு இருந்தனர்.

அதற்காக, மாவட்டத் தேர்தல் அதிகாரியான மாவட்ட ஆட்சியாளரிடம் அனுமதி கோரினர். இந்தப் பிரச்சினையை டில்லியில் உள்ள தலைமைத் தேர்தல் ஆணையத்தில் கவனத்துக்கு மாவட்ட ஆட்சியாளர் கொண்டு சென்றார்.

அதனைப் பரிசீலித்த தலைமை தேர்தல் ஆணையம் பாடசாலை மைதானத்தில் பிரதமரின் தேர்தல் பிரசாரப் பொதுக் கூட்டத்தை நடத்த அனுமதி வழங்க மறுத்துள்ளது.

'தேர்தல் ஆணையத்தின் விதிமுறைப்படி, கல்வி நிறுவனங்களில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட அனுமதி கிடையாது' என்று தேர்தல் ஆணைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஜெயலலிதா, விஜயகாந்துக்கு தேர்தல் ஆணையம் 'நோட்டீஸ்'

சென்னை,ஏப்.8

தேர்தல் பிரசாரத்தின்போது முதல்வர் கருணாநிதி மற்றும் அவரது குடும்பத்தினரை தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேசிய குற்றச்சாட்டு தொடர்பாக அ.தி. மு.க. பொதுச்செயலர் ஜெயலலிதா மற்றும் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் ஆகியோருக்கு தேர்தல் ஆணையம் 'நோட்டீஸ்' அனுப்பியுள்ளது.

தேர்தல் பிரசாரத்தின்போது கருணாநிதியையும், அவரது குடும்பத்தினரையும் ஜெயலலிதாவும், விஜயகாந்தும் தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேசிவருவதாக தி.மு.க. தேர்தல் குழு சார்பில் தேர்தல் ஆணையத்தில் முறையீடு அளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தேர்தல் ஆணையம் மேற்படி நடவடிக்கையை எடுத்துள்ளது.

தேர்தலுக்கு இன்னும் 5 தினங்களே உள்ள நிலையில் தி.மு.க., அ.தி.மு.க. கூட்ட ணித் தலைவர்களின் தீவிர பிரசாரத்தால் தமிழக தேர்தல்களம் சூடுபிடித்துள்ளது.

(201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரளியை இழந்துவிட்டோம் புலம்புகிறார் டோனி




சென்னை, ஏப் 8

கொஞ்சம் கூட ஓய்வில்லாமல் தொடர்ந்து விளையாடுவதால் வீரர்கள் காயம் அடைய அதிக வாய்ப்புள்ளது என்று சென்னை சுப்பர் கிங்ஸ் (சி.எஸ்.கே) அணித்தலைவர் டோனி கூறினார்.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) ரி-20 தொடர் சென்னையில் இன்று தொடங்குகின்றது. தொடக்க ஆட்டத்தில் நடப்பு சம்பியன் சென்னை சூப்பர் கிங்ஸ் (சி.எஸ்.கே) அணியுடன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி மோதுகின்றது. இதில் சி.எஸ்.கே அணித்தலைவர் டோனி பத்திரிகையாளர்களை சந்தித்தபோது அவர் தெரிவித்தமை வருமாறு:

சி.எஸ்.கே அணியில் புதுமுக வீரர்கள் அதிகம் உள்ளனர். துடுப்பாட்டம், பந்து வீச்சில் வலுவாக உள்ளோம். முரளிதரன், பாலாஜி இல்லாதது வருத்தமாக உள்ளது. நெருக்கடியான கட்டத்தில் முரளியின் ஆலோசனை சிறப்பாக இருக்கும். இந்த முறை சகல துறை ஆட்டக்காரர்கள் அதிகம் உள்ளனர்.

தொடக்க வீரர் விஜய்யுடன் மைக்கேல் ஹஸி, அனிருதா, பத்ரி ஆகியோரில் ஒருவர் விளையாடுவர். காயம் காரணமாக வேகப்பந்து வீச்சாளர் போலிஞ்சர் முதல் 3 ஆட்டங்களில் விளையாடமாட்டார். கொச்சிக்கு எதிரான (ஏப்.18) ஆட்டத்தில் அவர் களம் இறங்குவார்.

உலகக் கிண்ணம் முடிந்தவுடன் ஓய்வு இல்லாமல் மீண்டும் விளையாடத் தொடங்குவது சற்று கடினமாக உள்ளது. ஐ.பி.எல் முடிந்தவுடன் மேற்கிந்தியத்தீவுகள் செல்கின்றோம். அங்கிருந்து இங்கிலாந்து சென்று தாயகம் திரும்பியவுடன் சம்பியன்ஸ் லீக் நடக்கிறது. அது முடிந்தவுடன் ஆஸி. செல்கிறோம். இப்படி தொடர்ந்து விளையாடுவதால் வீரர்கள் காயம் அடைய அதிக வாய்ப்புள்ளது. எனினும், எந்த போட்டியையும் தவிர்க்க முடியாது.

**பறக்க ஆசை**

டோனியை கௌரவிக்கும் வகையில் இந்திய விமானப்படையின் சுகாய் ரக போர் விமானத்தில் பறக்க அவருக்கு அழைப்பு விடப்பட்டுள்ளது. இது குறித்து கூறுகையில், எனக்கு வேகம் என்றால் மிகவும் பிடிக்கும். மோட்டார் சைக்கிள், கார் எதில் சென்றாலும் வேகமாக செல்வதை விரும்புவேன். சுகாய் விமானத்தை நானே ஓட்டி பறக்க ஆசைப்படுகிறேன். ஆனால், அந்த விமானம் 2300 கிலோ மீட்டர் வேகத்தில் பறக்கும். அதை நீங்கள் ஓட்டுவது கடினம் என்று சொன்னார்கள். கடுமையாக பயிற்சி செய்து அந்த விமானத்தை ஓட்டுவேன். இந்தியாவில் வாய்ப்பு கிடைக்காவிட்டாலும் ரஷ்யா சென்றாவது அந்த விமானத்தில் பறப்பேன் என்றார். (15)

# இங்கிலாந்துக்குப் போகின்றார் முரளி

பிரித்தானிய புதிய விஸா விதிகள் குறித்து கவலை கொண்டிருந்த இலங்கையின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் இங்கிலாந்து பிராந்திய அணியில் விளையாடுவதற்கான பிரித்தானிய தொழில் அனுமதியை பெற்றுக்கொண்டுள்ளதாக அவரின் முகாமையாளர் குஷில் குணசேகர நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.


இங்கிலாந்தின் குளோசெஸ்டஷயர் அணியில் எதிர்வரும் ஜூன் மாதம் முரளி விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரிட்டனின் புதிய விதிகளின்படி அங்கு தொழில் புரிவோர் ஆங்கில மொழி பரீட்சையொன்றுக்கு கணினி மூலம் தோற்ற வேண்டும். ஆனால், முரளிதரன் தான் கணினி மற்றும் பரீட்சை குறித்து அச்சம் கொண்டுள்ளதாக முன்னர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், இங்கிலாந்து பிராந்திய போட்டிகளுக்கு முன்னதாக இந்திய பிரிமியர் லீக் போட்டிகளில் விளையாடுவதற்காக முரளி புதன்கிழமை இந்தியாவுக்கு பயணமாக வேண்டியிருந்ததால் அவரின் பிரித்தானிய விஸாவை துரிதமாக வழங்க பிரித்தானிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டனர்.

தனக்கு விரைவாக உரிய விஸா வழங்க நடவடிக்கை மேற்கொண்டமைக்காக பிரித்தானிய அதிகாரிகளுக்கு முரளி நன்றி தெரிவிப்பதாக அவரின் முகாமையாளர் குஷில் குணசேகர தெரிவித்துள்ளார். (15)

# அயர்லாந்தின் மாப்பிள்ளையாகின்றார் தென்னாபிரிக்காவின் ஸ்மித்



தென்னாபிரிக்க கிரிக்கட் அணியின் முன்னாள் அணித் தலைவர் கிரேம் ஸ்மித், அயர்லாந்து நாட்டு பாடகியான மோர்கன் டீனை திருமணம் செய்ய இருக்கின்றார்.

இருவரும் ஏற்கனவே காதலித்து வந்தனர். இவர்களது நிச்சயதார்த்தம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. ஸ்மித்துக்கு இப்போது 30 வயதாகிறது. மணமகளுக்கு வ்யது 25.

உலகக் கிண்ணப் போட்டிக்குப் பின்னர் தென்னாபிரிக்க ஒருநாள் அணியின் தலைவராகத் தொடர மாட்டேன் என்று ஸ்மித் முன்னதாகவே அறிவித்திருந்தார். ஆனால் டெஸ்ட் அணிக்கு அவரே அணித்தலைவராக இருப்பார்.

உலகக் கிண்ணப் போட்டியின் காலிறுதியில் நியூசிலாந்து அணியிடம் தென்னாபிரிக்க அணி தோல்வியடைந்தது. இதையடுத்து அணியின் மற்ற வீரர்கள் நாடு திரும்பினர். ஆனால் ஸ்மித் நேரடியாக அயர்லாந்து சென்றார். இப்போது நிச்சயதார்த்தையும் முடித்துள்ளார்.

முன்னதாக உலகக் கிண்ணப் போட்டியில் அணி தோல்வியடைந்த நிலையில், அவர் நாடு திரும்பாமல் அயர்லாந்து சென்றது அந்நாட்டு கிரிக்கட் ரசிகர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியது. (15)

# விலகினார் கொலிங்வூட்



லண்டன்,ஏப் 8

ஐ.பி.எல் கிரிக்கட் போட்டியிலிருந்து இங்கிலாந்து அணியின் சகலதுறை ஆட்டக்காரர் போல் கொலிங்வூட் விலகியுள்ளார்.

அவரது வலது காலில் ஏற்பட்டுள்ள காயம் காரணமாக அடுத்த வாரத்தில் அவருக்கு அறுவைச் சிகிச்சை நடைபெறவுள்ளது. இதனால் அவரால் ஐ.பி.எல் போட்டிகளில் பங்கேற்க முடியவில்லை. ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்காக விளையாட அவர் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார். ஐ.பி.எல் போட்டி இன்று தொடங்கி, மே 28 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

டெக்கான் சார்ஜர்ஸ் அணியின் அணித்தலைவராக சங்கக்கரா நியமிக்கப்பட்டுள்ளார். துணைத் தலைவராக ஆஸ்திரேலியாவின் கமரூன் வையிட் அறிவிக்கப்பட்டுள்ளார். கடந்த ஐ.பி.எல் போட்டிகளில் இந்த இருவரும் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்காக விளையாடினர். டெக்கான் அணி வீரர்களின் சீருடை ஹைதராபாத்தில் புதன்கிழமை வெளியிடப்பட்டது.

உலகக் கிண்ணப் போட்டியின் தோல்வியால் இலங்கை அணியின் தலைமைப் பதவியிலிருந்து சங்கக்கார விலகினார். இப்போது அவர் டெக்கான் அணியின் தலைவராகியுள்ளார். (15)

# விளம்பரத்தில் நடிகர்களை விஞ்சும் கிரிக்கெட் வீரர்கள்

இந்தியாவில் முன்னணி நடிகர்களும், கிரிக்கெட் வீரர்களும் விளம்பர படங்களில் போட்டி போட்டு நடித்து சம்பாதிக்கிறார்கள். இதில் நடிகர்கள் தான் அதிக அளவில் சம்பாதித்து வருகிறார்கள். ஆனாலும் இந்திய அணி உலகக் கிண்ணத்தை வென்று இருப்பதால் கிரிக்கெட் வீரர்களுக்கு மவுசு ஏற்பட்டுள்ளது. அவர்கள் சினிமா நடிகர்களை விட அதிகம் சம்பாதிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போதுள்ள நிலையில் நடிகர்களில் அமீர்கானும், கிரிக்கெட் வீரர்களில் டோனியும் அதிக அளவில் சம்பாதிக்கின்றனர். அமீர்கானுக்கு வருடத்துக்கு ரூ.14 கோடியில் இருந்து 15 கோடி வரை விளம்பர வருமானம் கிடைக்கின்றது. டோனிக்கு ரூ.10 கோடி அளவுக்கு வருமானம் கிடைக்கின்றது.

உலகக் கிண்ண வெற்றி மூலம் டோனி, அமீர்கானை நெருங்கி விட வாய்ப்பு உள்ளது. நடிகர் ஷாருக்கானுக்கு ரூ.8 கோடியில் இருந்து ரூ.10 கோடி வரையி லும், ரன்பீர் கபூருக்கு ரூ.7 கோடியில் இருந்து ரூ.8 கோடி வரையிலும், சஞ்சய் குமாருக்கு ரூ.6 கோடியில் இருந்து ரூ.7 கோடி வரையிலும், ஹிருத்திக் ரோஷன், அமி தாப் பச்சன் ஆகியோருக்கு ரூ.5 கோடி வரையிலும் வருமானம் கிடைக்கிறது.

கிரிக்கெட் வீரர்களில் டோனிக்கு அடுத்து டெண்டுல்கார் ரூ.5 கோடியில் இருந்து ரூ.6 கோடி வரை வருமானம் பெறுகிறார்.

# இந்திய அணியின் பயிற்சியாளராகமாட்டேன்



இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக விருப்பம் தெரிவிக்கவில்லை என்று ஆஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் கூறியுள்ளார்.

இந்திய அணியின் பயிற்சியாளராக இருந்த ஹரி கிர்ஸ்டன் உலகக் கிண்ணத்துடன் பதவி யில் இருந்து விலகியுள்ளார். இதையடுத்து அடுத்த பயிற்சியாளர் யார் என்று கேள்வி எழுந்தது. இந்த நிலையில் இந்திய அணியின் பயிற்சியாளராக ஷேன் வோர்ன் விருப்பம் தெரிவித்ததாக செய்திகள் வெளியானது. அவர் ஐ.பி.எல் போட்டியில் ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் தலைவராகவும் உள்ளார்.

இந்த நிலையில் டுவிட்டர் இணையதளத்தில் ஷேன் வோர்ன் நேற்றுமுன்தினம் கூறியிருப்பதாவது, இந்திய அணியின் பயிற்சியாளராக நான் விருப்பம் தெரிவித்திருப்பதாக செய்திகள் வெளியானதாகக் கேள்விப்பட்டேன். ஆனால் நான் அதுபோல கூறவில்லை என்று ஷேன் வோர்ன் தெரிவித்தார். (15)

# சென்னை சூப்பர் கிங்ஸ் வீரர்கள் அறிமுகம்

சென்னை,ஏப்.8

ஐ.பி.எல். 20 ஓவர்கள் கிரிக்கட் போட்டி 2008 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது.

இதில் ராஜஸ்தான் ரோயல்ஸ் சம்பியன் பட்டம் பெற்றது. 2 ஆவது ஐ.பி.எல். போட்டியில் டெக்கான் சார்ஜர்ஸ் அணியும், 3 ஆவது போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியும் சம்பியன் பட்டம் பெற்றன.

4 ஆவது ஐ.பி.எல். 20 ஓவர்கள் போட்டி இன்று ஆரம்பமாகின்றது. மே 28 ஆம் திகதி வரை 50 நாள்கள் இந்தத் திருவிழா நடக்கின்றது. இதுவரை நடந்த போட்டியில் 8 அணிகள் பங்கேற்றன. தற்போது நடைபெற இருக்கும் ஐ.பி.எல். போட்டியில் கூடுதலாக கொச்சி டஸ்கர்ஸ் கேரளா, புனே வாரியர்ஸ் ஆகிய அணிகள் பங்கேற்கின்றன.

ஐ.பி.எல். போட்டியின் தொடக்க ஆட்டம் சென்னை சேப்பாக்கம் சிதம்பரம் மைதானத்தில் நடக்கின்றது. இதில் சென்னை சூப்பர் கிங்ஸ், கொல்க்த்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதுகின்றன. 4 ஆவது ஐ.பி.எல். [illegible] கிங்ஸ் [illegible] ஷெரட்டான் ஹோட்டலில் நேற்றுக் காலை நடந்தது. வீரர்கள் ஒவ்வொருவராக அறிமுகம் செய்யப்பட்டனர்.

இந்த நிகழ்ச்சியில் பயிற்சியாளர் ஸ்டீபன் பிளமிங், அணி உரிமையாளர் குருநாத் மெய்யப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர். காயம் அடைந்த ஆஸ்திரேலிய வேகப்பந்து வீரர் கில்பென்ஹாஸ்க்கு பதிலாக நியூசிலாந்து வேகப்பந்து வீரர் சவுத் தீ இடம்பெற்றுள்ளர்.

சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் இடம்பெற்றுள்ள வீரர்கள் விவரம்:-

துடுப்பாட்ட வீரர்கள்: டோனி (அணித் தலைவர்), ரெய்னா, முரளி விஜய், மைக்கல் ஹசி (ஆஸ்திரேலியா), பெய்லி (ஆஸ்திரேலியா), வாசுதேவாஸ், அனிருதா ஸ்ரீகாந்த், அபினவ் முகுந்த்.

சகலதுறை ஆட்டக்காரர்கள்: அல்பி மோர்கல், பெலிஸிஸ் (தென்னாபிரிக்கா), ஸ்கொட் ஸ்டைரிஸ் (நியூஸிலாந்து), சுராஜ் ரந்தீவ் (இலங்கை), கணபதி விக்னேஷ், ஜகாத்தி.

பந்து வீச்சாளர்கள்: போலிஞ்சர் (ஆஸ்திரேலியா), அஸ்வின், சவுத்தீ (நியூஸிலாந்து), சுவீப் தியாகி, குலசேகரா (இலங்கை), ஜோகிந்தர் சர்மா, யோமகேஷ்.

விக்கெட் காப்பாளர்: விர்த்தி மான் சகா, டோனி (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிபியா மீதான விமானத் தாக்குதலை நிறுத்துங்கள்

## ஒபாமாவுக்கு கடாபி கடிதம்

திரிபோலி, ஏப். 08

லிபியாவில் ஜனாதிபதி கடாபி பதவி விலகவேண்டும் என்று கோரி பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களை ஒடுக்க கடாபி இராணுவத்தை ஏவி விட்டுள்ளார். இராணுவம் பொது மக்கள் மீது கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தியது. இதில் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகள் லிபியா மீது தாக்குதல் நடத்தின. விமானங்கள் மூலம் குண்டு வீசின. ஆனாலும் கடாபி தொடர்ந்து போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தி வருகிறார்.

கடாபி அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்கு ஒரு கடிதம் எழுதி உள்ளார். 3 பக்கங்கள் கொண்ட அந்த கடிதத்தில் கடாபி கூறி இருப்பதாவது:-

எங்கள் நாடு வளர்ந்து கொண்டிருக்கும் சிறிய நாடு. இதன் மீது நீங்கள் போர் தொடுத்து இருப்பது நியாயமற்றது. எனவே எங்கள் மீதான போரை உடனே நிறுத்துங்கள். நீங்கள் ஒரு சிறந்த மனிதர். நீங்கள் இப்படி ஒரு தவறான செயலில் ஈடுபடக்கூடாது.

உங்களுக்கு என்று முக்கிய பொறுப்புகள் உள்ளன. அதில் இருந்து மாறக்கூடாது. நீங்கள் உலக அமைதிக்குப் பாடுபடுகிறீர்கள். எங்களுடனும் நட்பாக இருங்கள்.

தீவிரவாதிகளை ஒடுக்க ஒத்துழைப்பு கொடுங்கள். உங்கள் படைகளின் தாக்குதல்களால் நாங்கள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறோம். ஜனநாயக சமுதாயத்தின் மீது விமானத் தாக்குதலையும், ஏவுகணைத் தாக்குதலையும் நடத்துவது சரியானது அல்ல. எங்களுக்கு எதிரான படையில் அல்-குவைதா தீவிரவாதிகள் இடம் பெற்று இருக்கிறார்கள் என்பதை நீங்கள் உணர வேண்டும்.

உங்களை எனது மகன் போல கருதுகிறேன். நீங்கள் அமெரிக்காவின் பெயரில் எங்கள் நாட்டு விடயத்தில் தலையிட்டு இருக்கிறீர்கள். லிபியா விடயத்தை லிபியா மக்களிடமே விட்டு விடுங்கள்.

நீங்கள் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தபோதும் எங்கள் மீது தாக்குதல் நடந்தது. இப்போது மீண்டும் தாக்குகிறீர்கள். நாங்கள் மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறோம். இதை மேலும் தொடர்வது சரி அல்ல. நீங்கள் என்ன செய்தாலும் நான் உங்களை எனது மகனாகவே கருதுகிறேன். அடுத்து வரும் தேர்தலிலும் நீங்கள் வெற்றிபெற்று மீண்டும் ஜனாதிபதியாக வரவேண்டும் என வாழ்த்துகிறேன்.

இவ்வாறு அவர் கடிதத்தில் கூறி உள்ளார்

## இத்தாலி நடுக்கடலில் கப்பல் கவிழ்ந்து விபத்து: 250 பேர் மாயம்

வட ஆபிரிக்காவிலிருந்து இடம்பெயர்ந்து இத்தாலி நோக்கி வந்துகொண்டிருந்தவர்களின் படகு நடுக்கடலில் மூழ்கியதில் 250 இற்கு மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வட ஆபிரிக்காவில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் கலவரங்களினால் பாதிக்கப்பட்ட இவர்கள் இத்தாலி நாட்டில் குடியேற கப்பல் மூலம் வந்து கொண்டிருந்தனர்.

இவர்கள் வந்த கப்பல் லம்பிடியூஸா தீவு அருகே திடீரென கவிழ்ந்து விபத்துக்குள்ளானது எனக் கூறப்படுகிறது. இதில் பயணம் செய்த குழந்தைகள், பெண்கள் என 250இற்கும் மேற்பட்டோர் கடலில் மூழ்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இத்தாலிய கடலோர காவல் படையினரும், காவல்துறை ரோந்துப் படையினரும் காணாமல் போன கப்பலைத் தேடி தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

## முபாரக்கின் சொத்துக்களை சுவீகரிக்க நடவடிக்கை

எகிப்திய முன்னாள் ஜனாதிபதி முபாரக்கின் அசையும், அசையா சொத்துக்களை கையகப்படுத்த ஆளும் இராணுவத்தால் நியமிக்கப்பட்ட சபை தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

எகிப்தின் ஜனாதிபதியாக 30 ஆண்டுகளுக்கு மேலாக பதவி வகித்த ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக் பதவி விலகவேண்டும் என்று கோரி மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். 17 நாள்கள் நடந்த போராட்டத்தின் விளைவாக ஜனாதிபதி முபாரக் பதவி விலகினார்.

இதைத்தொடர்ந்து தற்காலிக இராணுவம் ஆட்சியை நடத்தி வருகிறது. ஜனாதிபதியின் சொத்துகள், வங்கிக் கணக்குகள் ஆகியவற்றை கையகப்படுத்த இராணுவம் தலைமை சபை ஒன்றை நியமித்துள்ளது.

## சந்திப்பு.....



டுனீஷியாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் மோல்தி கேபியை அமெரிக்காவின் தூதுவர் ஏஞ்சலினா ஜோலி, டுனீஷியா - லிபியா எல்லைக்கோடு குறித்து சந்தித்துப் பேசினர்.

## இந்தோனேஷியாவில் மீண்டும் பூகம்பம்

இந்தோனேஷியாவில் புதன்கிழமை மீண்டும் மிதமான பூகம்பம் ஏற்பட்டது. இந்தோனேஷியாவின் சுமத்ரா தீவிலிருந்து 190 கி.மீற்றர் தொலைவிலுள்ள ஷிபோல்கா நகரில் இந்தப் பூகம்பம் ஏற்பட்டது.

இந்தப் பூகம்பம் ரிச்டர் அளவுகோலில் 5.8 புள்ளிகளாகப் பதிவானது என அமெரிக்க வானியல் ஆராய்ச்சி மையம் தகவல் வெளியிட்டுள்ளது. கடலுக்கு அடியில் ஏற்பட்டதால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இதேபோன்று ஹாவாய் தீவுகளிலும் பூகம்பத்தின் தாக்கம் உணரப்பட்டுள்ளது.

# கனடா, அமெரிக்கா காடுகளில் பாம்பை விழுங்கும் தவளைகள்

டொராண்டோ, ஏப். 08

பொதுவாக பாம்புகள் தவளையை உணவாக உட்கொள்ளும். ஆனால் கனடா மற்றும் அமெரிக்கா காடுகளில் வாழும் ஒருவகை தவளைகள் பாம்பை உணவாக உட்கொள்கின்றன.

பாம்பு எப்படி தவளையை விழுங்குமோ அதேபோல தவளைகள் பாம்பை விழுங்கி விடுகின்றன. இந்தத் தவளைகள் மற்ற தவளைகளை விட சற்று பெரிதாக இருக்கின்றன.

தரையிலும், நீரிலும் வாழும் இவை தண்ணீரில் இருக்கும்போது சாதுவாக இருக்கின்றன. இவை தரைக்கு வந்தவுடன் இவற்றின் சக்தி அதிகரித்து பாம்பையும் எளிதாகப் பிடித்து விழுங்குகின்றன. பாம்பை விழுங்கும்போது இதன் உடல் அமைப்பு தானாக விரிந்து கொடுக்கிறது.

## முகலாய மன்னர் ஜஹாங்கீர் ஓவியம் 10 கோடி ரூபாவுக்கு ஏலம் போனது

முகலாய சாம்ராஜ்ய மன்னரான ஜஹாங்கீரின் ஆள் உயர ஓவியம், இந்திய - இஸ்லாமிய கலை அமைப்பு சார்பில் லண்டனில் ஏலம் விடப்பட்டது.

மத்திய கிழக்கின் அருங்காட்சியகம் ஒன்று, இந்த ஓவியத்தை 10 கோடி ரூபாவுக்கு ஏலத்தில் எடுத்தது. 17ஆம் நூற்றாண்டில் வரையப்பட்ட இந்த ஓவியத்தில், மன்னர் ஜஹாங்கீர் தங்க சிம்மாசனத்தில் விலை உயர்ந்த ஆபரணங்களை அணிந்து கம்பீரமாகக் காட்சி அளிக்கிறார்.

இதுபோன்ற ஓவியம் மிகவும் அபூர்வமானது என்று ஏலம் நடத்திய அமைப்பின் தலைவர் அலைஸ் பெய்லி தெரிவித்தார்.

# தலிபான்களை தோற்கடிக்க பாகிஸ்தானிடம் திட்டம் இல்லை

## அமெரிக்கா தெரிவிப்பு

வாஷிங்டன், ஏப். 08

தலிபான்களை தோற்கடிக்க பாகிஸ்தானிடம் திட்டம் இல்லை. அத்தோடு தீவிரவாதிகளை எதிர்ப்பதில் கடந்த ஓர் ஆண்டு காலத்தில் எந்த முன்னேற்றமும் இல்லை என்று அமெரிக்கா கூறி உள்ளது.

### மன உறுதி இல்லை

அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒபாமா நிர்வாகம் ஓர் அறிக்கை தாக்கல் செய்து உள்ளது.

அதில் கூறப்பட்டு இருப்பவை வருமாறு:-

வடமேற்கு எல்லைப்புற மாநிலத்தில் மத்திய நிர்வாகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் நிலைமை மோசமாக இருக்கிறது. அங்கு தீவிரவாதிகள் பிடியில் இருந்து மீட்ட பகுதிகளை தக்க வைத்துக்கொள்ளக்கூட அவர்களால் முடியவில்லை. அதற்கான மன உறுதியும் பாகிஸ்தான் இராணுவத்திடம் இல்லை.

### திட்டம் இல்லை

தலிபான்களை தோற்கடிக்க பாகிஸ்தானிடம் திட்டம் இல்லை. வடமேற்கு எல்லைப்புற மாநிலத்தில் ஒரு லட்சத்து 47 ஆயிரம் இராணுவச் சிப்பாய்களை நிறுத்தி இருந்த போதிலும் தெளிவான திட்டம் கிடையாது.

கடந்த ஓர் ஆண்டு காலத்தில் தலிபான்களை தோற்கடிப்பதில் எந்த முன்னேற்றமும் இல்லை.

### இந்தியா மீதான அச்சம்

தீவிரவாதத்துக்கு எதிரான போரில் பாகிஸ்தான் பங்காற்றுவதற்கு தடையாக இருப்பவை. இந்தியா மீதான அச்சம் தானுக்கு இருக்கும் பயமும் ஒன்றாகும்.

எத்தனையோ தடவைகள் இந்தியா பாகிஸ்தானுக்கு எதிரி அல்ல. உங்கள் நாட்டின் மீது இந்தியா படை எடுக்காது என்று உறுதிமொழி அளித்த போதிலும், பாகிஸ்தான் இன்னும் மிகப்பெரிய படைப் பிரிவை இந்திய எல்லை பகுதியில் குவித்து வைத்து இருக்கிறது.

### அதிகாரிகள் விரக்தி

பாகிஸ்தான் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையில் திருப்திகரமாக செயல்படாததால், அமெரிக்க இராணுவ அதிகாரிகள் விரக்தி அடைந்து உள்ளனர்.

பாகிஸ்தான் உறுதியான நடவடிக்கை எடுக்காத நிலையில் தலிபான்களையும், அல்-குவைதாவையும் ஒழித்துக் கட்டுவது சாத்தியமற்றது.

இவ்வாறு அந்த அறிக்கை யில் ஒபாமா நிர்வாகம் கூறி உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கின்...

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஒருமுறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடக்கின் அரசனாக இருக்கலாம், ஆனால் அபிவிருத்தி வேலைகளுக்கு அரசாங்கமே பொறுப்பு எனக் குறிப்பிட்டிருந்தார்.

எனவே, இந்த இடைத்தரகர்கள் எவ்வித பயனுள்ள பணிகளையும் செய்யப் போவதில்லை என்பதை எமது அனுபவங்கள் தெளிவாகவே புலப்படுத்துகின்றன. மாறாக இவர்களால் தமிழ் மக்கள் விரோத நடவடிக்கைகளை நியாயப்படுத்தி மக்களை ஏமாற்றும் பணியை மட்டுமே செய்ய முடியும்.

எமது மக்கள் சுதந்திரமான, சுமுகமான, அமைதியான ஒரு சுழலில் வாழ விரும்புகின்றனர். இராணுவக் கெடுபிடிகள், தலையீடுகள் அற்ற ஒரு சிவில் நிர்வாகக் கட்டமைப்பையே வேண்டி நிற்கின்றனர். இங்கு இனி மேற்கொள்ளப்படப் போகும் அபிவிருத்திப் பணிகள், மக்களை சென்றடையவும், மக்கள் அவற்றுக்குத் தங்கள் பங்கை வழங்கவும் ஒரு சுமுகமான தலையீடுகள் அற்ற நிலைமையை எதிர்பார்க்கிறோம் - என்றார்.


### உடன் தேவை

பலசரக்கு வியாபாரத்தில் அனுபவமுள்ள/பழக விரும்புபவர்கள்.

தொடர்பு:-0778996559

### C.T.C.

பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

A/L 2013

பிரத்தியேக வகுப்பு

கணக்கீடு

By : A.P. பகீரதன் B.B.A. (F.M. SPL)

ஆரம்பம் : 08.04.2011 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணி

நிர்வாகி.

### SLEAS விசேட கருத்தரங்கு

பிரிவுI ஒவ்வொரு சனியும் 1 மணி தொடக்கம் 5 மணிவரை நடை பெறுகின்றது

பிரிவுII 15/4 (வெள்ளி) 9 மணி தொடக்கம் 1 மணி வரை 16/4, 17/4 பிற்பகல் 1 மணி தொடக்கம் 5 மணிவரை 18/4, 19/4, காலை 9 மணி தொடக்கம் 1 மணிவரை கட்டணம் 1000/=

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
யாழ். போதனா வைத்தியசாலை எதிரே.

### IBM கணினிகள் விற்பனைக்கு

Intel Pentium (LGA775) 2.8 GHz
512 MB DDR Ram
128MB VGA
80GB Sata
17"IBM LCD Monitor (Square)
DVD combo
Keyboard,Mouse, Speaker



Rs.18,500/=

Laptop Hard Disk:
40GB IDE-3250/=,60GB IDE-3800/=,160GB SATA-3750/=
Desktop Hard Disk:
40GB IDE/SATA 1900/=,80GB IDE/SATA-2500/=,160GB IDE/ SATA-3000/=
Mother Board:
478 Mother Board-2900/=, 775LGA Mother Board 3250/=

ASK Computers
No:50, Chetty Street Lane, Nallur, Jaffna.
Phone : 0778320896/0771350476
Skype ID : Ask_Chat





### மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஏப்.8

வட்டுக்கோட்டை, அடைக்கலந்தோட்டம் ஸ்ரீகந்தசுவாமி கோயில் மஹோற்சவத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.45 மணிக்கு தேர்ப் பவனியும் மறுநாள் முற்பகல் 10.00 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ஒ-10)

### புத்தாண்டு விழா

நெல்லியடி பொலிஸ் நிலையத்தால் வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலகம், நெஸ்டமோல் நிறுவனம் ஆகியவற்றின் அனுசரணையில் சித்திரை வருட புத்தாண்டு விழா எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

### பெண் சாரணியர் பேரணியில் யாழ். மாணவிகள்

யாழ்ப்பாணம், ஏப்.8

இலங்கையின் அனைத்து மாவட்டங்களின் பெண் சாரணியர்கள் பங்குகொள்ளும் பேரணி ஒன்று நாளை சனிக்கிழமை கொழும்பு காலிமுகத்திடலில் நடைபெறுகின்றது.

இந்தப் பேரணியில் யாழ். மாவட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த பெண் சாரணியர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதற்காக யாழ். மாவட்டப் பெண்கள் சாரணியர்கள் 120 பேரும் ஆசிரியர்கள் 10 பேரும் இன்று வெள்ளிக்கிழமை கொழும்புக்குப் புறப்பட்டுச் செல்லுகின்றனர். (த)


### BOYS WORLD

ஆடவரின் தேவைகளை 100%பூர்த்தி செய்யும் Boys World புடைவையகம் புதுவருடத்தை முன்னிட்டு இறக்குமதி செய்யப்பட்ட அனைத்துப் புடைவைகளுக்கும் விசேட விலைக்கழிவு வழங்குகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

213, 1/3 கஸ்தூரியார் வீதி, ராஜா தியேட்டர், ஸ்போட்ஸ் வேர்ட் அருகாமை, யாழ்ப்பாணம்.

தொ.பே. 0773604830


## மரண அறிவித்தல்கள்



### திருமதி இரகுநாதன் வள்ளியம்மை

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரகுநாதன்-வள்ளியம்மை நேற்று (07.04.2011) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து-சோதிமுத்து தம்பதியரின் அன்பு மகளும் ராசா-சிவக்கொழுந்து தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற இரகுநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வேலாயுதம்பிள்ளை, யோகேஸ்வரி, இராஜேஸ்வரி, செல்வராசா, கிருஷ்ணராசா, ஆனந்தராசா மற்றும் குலசேகரம்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் சகுந்தலாதேவி (இந்தியா), நவரத்தினராசா (C.E.B, Chunnakam), சரோஜினிதேவி (Luxem bourg), சந்திரசேகரன் (வலி.தென்மேற்கு பிரதேச சபை- ஆனைக்கோட்டை) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்றவரான பீரிங் மற்றும் கிரிசாம்பாள், ஜெயசுந்தரம் (Luxem bourg), புஸ்பராணி (பண்டத்தரிப்பு கிராம சபை) ஆகியோரின் அன்பு மாமியும் நிமல்ராஜ்குமார், வினோதினி, விக்னேஸ்வரன், கோணேஸ்வரன், சிவாஸ்கரன், கேதீஸ்வரன், நிலானி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.04.2011) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"ரவி வாசா",
வட்டு தெற்கு, வட்டுக்கோட்டை.
021 720 0500

(3091) (34)

தகவல்:
குடும்பத்தினர்.



### தெய்வேந்திரம் சரஸ்வதி

(ஓய்வுபெற்ற தாதி, யாழ். போதனா வைத்தியசாலை)

யாழ். கோயில் வீதி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தெய்வேந்திரம் சரஸ்வதி நேற்று (07.04.2011) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா-பூரணம் தம்பதியரின் அன்பு மகளும் கந்தையா-உத்தமி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற தெய்வேந்திரம் (C.T.B.) அவர்களின் அன்பு மனைவியும் மஞ்சுளா, கோமளா (விக்னா கல்வி நிறுவனம்) அவர்களின் பாசமுள்ள தாயும் சந்திரமோகனின் மாமியாரும் காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் புவனேஸ்வரி, காலஞ்சென்ற பத்மாவதி ஆகியோரின் மூத்த சகோதரியும் சியாமளா (ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி), வட்சலா (மார்ஷா சிஸ்ரம்) துஸ்யந்தினி, துஸ்யந்தன், தர்ஷந்தன் ஆகியோரின் பெரிய தாயும் துவாரகன் (யாழ். இந்துக்கல்லூரி), காலஞ்சென்ற சுலக்ஷன் மற்றும் கர்ஷனா (யாழ். புனித ஜோன்பொஸ்கோ) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.04.2011) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோயில் வீதி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(3091) (34)

தகவல்:
S.சந்திரமோகன். (மருமகன்)

## இருபத்தி நான்காம் ஆண்டு நினைவலைகள்



### சற்குணநாதன் நந்தகோபன்

மலர்வு 1969★09★17
உதிர்வு 1987★04★08

அந்தநாள் நெஞ்சிலே வந்ததே
அன்றுபோல் இன்று இல்லையே
திசைமாறிய பறவைகள் போல்
அப்பாவையும் இழந்து தவிக்கிறோம்
உன் திருமுகம் புன்சிரிப்பு
நந்தன் என்ற நாமம் மறைந்ததோ
உன்பிரிவால் துயருறும்
அன்பு உள்ளங்கள்.

'பிருந்தாவனம்'
மீசாலை மேற்கு,
மீசாலை.

அம்மா திருமதி-இ.சற்குணநாதன்
அக்காமார், தங்கை, தம்பி,
நண்பர்கள்.


### UK Student visa

தாமதிக்காதீர்கள்... APRIL 21st வரை

பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தின் புதிய சட்ட விதியின்படி April 21 திகதிக்கு பிந்திய விண்ணப்பங்களுக்கு IELTS கட்டாயமாக்கப்படுகின்றது. அதோடு மாணவர்களுக்கான பகுதி நேர வேலைவாய்ப்பும் நிறுத்தப்படுகின்றது இதை நிவர்த்தி செய்ய APR 21க்கு முன் கல்லூரியிலிருந்து CAS Letter ஐ, பெற்று கொள்வதன் மூலமும் எங்களுடன் இணைந்து விரைவாக செயற்படுவதன் மூலமும் உங்கள் வெளிநாட்டு கனவை நிறைவேற்றி கொள்ளுங்கள்

- A rated colleges
- Offer letter within 2-3 days
- Course fee will be GBP 3500
- Students without IELTS before April 21
- Highly trusted sponsorship arrangement
- Low cost

தாமதிக்காதீர்கள் ...... நீங்கள் தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் உங்கள் வெளிநாட்டு கனவு நிறைவடையாமல் போயவிடும். மேலதிக விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளுங்கள்

Managing Director
Ebiz Consultancy Services
No. 15, Silva Lane,
Colombo-04
Sri Lanka

Mob: 0778767987, 0727766336, 0778781381
Email: ebizstars@yahoo.com
Web: www.ebiz-consultancyservices.com

### Personal Class

தரம் 3-A/L வரையான மாணவர்களுக்கு English Personal Class உம் Spoken with Grammar கற்றக விரும்புபவர்களுக்கு வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். (அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவை) தொடர்பு:- கொக்குவில் கிழக்கு, கொக்குவில். T.P:-0771372280

### அபூர்வ ஜோதிடம்

எலும்புகளைத் தீவிரமாகப் பாதிக்கும் வாதம், இரத்தக்குழாய்களைத் தாக்கும் நீரிழிவு, முட்டு, சிக்கலான கெற்ப வருத்தம் குணமாக்கும் மருந்தியல்:- தினமும் 8.30-2.00pm.

T.P:-0773212740.

உயரப்புல பிள்ளையார் கோயிலடி,
தாவல் பெட்டிக்கேனி, ஆனைக்கோட்டை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதல்வரின் பழிவாங்கும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உதயனை சபை வளாகத்துக்குள் கொண்டு வரக்கூடாது என்றோ பத்திரிகைக்கு விளம்பரங்கள் கொடுக்கக் கூடாது எனறோ எந்தப் பிரேரணையும் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்படவில்லை என்கிறார்கள் எதிரணியினர்.

அப்படி இருந்த போதும் தனது உத்தர வில் சபைத் தீர்மானத்தின்படியே இந்த உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன என்று முதல்வர் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தி உள்ளார்.

முதல்வரால் அதிகாரிகளுக்கு அனுப்பப் பட்ட உத்தரவுகளின் முழு விவரம் அதில் உள்ளவாறே இங்கு தரப்படுகிறது:-

சகல திணைக்கள மற்றும் பகுதித் தலைவர்களுக்கும்

*உதயன் பத்திரிகையைத் தடை செய்தல்*

கடந்த 05.04.2011 ஆம் திகதி யாழ். மாநகர சபையின் மாதாந்தப் பொதுக் கூட் டத்தின் தீர்மானத்தின் பிரகாரம் சபையின் வளாகத்தினுள் சபை நிர்வாகத்துக்குட்பட்ட சனசமூக நிலையங்கள், நூலகங்கள் உட்பட சகல அமைப்புக்களிலும் உதயன் பத்திரிகை வாங்குவதை இன்று முதல் உடனடியாக நிறுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*உதயன் பத்திரிகையைத் தடை செய்தல்*

கடந்த 05.04.2011 ஆம் திகதி யாழ். மாநகர சபையின் தீர்மானத்தின் பிரகாரம் சபையின் விளம்பரங்கள், அறிவித்தல்கள் என்பவற்றை உதயன் பத்திரிகைக்கு வழங்கு வதை இன்று முதல் உடனடியாக நிறுத்து மாறு கேட்டுக்கொள்கிறேன்.

முதலவர்
திருமதி யோ.பற்குணராஜா
மாநகர முதல்வர்
யாழ். மாநகர சபை
யாழ்ப்பாணம்

*(இரண்டு உத்தரவுகளுக்கும் ஒரே தலைப் புத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது) (உ-07)*

## கருத்துக்களைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போன்று செயற்பட்டு வருகின்றது. இதன் தலைவர் டக்ளஸ் தேவானந்தா கருத்துக்களை கருத்துக்களாலேயே எதிர்கொள்வோம் என்று அடிக்கொரு தடவை கூறிக் கொள் பவர். அவரது வழிகாட்டலில் இயங்கும் யாழ். மாநகர சபை முதல்வரோ உதயன் தெரிவித்த கருத்துக்களுக்காக அதனை மாநகர சபை வளாகத்துக்குள் கொண்டு வரக் கூடாது என்று தடை உத்தரவு பிறப் பித்துள்ளதுடன் விளம்பரங்களைக் கொடுக் கக்கூடாது என்றும் உத்தரவு பிறப்பித்துள் ளார்.

இவ்வாறு செயற்பட்ட போதும் செயற் படுகின்ற போதும் அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா, தாம் ஜனநாயகத்துக்காகப் பாடுப டும் ஒரு நபர் என்றும் தமிழர்களுக்கு ஜன நாயகத்தை மீட்டுக் கொடுத்தவர் என்றும் கூறி வருகின்றார்.

ஆனால், ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்று வர்ணிக்கப்படும் பத்திரிகை யின் சுதந்திரத்தை மறுத்துப் பழிவாங்கி அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டு அவரது கட்சியினர் செயற்படுவதைப் பார்த் துக்கொண்டு அவர் வளாவிருப்பது ஜன நாயகத்தைக் குழி தோண்டிப் புதைக்கும் ஒரு செயல் என்று யாழ்ப்பாணத்தின் கற்றறிந் தோர் கருத்துத் தெரிவித்துள்ளனர். (உ)

## ஈழ உணர்வை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியன எதிராக வாக்களித்தன.

அவசர காலச் சட்டத்தைத் தொடர்வதற் கான காரணங்களை விளக்கி பிரதமர் ஆற் றிய உரையில் அவர் தெரிவித்ததாவது:-

புனர்வாழ்வு முகாம்களில் புனர்வாழ் வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்களில் சிலர் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாடுகளில் இயங்கிவரும் புலி உறுப்பினர்கள் சிலர், புனர்வாழ்வின் பின் னர் விடுவிக்கப்பட்ட உறுப்பினர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்கள் மூல மாக மீண்டும் இங்கு ஒரு கிளர்ச்சியை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.

உலகத் தமிழர் பேரவை, பிரிட்டிஷ் தமிழர் பேரவை என்பவற்றுடன் மனித உரிமை ஆர்வலர்கள் என்ற பெயரில் ஒரு குழுவினரும் அனைத்துலக மட்டத்தில் இலங்கைக்கு எதிராகப் பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதுவரை இராணுவத்தினரால் விவரம் பெறமுடியாமல் இரகசியமாகச் செயல்படும் புலி உறுப்பினர்கள், தென்பகுதியில் மறைந்திருக்கும் தமது சகாக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி உள்ளனர். இந்த விடயத்தில் அனைத்துலக மட்டத்தில் இயங்கும் புலிகள் அமைப்பின் உளவுப் பிரிவினர் தீவிரமாகச் செயல்படுகின்றனர்.

அதேவேளை முன்னாள் புலி உறுப்பி னர்கள் 6,000 பேர் வரையிலானோர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 70 சத வீதமானவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக் கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள் புனர்வாழ்வு முகாம்களில் உள்ள அனைத்து முன்னாள் புலி உறுப்பினர்களும் விடுவிக் கப்படுவர்.

விடுவிக்கப்பட்ட முன்னாள் புலி உறுப் பினர்கள் அவர்களின் குடும்பங்களுடன் மீண்டும் இணைந்து இயல்பு வாழ்வுக்குத் திரும்ப வேண்டிய அனைத்து நடவடிக்கை களையும் அரசு எடுத்துள்ளது. எனினும் விடுதலை செய்யப்பட்டவர்கள் படையின ரின் தீவிர கண்காணிப்புக்கு உட்டுபடுத் தப்பட்டுள்ளனர்.

எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் பயங்கரவா தம் மீண்டும் தலை தூக்க நாம் அனுமதிக்க மாட்டோம் - என்றார் (உ-02)

## மனித உரிமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றுக்குப் பதிலளிக்கும்போதே அமைச் சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறவில்லை. மனித உரிமை மீறல் களில் புலிகள்தான் ஈடுபட்டனர். மக்களை வெளியேற விடாமல் புலிகளே தடுத்தனர். கட்டாய ஆயுதப் பயிற்சி அளித்து சிறுவர் களைப் படையில் சேர்த்தனர். உலகில் மிக மோசமான பயங்கரவாதிகளை ஒழித்து, நாட்டில் மக்கள் அமைதியாக வாழும் சூழ் நிலையை நாம் ஏற்படுத்தினோம்.

மனித உரிமை மீறல்கள் இடம்பெறாதமை யால் அது குறித்த சர்வதேச விசாரணை தேவையில்லை. நாம் உள்நாட்டில் கற்ற றிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்துள்ளோம். இந்தக் குழுவின் அறிக்கை கிடைத் தவுடன் மேற் கொண்டு எடுக்க வேண்டிய நடவ டிக்கைகள் குறித்து ஆராயப்படும்.

நாட்டில் சமாதா னத்தை ஏற்படுத்தி யதைத் தவிர நாம் வேறு எதையும் செய்யவில்லை. இலங்கையில் மனித உரிமை மீறல் கள் இடம் பெறுகின் றன என சில நாடு களும் அமைப்புக ளும் குற்றம் சுமத் துகின்றன. அது குறித்து எமக்குக் கவலையில்லை. அரசு சட்டப்படி நடந்துள்ளது.

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

மனித உரிமை கள் தொடர்பான பதிவுகளில் ஏற்ப டும் முன்னேற்றம், இறுதி யுத்தத்தின் போதான நிகழ்வு களுக்கு பதிலளிக் கும் விடயம் ஆகிய வற்றிலேயே இலங் கையுடனான எதிர் கால ஒத்துழைப்பு தங்கியுள்ளது என தெற்காசியா மற்றும் மத்திய ஆசிய விவ காரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்க உதவிச் செயலர் ரொபர்ட் ஓ பிளேக் தெரிவித் தார். (உ-சி)

## மரண அறிவித்தல்கள்

### சுந்தரமூர்த்தி சண்முகநாதன்



குமகுடை, பன்னாலை, தெல்லிப் பழையைப் பிறப்பிடமாகவும் ருத்திரா மாவத்தை, வெள்ளவத்தையில் வசித்து வந்தவருமான சுந்தரமூர்த்தி சண்முகநாதன் (ஓய்வுபெற்ற பிரதி ஆணையாளர், உள் நாட்டு இறைவரித் திணைக்களம்) நேற்று (07.04.2011) வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் பன்னாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி மற்றும் சின்னத்தங்கம் தம்பதியரின் ஏகபுதல் வனும், சாரதாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற உமாபதிதேவி(ஓய்வுபெற்ற ஆசிரியை) மற்றும் பார்வதி தேவி(ஓய்வுபெற்ற பதிவுவைத்தியர் R.M.O.), காலஞ் சென்ற கௌரிதேவி(ஓய்வுபெற்ற மருந்தாளர்) ஆகி யோரின் பாசமிகு சகோதரரு மாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடை பெறும். பின்னர் விவரம் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பன்னாலை,*
*தெல்லிப்பழை.*

*தகவல்:*
*சி.பார்வதிதேவி(சகோதரி)*

### ஞானப்பிரகாசம் எலிசம்மா(செல்லம்மா)



ஒட்டகப்புலத்தை பிறப்பிடமாகவும் மிருசுவிலை தற்காலிக வசிப்பிடமாக வும் கொண்ட எலிசம்மா (செல்லம்மா) காலமானார்.அன்னார் காலஞ்சென்ற பேதுறுப்பிள்ளை ஞானப்பிரகாசம் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர் களான சுவாம்பிள்ளை -ஆனாசிப் பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர் களான பெஞ்சமின்-ஞானமுத்து தம்பதியரின் மருமகளும், ஞா.அ.பாலசிங்கம் (இளைப்பாறிய ஊழியர் பலாலி ஆசிரிய காலாசாலை), காலஞ்சென்ற தனசிங்கம் மற்றும் குணசிங் கம்(கனடா), ஜெயசிங்கம், இராசசிங்கம் (ஜேர்மனி), திருமதி ஜெ.யோகமலர் ஆகியேரின் பாசமிகு தாயும் பா.ஞானமணி, த.பிலோமினா, கு.சித்திரா (கனடா), ஜெ.பொன்மணி, இ.பத்மா(ஜேர்மனி), க.ஜெயராசசிங்கம் (பாதுகாப்பு உத்தியோகத்தர் சிறீலங்கா ரெலிகொம், சாவகச்சேரி), ஆகியோரின் மாமியும் காலஞ்சென்றவர்களான பே.மரியமுத்து, பிலிப் ஆகியோரின் மைத்துனியும், காலஞ் சென்றவர்களான திருமதி சி.இரத்தினம் -சு.பஸ்ரியாம்பிள்ளை, இராயப்பு, பேரின்பநாயகம் -அமிர்தநாயகம், திருமதி து.பிலோ மினா ஆகியோரின் சகோதரியும் செல்வக்குமார், ஜெயந்தினி, ஞானக்குமார், மைதிலி, வதனி, றூபன், றாஜி, ரிமோஷன், ஜுட், ஜுடின், றஜிதா, றஜனி, றக்ஷி, காலஞ்சென்ற றோய் யில்ரன் ஆகியோரின் பேர்த்தியும் கரோலின், ஜெனிஷா, அஜித், எட்வின், விக்ரர் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (09.04.2011) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மிருசுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உசன்,*
*மிருசுவில்.*

*தகவல்:*
*பிள்ளைகள்.*

## உதைபந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

1984 - 1989 வரையான காலப்பகுதியில் இலங்கையில் அரசியல் குழப்பங்களை ஏற்படுத்தியது போன்று மீண்டும் ஏற்படுத் தும் வகையில் இந்திய அரசியல் தலைமை கள் நடந்து கொள்வதை உடன் நிறுத்த வேண்டும் என்று அவர் நேற்று நாடாளுமன் றத்தில் வலியுறுத்தினார்.

தமது நாட்டில் தேர்தலுக்காக இந்தியத் தலைவர்கள் குறிப்பாக தமிழ் நாட்டுத் தலைவர்கள் இலங்கையைப் பந்தாடி வரு கிறார்கள் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

''உங்கள் தேவைக்காக எங்களை உதை பந்து போல் பயன்படுத்தாதீர்கள் என்று காங் கிரஸ் கட்சி, பாரதீய ஜனதாக் கட்சி, திமுக, அதிமுக ஆகிய கட்சிகளிடம் நாம் கேட்டுக்கொள்கிறோம்'' - என்றார் அமைச்சர்.

## ரொபேட் ஓ பிளேக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கார அமைச்சு மறுத்துள்ளது.

''பிளேக்கின் கொழும்பு வருகைக்கான நாள் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பிரிட்டனில் பயணம் மேற்கொண்டுள்ள நிலையில், பிளேக்கின் பயணத்துக்கான நாள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு வருகிறது'' என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரி ஒருவரே, இலங்கை அரசின் வேண்டுகோளை அடுத்து பிளேக்கின் பய ணம் பிற்போடப்பட்டுள்ளதாக முன்னர் கூறியிருந்தார்.

பிளேக் இந்த வாரம் கொழும்பு வரத் திட்டமிட்டி ருந்தார்.

ஆனால் இலங்கைவெளிவிவ கார அமைச்சர் பீரிஸ் தனது பிரிட்டிஷ் பயணத்தை நீடித் துள்ளதால், அதைக் காரணம் காட்டி பிளேக்கின் வரு கையை தாமதப்ப டுத்துமாறு அரசு கேட்டிருந்தது.(உ)

## மீசாலைப் பெண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாணம் சிறைக்கு மாற்றப்பட்டார்.

அவரை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துவதற்கான ஏற்பாடுகள் நேறறு சாவகச்சேரி நீதிமன்றில் மேற்கொள்ளப் பட்டிருந்தன. எனினும் நிரந்தர நீதிவான் ஒருவர் இல்லாத காரணத்தால் அடையாள அணிவகுப்பு எதிர்வரும் 12ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

சாந்தினியின் கொலை தொடர் பாக அவரது முன்னாள் கணவன், கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனச் சாரதி, சாந் தினியின் சகோதரனின் மனைவி ஆகி யோர் ஏற்கனவே விளக்க மறியலில் வைக் கப்பட்டுள்ளனர்.

(உ-ஜ-207)

**டொல்பின் விற்பனைக்கு**

தொ.பே:-அ.[illegible]

தொலைபேசி. இல:-077-8952197

## ஈழத் தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

''சோனியா காந்தி, இலங்கைத் தமிழர்க ளின் உரிமைகளை உறுதிசெய்ய இலங்கை யில் அரசமைப்புத் திருத்தம் கொண்டுவரப் படவேண்டும் என்றும் அதற்கு இந்தியா அழுத்தம் கொடுக்கும் என்றும் தெரிவித் தார். இது குறித்து அரசின் நிலைப்பாடு என்ன?'' என்று செய்தியாளர் கேள்வி எழுப் பினர். அதற்கே அமைச்சர் மேற்கண்டவாறு பதிலளித்தார். (உ-சி)

## விக்னாவின் கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் எழுதுவினைஞராகக் கடமையாற்றும் செல்வி கோமளாவின் அன்புத் தாயார்

### தெய்வேந்திரம் சரஸ்வதி

அவர்களின் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சி யடைகின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது குடும் பத்தினருக்கும் அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**விக்னா கல்வி நிறுவனம்**
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

## அந்தியேட்டி, சபிண்டீகரண அழைப்பு



கடந்த 09.03.2011 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவர்

### அமரர் ஆறுமுகம் கணபதிப்பிள்ளை

அவர்களின் அந்தியேட்டிக் கிரியை கள் இன்று(08.04.2011) வெள்ளிக் கிழமை காலை 6.00 மணிக்கு அன் னாரின் இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து சபிண்டீகரணக் கிரியைகளும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நடைபெறும். இந்த நிகழ்வுகளி லும் மற்றும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இடைக்குறிச்சி மேற்கு,
வரணி.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பானில் நேற்றும் பாரிய நிலநடுக்கம்

ஜப்பானில் நேற்று இரவு 7.4 ரிச்டர் அளவு நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. அதையடுத்து ஜப்பானின் வடபகுதியில் சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. சுமார் ஒரு மீற்றர் உயரமான சுனாமி அலைகள் எதிர்பார்க்கப்படுவதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மியாகிப் பிராந்தியத்தில் கடலுக்கடியில் 25 கிலோமீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கத்தால் தலைநகர் டோக்கியோவிலுள்ள கட்டடங்களும் அதிர்ந்தன.

கடந்த மாதம் 9.0 ரிச்டர் அளவிலான நிலநடுக்கத்தினாலும் அதைத் தொடர்ந்து இடம்பெற்ற சுனாமியினாலும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலேயே நேற்றும் நிலநடுக்கம் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலநடுக்கத்தை அடுத்து புகுஷிமா டாய்ச்சி அணு உலையிலிருந்து ஊழியர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். (த)

# அரசு - கூட்டமைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொண்டார். அவருடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.ஏ. சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அரச தரப்பில் அமைச்சர் நிமால் ஸ்ரீ பால டீ சில்வா, நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன ஆகியோர் பங்குபற்றினர்.

இந்தச் சந்திப்புக் குறித்து சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தவை வருமாறு:-

வவுனியா முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகளின் விடுதலை தொடர்பாக இந்த பேச்சின்போது அதிக கவனம் செலுத்தப்பட்டது.

முன்னாள் போராளிகளின் விவரங்களை மக்கள் பார்வைக்கு வெளியிடுவதாக அரசு முன்னர் எம்மிடம் தெரிவித்திருந்தது. எனினும் அது நடைபெறவில்லை. இதனை நேற்றைய பேச்சின் போது அரச தரப்பிடம் சுட்டிக்காட்டி னோம்.

இதனை அடுத்து வவுனியா தடுப்பு முகாம்களில் உள்ளோரின் விவரங்களை, வவுனியாவில் உள்ள வவுனியா இராணுவ முகாமுக்கு தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு உறுப்பினர்கள் நேரில் சென்று பார்வையிடு வதற்கு அரசு இணக்கம் தெரிவித்தது. இதன் அடிப்படையில் எதிர்வரும் 16ஆம் திகதி நானும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனும் அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தனவுடன் வவுனியாவுக்கு நேரடியாகச் சென்று அந்தப் பட்டியலை பார்வையிடவுள்ளோம். அவற்றை சரி பார்த்தபின் பொது மக்களின் பார்வைக்காக அது வைக்கப்படும்.

அத்துடன் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 850க்கும் மேற்பட்ட அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாகவும் அரச தரப்புடன் பேசினோம்.

இந்தக் கைதிகளின் விவரங்கள் அவர்களுடைய குற்றச்சாட்டின் தன்மைக்கேற்ப தரம் பிரிக்கப்பட்டு வருவதாக எம்மிடம் தெரிவிக்கப்பட்டது.

அடுத்துவரும் சில வாரங்களில் அவர்களில் குற்றமற்றவர்களை விடுதலை செய்யவேண்டும் எனவும், குற்றவாளிகளாக இனம்காணப்பட்டோரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த வேண்டும் எனவும் அவர்களை ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையின் அடிப்படையில் விடுவிக்க வேண் டும் எனவும் நாம் அரசிடம் கோரினோம். இதனைச் சாதகமாகப் பரிசீலிப்பதாக அரச பிரதிநிதிகள் எம்மிடம் உறுதியளித்தனர்.

வன்னியில் திருமுறிகண்டி, முள்ளி வாய்க்கால் கிழக்கு, முள்ளி வாய்க்கால் மேற்கு ஆகிய இடங்களில் மிதி வெடி அபாயம் உள்ளதாக அரச பிரதிநிதிகள் எம்மிடம் குறிப்பிட்டனர். எனினும் அங்கு மிதிவெடி அபாயம் இல்லை எனவும் அந்தப் பகுதிக்கு நாம் சென்று வந்தோம் எனவும் அப்பகுதி யில் 115 குடும்பங் கள் மீளக்குடியமர முடியாமல் உள்ளன என்றும் அவர்களுக்குச் சுட்டிக் காட்டினோம்.

அத்துடன் பொத்துவில், திருகோணமலை, மன்னார், மூதூர், யாழ்ப்பாணம், வன்னி ஆகிய பகுதிகளில் மேலும் பல குடும்பங்கள் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தப்படாமல் உள்ளதையும் அவர்களிடம் கூறினோம்.

கூட்டமைப்புடனான அடுத்த சுற்றுப் பேச்சு எதிர்வரும் 29ஆம் திகதி நடைபெறும் எனவும் அதற்கு முன்னர் மேற்குறித்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண நடவடிக்கை எடுப்பதாகவும் அரச பிரதிநிதிகள் தெரிவித்தனர் - என்றார். (த)

**கிறிஸ்ரல் சென்ரர்**
**நெல்லியடி**

*S.L.E.A.S பரீட்சைக்கு*
*கிரகித்தல் வகுப்பு*
திங்கள் காலை 9.00 - 12.00 வரை (11-04-2011)
திரு. மகாலிங்கசிவம்
**பொது உளச்சார்பு**
வெள்ளி பி.ப 3.00-6.00 மணிவரை
திரு. தவசேகர் (15.04.2011)
பட்டதாரி போட்டிப் பரீட்சைக்கான வகுப்புகள் விடுமுறை நாள்களில் மேலதிக வகுப்புகள் நடத்தப்படுகின்றன.
**O/L DAY CLASS பிரிவு - II**
ஆரம்பம்:- 09.04.2011 மு.ப 7.00 மணி
*பிரத்தியேக கணித வகுப்பு*
சனி, ஞாயிறு (9.04.2011 ஆரம்பம்)
O/L - காலை 7.00 - 8.00 --- தரம் 10 - காலை 8.00 - 9.00
தரம் 9 - காலை 9.00 - 10.00
பிரிவு - II
O/L திங் + புதன் + வெள்ளி காலை 5.30 - 6.30
ஆசிரியர்:- K. *யோகேந்திரன்.*

**வாகனம் வாடகைக்கு**

10½' கன்ரர் வாகனம் 3000kg ஏற்றக் கூடியது வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு:-021 2227892, 0773604101

**யாழ்ப்பாணம் மற்றும் நெல்லியடியில் வகுப்புக்கள் ஆரம்பம்**

**Diploma in Mobile Phone Repairing**
(Software & Hardware Repairing)
(பல புதிய விடயங்களுடன்)
*(With Practical Electronic)*
சகலவகையான கைத்தொலைபேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார்கற்கை நெறி !!!
வகுப்பு ஆரம்பம் - 09/04/2011 நேரம்11மணி காலம் 2 மாதங்கள் -
உங்கள் பதிவுகளை உடன் மேற்கொள்ளவும் !!
விபரங்களுக்கு :- UNI - ICT CAMPUS
No - 83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862

**Invitation**

**A Hundred Voice Choir on Uduvil's 187th year**

A choral celebration of hundred voices will be a special feature at the service of Praise and Thanksgiving on *Friday 8th April, 2011, 4.30 p.m.* for the life of Harriet Winslow, Founder Principal, Uduvil Girls' College.



Your presence and prayers at this service will be greatly appreciated.

Principal,
Staff and Students.

**PHYSICS**
K. SELVAN B.SC (Hons)
GROUP CLASSES
TAMIL, ENGLISH MEDIUM
*2011, 2012, 2013, REP.*
அரசடி வீதி,கந்தர் மடம். Tel:- 021-2229047

**A/L 2011 & DAY CLASS**
மாணவர்களுக்கான இறுதிச் சந்தர்ப்பம்
கணக்கீடு
A.P.பகீரதன் B.B.A (FM spl.)
கிரயக் கணக்கீடு
Sat, Sun - 11.00 - 12.00pm
பங்குடமை முதல் கணக்கு
Sat, Sun - 2.00.- 3.30pm
கம்பனிக் கணக்கீடு
Sat, Sun - 3.30.- 4.30pm
ஆரம்பம்
09/04/2011(சனி)
NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

**வெளிவந்துவிட்டது**
புலமைப்பரிசில் - 2011
* பரீட்சை வழிகாட்டி ----------- 2011 (வே. அன்பழகன்)
* இலகு ஏஞ்சல் -------------- 2011 (ந. சந்திரகுமார்)
* குறிஞ்சி ------------------ 2011 (றிசானா ஹிம்லி)
* புலமைப் பரிசில் வழிகாட்டி --- 2011 (எஸ். உதயச்சந்திரன்)
**அன்னை புத்தகசாலை**
சாவகச்சேரி --- யாழ்ப்பாணம். ANNAI SHOW ROOM
2270003 --- 222 9881

**SLEAS போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு**
இடம்:- கலைவாணி கல்வி நிறுவனம்.
மானிப்பாய் வீதி, கோப்பாய்.
காலம்:- 09.04.2011 சனிக்கிழமை காலை - 08.00.
கல்வித்துறைசார் நிபுணர்கள், விரிவுரையாளர்கள், கல்வியியலாளர்கள் ஆகிய வளவாளர்களின் வழிகாட்டலில் தொடர்ச்சியாக வகுப்புகள் நடைபெறவுள்ளது.
*கலந்துகொள்ள விரும்புவோர்*
* நேரடியாகவும் பதிவுகளை மேற்கொள்ளலாம்.
★0777030947 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளவும்.

**யூனிவேர்சல் கந்தர்மடம்.**
Tam: திரு.குழந்தை, திரு.சிவா
Log: திரு.கமல்தாசன்
H.cu: திரு.ஜெயக்குமார்
P.sc: திரு.செந்தூரன்
Geo: திரு.கரன்
His: திரு.தாஸ்
Dra: திரு.சுகந்தன்
Acc: திரு.தவா
Eco: திரு.சண்
B.st: திரு.பிரதீபன்
A/L 2011, 2012, 2013, DAY CLASS, PAPER CLASS
புதிய அனுமதிகள்
தனிப்பாட அனுமதிகள்

**VACANCIES**
**உடனடி வேலை வாய்ப்பு**
எமது நிறுவனத்தில் பணியாற்றுவதற்கு பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான, தகுதியும் அனுபவமும் உடைய ஆண் / பெண் இருபாலாரிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
1) கணினி விரிவுரையாளர்கள்.
2) கணினி போதனாசிரியர்கள்.
ஆர்வமுடையோர் நேரில் வரவும். கவர்ச்சிகரமான சம்பளம். நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
தென்மராட்சியைத் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
Manager,
UTHAYAN IT ISLAND GATEWAY CENTER
New Market Building, Chavakachcheri.
021- 227 0323, gatewaychk@sltnet.lk.

**A/L 2013**
NEC
கலை, வர்த்தகப் பிரிவு - 2
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

**பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை**
எமது நிறுவனத்தில் பாதுகாப்பு சேவையில் கடமையாற்றுவதற்கு 25-60வயதுக்கு உட்பட்ட ஆண் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை.
தகைமையுள்ளவர்கள் நற்சான்றுப் பத்திரங்களுடன் நேரில் உடன் வரவும்.
பொது முகாமையாளர், உதயன் பத்திரிகை நிறுவனம், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**Quick Learning Course**
**Spoken English with Grammar**
Duration 1 Month
Rs. 3000.00
உரையாடல் பயிற்சிகள், பேச்சுப் பயிற்சிகள், உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய **Audio & Video visuals** மூலமாக நடாத்தப்படுகிறது
A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்
திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special
18-04-2011
Batch 14 : 09.00 AM - 01.00 PM
Batch 15 : 01.30 PM - 05.30 PM
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna. ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913/0714299935
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன்கூட்டியே நீங்கள் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் ஏற்ற நேர அட்டவணையை தெரிவு செய்து வீண் விரயத்தை தவிர்க்கவும்.

**MYWay English** இன் ஆசிரியர்,அலுவலர், வங்கியாளர், மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்
காலம் : சனி, ஞாயிறு – 3 மாதம் கட்டணம் : ரூபா 8000/- மட்டும்
பிரிவுகள் : காலை 8-9, 9-10, 10-11, 11-12 மாலை 1-2, 2-3, 3-4, 4-5, 5-6
உயர்கல்வி மாணவர்களுக்கான சிறப்பு சலுகைக் கட்டணம்
இம்மாதம் 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் பயிற்சியில் சேரும் பல்கலைக்கழக மாணவர்கள், GAQ, HNDA, BIT, Academy உட்பட உயர்கல்வி கற்போர் மற்றும் பட்டம் பூர்த்திசெய்தோருக்கு கட்டணம் ரூபா 3000/- மட்டும்
குறிப்பு : பாடசாலைகள் அலுவலகங்கள் வங்கிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட Discount Coupon இனைப்பயன்படுத்தியும் சலுகைக்கட்டணத்தை பெறலாம்
**MyWay English** 182 - 1/5, Stanley Road, Jaffna
Tel : 021 2229505 077 33 63 456

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.04.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org